# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 தை 14 வெள்ளிக்கிழமை (28.01.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 063


International Year of CHEMISTRY 2011

14 இரசாயனவியல் ஆண்டாக 2011



16 தலைவலிக்குத் தீர்வு



20 பின்னடையும் அமெரிக்கா



24 அதிக விக்கெட் வீழ்த்தியவர்கள்



25 நடால் அதிர்ச்சித் தோல்வி

# யாழ்ப்பாணத்தில் அரச தரப்பு 'அவுட்'

## வேட்புமனுக்கள் அனைத்தும் நிராகரிப்பு

கொழும்பு, ஜனவரி 28

யாழ். தேர்தல் தொகுதிக்குள் அடங்கும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள 19 உள்ளூராட்சிச் சபைகளுக்கு, ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புச் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்கள் அனைத்தும் நேற்று நிராகரிக்கப்பட்டன. வேட்பு மனுக்களில் காணப்பட்ட பெயர்க் குழப்பம் காரணமாகவே வேட்பு மனுக்கள் நிராகரிக் கப்பட்டன என்று யாழ்.மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார். தமது மனுக்கள் நிரா கரிக்கப்பட்டதை எதிர்த்துத் தமது கட்சி நீதிமன்றத்துக்குச் செல்லும் என்று அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார். (27 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழரசுக் கட்சியின் 2 மனுக்கள் நிராகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன.28

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி, பச்சிலைப் பள்ளி ஆகிய பிரதேச சபைகளுக்காக தமிழ ரசுக் கட்சி நேற்றுமுன்தினம் தாக்கல் செய்யப் பட்ட வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந் திரன், எஸ்.சிறீதரன் (27 ஆம் பக்கம் பார்க்க)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் 4 கட்சிகள்; ஒரு சுயேச்சை

முல்லைத்தீவு, ஜன.28

முல்லைத்தீவு மாவட்டத்தில் 4 பிரதேச சபைக் கான தேர்தலில் ஏழு கட்சிகளும் ஒரு சுயேச்சைக் குழுவும் போட்டியிடுகின்றன.

துணுக்காய், கரைத்துறைப் பற்று, புதுக்குடி யிருப்பு, மாந்தை மேற்கு ஆகிய பிரதேச சபைகளுக் குத் தேர்தல்கள் இடம்பெறவுள்ளன.

தமிழரசுக்கட்சி, ஐ.தே.கட்சி ஆகிய நான்கு சபைகளுக்கும் பொதுமக்கள் ஐக்கிய மக்கள் முன் னணி, நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீரங்கா தலைமை யிலான பிரஜைக் கட்சி ஆகியன மூன்று சபைகளுக் கும் போட்டியிடுகின்றன. (27 ஆம் பக்கம் பார்க்க)

# 2002 போன்று இம்முறையும் ஐ.தே.க. பெருவெற்றியீட்டும்

## கரு நம்பிக்கை தெரிவிப்பு

கொழும்பு, ஜன.28

2002 இல் இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சி 97சதவீத வெற்றியைப் பெற்றது போல் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களி லும் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிபெறும் என்று அக்கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

உள்ளூராட்சி சபைத் (27 ஆம் பக்கம் பார்க்க)

# 5 அரசியல் கட்சிகள் கிளிநொச்சியில் போட்டி

யாழ்ப்பாணம், ஜன.28

யாழ்.தேர்தல் மாவட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் மூன்று சபைகளுக்கான தேர்தலில் ஐந்து அரசியல் கட்சிகள் போட்டியிடுகின்றன.

கரைச்சி, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிர தேச சபைகளுக்கு தேர்தல் நடைபெறுகின்றது.

கரைச்சிப் பிரதேச சபைக்கு தமிழரசுக் கட்சி, ஐ.தே.கட்சி, ஜே.வி.பி. ஆகியவும் -

பூநகரிப் பிரதேச சபைக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய னவும் -

பச்சிலைப்பள்ளி பிரதேச (27 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்நாட்டுக்கு செல்கிறார் ஜயலத்

கொழும்பு, ஜன.28

யுத்தம் காரணமாக இந்தியாவுக்குச் சென்று அகதி முகாம்களில் தங்கியிருக்கும் இலங்கை அகதிகளின் நிலைமையை நேரில் கண்டறிவ தற்கு, ஐ.தே.கட்சியின் மனித உரிமைகள் தொடர் பான உதவிச் செயலாளர் டாக்டர் ஜயலத் ஜயவர்த் தன எம்.பி. எதிர்வரும் 31ஆம் திகதி தமிழ்நாடு செல்கிறார்.

இந்த விஜயத்தின் போது தற்போது தமிழ்நாடு அகதி முகாம்களில் தங்கியிருக்கும் இலங்கை அக திகளின் பிரச்சினைகளை நேரில் கேட்டறிவதோடு, அவர்களின் சுகதுக்கங்களையும் விசாரிப் பார்.

அவர்களுக்கு ஆதரவு (27 ஆம் பக்கம் பார்க்க)

# போரினால் இடம்பெயர்ந்தோர் பல்வேறு நெருக்கடிகளுக்குள்

## அவர்களுக்கு உதவ வேண்டும் என்கிறார் ஐ.நா. அதிகாரி

கொழும்பு, ஜன. 28

யுத்தத்தால் இடம்பெயர்ந்து மீள்குடி யமர்த்தப்பட்ட மக்களது மனிதாபிமானத் தேவைகள் மற்றும் அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியுள்ளன. அவர் கள் தொடர்ந்தும் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வருகின்றார்கள்- என்று ஐக் கிய நாடுகளின் மனிதாபிமான விவகாரச் செயலாளரும், அவசர நிவாரணப் பிரதி இணைப்பாளருமான கதரின் பிராக் தெரிவித் தார்.

ஐ.நா.வின் மனிதாபிமான விவகாரச் செயலர் அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். இதன்போது அவர் புதுக்குடியிருப்பு உட்பட மீள்குடியேற்றப் பிர தேசங்களுக்குச் சென்று அங்குள்ள மக்க ளின் நிலைமையை நேரில் அவதானித்தார். இந்த நிலையில் (27 ஆம் பக்கம் பார்க்க)

# கண்ணிவெடிகள் அகற்றப்பட்டும் மக்கள் குடியேற அனுமதியில்லை

## ஐ.நா. உறுதிப்படுத்த வேண்டும் என்கிறார் யாழ். தளபதி

கொழும்பு, ஜன. 28

யாழ். மாவட்டத்தில் 12 கிராம சேவகர் பிரிவுகளில் கண்ணி வெடிகள் அகற்றப்பட்டுள்ளன எனக் கண்ணிவெடிகளை அகற் றுவதற்குப் பொறுப்பான ஐ.நா. அமைப்பு உறுதிப்படுத்திய பின் னரே மக்களை மீளக்குடிய மர்த்து வதற்குப் பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கும்.

- இப்படி யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துரு சிங்க நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

பன்னிரண்டு கிராம சேவ கர் பிரிவுகளில் கண்ணி வெடிகள் அகற்றப்பட்டுள்ள மையால், அங்கு மக்களை மீளக்குடியமர்த்த அனுமதி வழங்கும்படி யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார் மேஜர் ஜெனரல் ஹத்துரு சிங்கவிடம் கோரிக்கை விடுத்திருந்தார். இதுதொடர்பாகக் கேட்டபோதே மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் இதுபற்றித் தெரி விக்கையில் கூறியவை வரு மாறு:- (27 ஆம் பக்கம் பார்க்க)

# உள்ளூராட்சித் தேர்தல் மார்ச் 19 ஆம் திகதி

கொழும்பு, ஜன. 28

நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்குமான உள்ளூராட்சிச் சபை களின் தேர்தல்கள் மார்ச் மாதம் 17 ஆம் திகதி நடைபெறும் என்று தேர்தல் செயலகம் நேற்று அறிவித்துள்ளது.

நேற்று நண்பகல் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்வது நிறை வடைந்துள்ளது.


நாட்டில் உள்ள 331 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் நடத்துவதற்கான வேட்பாளர் பட்டியல் தாக்கல் செய்யும் திகதி நேற்றுடன் முடிவடைந்த நிலையில் பிரதான கட்சிகளின் வேட்பு மனுக்கள் பல இடங்களை நிராகரிக்கப்பட்ட நிலையிலும் எதிர் வரும் மார்ச் மாதம் 17 ஆம் திகதி தேர்தல்கள் நடைபெறும் என தேர்தல்கள் செயலக ஆணைளாளர் அறிவித்துள்ளார். (த-10)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு

ஆசிரியபீடம்: 021 2229933
தொலைநகல்: 021 2229944
செய்திப்பிரிவுகள்:
021 5679933
021 5679944
விளம்பரம்: 021 5671111
விநியோகம்: 021 5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




யாழில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படுவதுடன் வவுனியாவில் இடிமின்னலும் ஏனைய மாவட்டங்களில் மழைக்குமான 20% சாத்தியம் உள்ளது.

COLOMBO STOCK EXCHANGE

பங்குச்சந்தை @ யாழ்ப்பாணம்
தை 27, 2011
பங்குச்சந்தைச் சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 7211.11↓
மிலங்கா(MPI) 7195.82↓
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 4116.13Mn
பங்குகளின் அளவு(No.) 137.76Mn
வியாபாரம்(No.) 28505
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
சூட் கோப் 769.90
பி சி கவுஸ் 30.50
ஜெ எல் மொறிசன் 1576.40
ரேடியன்ற் ஜெம்ஸ் 48.00
கஸ்ரெர்னர் 120.90
குறைவு(Top 5 losers) - விலை Rs.
எஸ் எம் பி லீசிங் (W) 0.70
சிங்கர் இண்டஸ்ரீஸ் 162.10
எல்பிரிய பிளான்ரேசன் 41.10
சிடபிள்யு.எம்.மகி 105.20
வொறுவ பினான்ரேசன்ஸ் 63.70
மேலதிக தகவல்கள்- www.cse.lk

# பெரும் எண்ணிக்கையில் வேட்பு மனு நிராகரிப்பு

## கட்சிகளின் சிறு தவறுகளே காரணம்

கொழும்பு, ஜன.28

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கலின் போது பிரதான அரசியல் கட்சிகள் செய்த சிறு சிறு தவறுகள் காரணமாக பெரும் எண்ணிக்கையான வேட்புமனுக்கள் நேற்று நிராகரிக்கப்பட்டுள்ளன. உள்ளூராட்சி தேர்தலுக்கான வேட்பு மனுக்களைத் தாக்கல்செய்வதற்கான இறுதிநாள் நேற்று நண்பகலுடன் முடிவடைந்தது.

பிரதான கட்சிகள் தமது வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தபோதும் அவற்றில் காணப்பட்ட தவறுகள் காரணமாக அவை நிராகரிக்கப்பட்டுள்ளன என உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் எம்பிலிப்பிட்டிய பிரதேச சபைக்காக ஐ.தே.கட்சி, ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகிய பிரதான இரு கட்சிகளும் தாக்கல் செய்த மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. வெலிக்காபொலவில் ஐ.தே.கட்சியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டது.

கொழும்பு மாவட்டத்தில் ஹோமகம பிரதேச சபைக்கு ஐ.தே.கட்சியினால் தாக்கல் செய்யப்பட்ட மனு நிராகரிக்கப்பட்டது.

காலி மாவட்டத்தில் அக்மீமன பிரதேச சபைக்கு ஆளும் கட்சி தாக்கல் செய்த மனுவும் பட்டேகம பிரதேச சபைக்கு ஐ.தே.கட்சி தாக்கல் செய்த மனுவும் நிராகரிக்கப்பட்டுள்ளன.

மொனராகலை மாவட்டத்தில் மொனராகலைப் பிரதேச சபை, ஷியம்பாபல்துவ பிரதேச சபை ஆகியவற்றில் ஆளும் கட்சி தாக்கல் செய்த மனு நிராகரிக்கப்பட்டது.

குருநாகல் மாவட்டத்தில் பொல்காவல பிரதேச சபையில் ஆளும் கட்சி தாக்கல் செய்த மனு நிராகரிக்கப்பட்டது.

கேகாலை மாவட்டத்தில் வரக்காபொல பிரதேச சபையில் ஐ.தே.கட்சி தாக்கல் செய்த மனு நிராகரிக்கப்பட்டது.

மாத்தளை மாவட்டத்தில் வெல்கமுவ பிரதேச சபை, பல்லிபொல பிரதேசசபை ஆகியவற்றில் ஆளும் கட்சியின் மனுவும் வெல்கமுவ பிரதேச சபையில் ஜே.வி.பி. தாக்கல் செய்த மனுவும் உகுவெல பிரதேச சபையில் ஸ்ரீ முஸ்லிம் காங்கிரஸ் தாக்கல் செய்த மனுவும் நிராகரிக்கப்பட்டுள்ளன.

கண்டி மாவட்டத்தில் ஜட்டி நுவர பிரதேச சபைக்கு ஆளும் கட்சி தாக்கல் செய்த மனு கட்சியின் பெயரில் சுதந்திரம் என்ற சொல் இல்லாமையால் நிராகரிக்கப்பட்டது. அக்குறனை பிரதேச சபையில் ஸ்ரீ. முஸ்லிம் காங்கிரஸ் தாக்கல் செய்த மனு நிராகரிக்கப்பட்டது.

நுவரெவலியா மாவட்டத்தில் நுவரெலியா பிரதேச சபை, லிந்துளை, தலவாக்கலை ஆகிய நகர சபைகளில் ஆளும் கட்சி தாக்கல் செய்த மனு நிராகரிக்கப்பட்டது.

புத்தளம் மாவட்டத்தில் நாத்தாண்டியா பிரதேச சபைக்கு ஜே.வி.பியினர் தாக்கல் செய்த மனு நிராகரிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர் பிரதேச சபையில் ஐ.தே. கட்சியின் மனு நிராகரிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி, பூநகரி பிரதேச சபையில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

மொழிபெயர்ப்புத் தவறுகள், சமாதான நீதிவானின் உறுதிப்படுத்தல் இன்மை, தேவைப்படும் வேட்பாளர் எண்ணிக்கைகளைப் பூர்த்தி செய்யாமை, வேட்பாளர்கள் கையொப்பம் இடாமை போன்ற தவறுகளாலேயே இந்த மனுக்கள் நிராகரிக்கப்பட்டதாக உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (உ-10)

## திருமலையில் 30 வேட்பு மனுக்கள் நிராகரிப்பு

திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் போட்டியிடுவதற்கு 108 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இவற்றில் 30 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, திருகோணமலை மாவட்டத்தில் இலங்கை தமிழரசு கட்சி மற்றும் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி ஆகியவற்றின் வேட்பு மனுக்களும் நிராகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஒன்றுகூடல்

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை ஊழியர் நலன்புரி சங்கத்தின் ஒன்றுகூடல் நிகழ்வு நாளை சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்குவைத்தியசாலை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கலந்துகொள்வார். (த-207)

## இராணுவ தலைமையகக் காணி 100 கோடி டொலருக்கு விற்பனை

இரண்டு முதலீட்டுத் திட்டங்களை ஆரம்பிப்பதற்காக காலிமுகத்திடலில் பாதுகாப்பு அமைச்சும் இராணுவத் தலைமையகமும் அமைந்துள்ள காணியை 100 கோடி டொலர்களுக்கு விற்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதற்கமைய பாதுகாப்பு அமைச்சு, இராணுவத் தலைமையகம், பாதுகாப்புப் பிரதானியின் அலுவலகம் மற்றும் உத்தியோகபூர்வ இல்லங்கள் அனைத்தும் பத்தரமுல்லக்குக் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த விற்பனை சம்பந்தமாக ஜனாதிபதி அமைச்சரவைக்கு சமர்ப்பித்த பிரேரணையை கடந்த செவ்வாய்கிழமை அமைச்சரவை அங்கீகரித்துள்ளதாக அரசாங்கத் தகவல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேற்குறிப்பிட்ட காணி இரண்டு வெளிநாட்டு முதலீட்டுத் திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

## இரு கோஷ்டிகளுக்கு இடையே கஹவத்தையில் துப்பாக்கிச் சமர்

### முதலாவது தேர்தல் வன்முறை; ஒருவர் படுகாயம்

கொழும்பு, ஜன. 28

கஹவத்தை அந்தான பிரதேசத்தில் இரு கட்சிகளின் ஆதரவாளர்களுக்கிடையில் நேற்றுக் காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

படுகாயமடைந்தவர் இரத்தினபுரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

மின்சக்தி மற்றும் மின்வலு பிரதியமைச்சர் பிரேம்லால் ஜயசேகரவின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆதரவாளர்களுக்கும், சுயேச்சையாகப் போட்டியிடும் குழுவொன்றின் ஆதரவாளர்களுக்குமிடையிலேயே இந்த மோதல் ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மோதலால் அமைச்சருக்குச் சொந்தமான இரு வாகனங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. பலர் காயமடைந்திருக்கலாம் எனவும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

மோதல் சம்பவம் தொடர்பில் இரு குழுவினரும், கஹவத்தை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். ஒவ்வொரு குழுவும் மற்றக் குழுதான் முதலில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது என்று குற்றஞ் சாட்டியுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

எதிர்வரும் மார்ச் மாதம் 17 ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில் இடம்பெற்ற முதலாவது தேர்தல் வன்முறைச் சம்பவம் இதுவாகும்.

கஹவத்தைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-11)

### முஸ்லிம் காங்கிரஸ்

## வேட்பாளர் தெரிவின்போது வாக்குவாதம், கைகலப்பு

கொழும்பு, ஜன. 28

அம்பாறை மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களைத் தெரிவுசெய்யும்போது ஆதரவாளர்களிடையே கைகலப்புகளும், வன்முறைச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

வேட்பாளர்களைத் தெரிவுசெய்யும் நடவடிக்கை நேற்று நள்ளிரவு முதல் அதிகாலை வரை துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான ஒலுவில் கட்டடத்தின் வளாகத்தில் இடம்பெற்றது. இங்கு பெருந்திரளான ஆதரவாளர்கள் குவிந்திருந்தனர்.

இந்நிலையில் பொத்துவில் பிரதேசத்தைச் சேர்ந்த மு.கா. ஆதரவாளர்களின் குழுக்கள் இரண்டினிடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இது இறுதியில் கைகலப்பாக மாறியது.

ஏற்கனவே, அம்பாறை மாவட்டதிலுள்ள உள்ளூராட்சி சபைகளுக்குரிய வேட்பாளர்களுக்கான நேர்முகப் பரீட்சை நாடாளுமன்ற உறுப்பினர்களான எச்.எம்.எம்.ஹரீஸ் மற்றும் பைசால் காசீம் ஆகியோரின் தலைமையில் நடந்து முடிந்தது.

இந்நிலையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் மீண்டும் இந்தத் தேர்வினை நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-11)

# நிகழ்வுகள்

## நாளை

### சேவைநலன் பாராட்டு விழா

கரவெட்டிப் பிரதேச உத்தியோகத்தர்களின் வருடாந்த ஒன்றுகூடலும் சேவை நலன் பாராட்டு விழாவும் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

இந்த நிகழ்வுக்கு கரவெட்டிப் பிரதேச.செயலகத்தில் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்கள், பதவி உயர்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்கள், இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்கள் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்த நிகழ்வுக்கான ஏற்பாடுகளை வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர் நலன்புரிசங்கம் மேற்கொண்டு வருகின்றது. (ற-319)

### பழைய மாணவர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன.28

கிளிநொச்சி, பளை மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் [illegible] தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்துக்கு அனைத்துப் பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-313)

### கதை சொல்லும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன.28

யாழ். பொது நூலக சிறுவர் பகுதியில் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணி முதல் மு.ப.10.30 மணிவரை கதைசொல்லும் நேரம் என்னும் தொனிப்பொருளில் கதைசொல்லும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு 6 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களும், பெற்றோர்களும் கலந்துகொள்ளலாம் என யாழ். பொது நூலகத்தின் பிரதம நூலகர் எஸ். தனபாலசிங்கம் அறிவித்துள்ளார். (ற-311)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். தேர்தல் மாவட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வதற்கு நேற்று யாழ். செயலகத்துக்கு வருகை தந்த தமிழரசுக் கட்சியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் ஆகியோர் ...

# யாழ்ப்பணத்தில் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டதற்கான காரணம்

யாழ்.தேர்தல் மாவட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தலுக்குத் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்கள் சில நிராகரிக்கப்பட்டன.

அவற்றுக்கான காரணங்கள் வருமாறு:-

* ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் 16 நியமனப் பத்திரங்கள் அக்கட்சித் தேர்தல் ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பட்டியலில் உள்ளடக்கப்படவில்லை என்று நிராகரிக்கப்பட்டது.

* நவசமசமாஜக்கட்சி நியமன பத்திரத்துடன் சத்தியப் பிரமாணங்களும் இளம் வேட்பாளர்களுக்கான சத்தியக்கடதாசிகளும் சமர்ப்பிக்கப்படவில்லை. இதனால் நிராகரிக்கப்பட்டது.

* சாவகச்சேரி நகரசபை வேட்பு மனுவில் ஐயாத்துரை குணரத்தினம் தலைமையிலான சுயேச்சைக் குழு நியமனப் பத்திரத்தில் குழுத் தலைவர் ஒப்பமிடாமையால் நிராகரிக்கப்பட்டது.

* வேலணை பிரதேச சபையில் நவரத்தினம் தர்மேந்திரன் தலைமையிலான சுயேச்சைக் குழுவின் பத்திரத்தில் சமாதான நீதிவானின் ஒப்பம் இல்லாத காரணத்தால் நிராகரிக்கப்பட்டது.

* சாவகச்சேரி பிரதேச சபையில் கந்தன் பசுபதி தலைமையிலான சுயேச்சைக் குழுவின் நியமனப் பத்திரத்தில் குழுத் தலைவர் ஒப்பமிடாததன் காரணமாக நிராகரிக்கப்பட்டது.

(ஐ-14-9)

# அம்பாறை மாவட்டத்தில் 53 மனுக்கள் நிராகரிப்பு

கொழும்பு, ஜன.28

அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் போட்டியிடுவதற்கு 164 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இவற்றில் ஐந்து அரசியல் கட்சிகளினதும் 48 சுயேச்சை குழுக்களினதும் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

சம்மாந்துறைப் பிரதேச சபைக்கு இலங்கை தமிழரசு கட்சியினால் தாக்கல் செய்த வேட்பு மனு நிராகரிக்கப்பட்டுள்ள அதேவேளை, ஈழவர் ஜனநாயக முன்னணியினால் (ஈரோஸ்) காரைதீவு, திருக்கோவில் மற்றும் ஆலையடிவேம்பு போன்ற பிரதேச சபைகளில் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்களும் தெஹியத்தகண்டியில் ஜனசெத பெரமுனவினால் தாக்கல் செய்த மனுவும் நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அக்கரைப்பற்று மாநகர சபை, அம்பாறை நகர சபை, சம்மாந்துறை, பொத்துவில், அட்டாளைச்சேனை, நிந்தவூர், இறக்காமம், அக்கரைப்பற்று, திருக்கோவில், நாவிதன்வெளி, ஆலையடிவேம்பு, காரைதீவு, தெஹியத்தகண்டிய, பதியத்தலாவ, மகாஓயா, தமன, நாமல்ஓயா, உகண மற்றும் லகுகல ஆகிய பிரதேச சபைகளுக்களுக்கான தேர்தலில் 182 உறுப்பினர்கள் தெரிவு செய்ய அங்கீகரிக்கப்பட்ட ஏழு அரசியல் கட்சிகளும், 100க்கும் மேற்பட்ட சுயேச்சைக் குழுக்களும் களமிறங்கியுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சி மாவட்டத்தில் 19 உள்ளூராட்சி மன்றங்களும், அக்கரைப்பற்று மாநகர சபை, அக்கரைப்பற்று பிரதேச சபை தவிர்ந்த அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி போட்டியிடுகின்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அக்கரைப்பற்று மாநகர சபை, அக்கரைப்பற்று, சம்மாந்துறை, பொத்துவில், அட்டாளைச்சேனை, நிந்தவூர், இறக்காமம், நாவிதன்வெளி, காரைதீவு ஆகிய பிரதேச சபைகளுக்கும், தேசிய காங்கிரஸ் அக்கரைப்பற்று மாநகர சபை மற்றும் அக்கரைப்பற்று பிரதேச சபை அகியவற்றில் போட்டியிடுகின்றது.

இலங்கை தமிழரசுக் கட்சி பொத்துவில், திருக்கோவில், நாவிதன்வெளி, ஆலையடிவேம்பு, காரைதீவு ஆகிய பிரதேசசபைகளிலும், மக்கள் விடுதலை முன்னணி அம்பாறை நகர சபை, சம்மாந்துறை, இறக்காமம், தெஹியத் தகண்டிய, பதியத்தலாவ, மகாஓயா, தமன, நாமல்ஓயா, உகண மற்றும் லகுகல ஆகிய பிரதேச சபைகளுக்கும் போட்டியிடுகின்றது.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி நாவிதன் வெளி, திருக்கோவில், ஆலையடிவேம்பு மற்றும் காரைதீவு ஆகிய பிரதேச சபைகளுக்கும் போட்டியிடுகின்றது. (த)

## ஒதுக்கப்பட்ட சின்னங்கள்

எதிர்வரும் மார்ச் மாதம் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடவுள்ள கட்சிகளினதும், சுயேச்சைக் குழுக்களினதும், சின்னங்கள் வருமாறு:-

* இலங்கை தமிழரசுக் கட்சி - வீடு
* ஐக்கிய தேசியக் கட்சி - யானை
* மக்கள் விடுதலை முன்னணி - மணி
* ஐக்கிய சோஸலிச முன்னணி - முச்சக்கர வண்டி
* பருத்தித்துறை நகர சபை வேலன் நவரத்தினம் தலைமையிலான சுயேச்சைக் குழு - றோஸ் அப்பிள்
* சாவகச்சேரி நகர சபை அ.செல்லையா தலைமையிலான சுயேச்சைக்குழு - அன்னாசி
* சாவகச்சேரி பிரதேச சபை க.ஆறுமுகம் தலைமையிலான சுயேச்சைக்குழு - மான்
* வல்வெட்டித்துறை நகர சபை கு.மோகனகுமார் தலைமையிலான குழு - கணினி
* வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை. க. கணேசராஜன் தலைமையிலான குழு - ஆமைப்பூட்டு
* பருத்தித்துறை பிரதேச சபை து.தங்கவேலாயுதம் தலைமையிலான சுயேச்சைக்குழு - மாம்பழம். (ஐ-9-14)

# வேட்பாளர்கள் தெரிவில் உள்கட்சி மோதல்; தேர்தலில் இருந்து விலகினார் அங்கஜன்

யாழ். மாவட்ட உள்ளூராட்சித் தேர்தல்களில் வேட்பாளர் தெரிவில் உள்கட்சி மோதல் ஏற்பட்டுள்ளது. இதன் எதிரொலியாகச் சுதந்திரக்கட்சியின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளர் இ.அங்கஜன் தேர்தலில் இருந்து விலகியிருப்பதாக அறிவித்துள்ளார்.

உள்ளூராட்சிச்சபை தேர்தல்களில் போட்டியிடுவதில்லை என்ற முடிவுக்கான காரணத்தை விளக்கி அவர் விடுத்துள்ள அறிக்கையின் விவரம் வருமாறு:-

குடாநாட்டில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி சபை தேர்தல்களில் நாம் போட்டியிடுவதில்லை எனத் தீர்மானித்துள்ளது குறித்து எனதும் என்னைச்சார்ந்தவர்களினதும் நிலைப்பாட்டை தமிழ் மக்களுக்கு தெரியப்படுத்துவது இச்சந்தர்ப்பத்தில் முக்கியமானது எனக் கருதுகின்றேன்.

என்னைப் பொறுத்தவரையில் யுத்தம் மற்றும் பல்வேறு காரணங்களால் மிகவும் பாதிக்கப்பட்டு நொந்துபோய் இருக்கின்ற தமிழ் மக்களுக்கு அபிவிருத்தி, வேலை வாய்ப்பு, கல்வி மற்றும் வாழ்வாதார முன்னேற்றம் ஆகியவையே தற்போதைய தருணத்தில் முக்கியமானவை என்று கருதுகின்றேன். குறிப்பாக இளைஞர், யுவதிகளுக்கான வேலை வாய்ப்பு மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அபிவிருத்தி என்பவற்றில் அரசியல்வாதிகள் அக்கறை கொண்டு செய[illegible] வேண்டிய தேவை இருப்பதாக நான் நம்புகின்றேன்.

என்னுடைய இந்த நம்பிக்கைக்கு முன்னுரிமை அளித்து, ஜனாதிபதி அவர்களின் நேரடி வழிகாட்டலின் கீழ் இவற்றுக்கான பல் வேறு முயற்சிகளையும் வேலைத் திட்டங்களையும் செய்து வரு கின்றேன். இந்தப் பணியில் குறிப்பிட்டத்தக் களவுக்கு சாதித்துக் காட்டுவதே என்னுடைய தற்போதைய பிரதான நோக்கமாகும். ஆதலால் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை முக்கியமானதாக நாம் கருதவில்லை.

வெறுமனே அதிகாரத்தையும் பதவியையும் பெற்றுக் கொள்வதற்காக [illegible] வதற்கான பிரயத்தனங்களை விடுத்து, இளைஞர், யுவதிகளினது வேலைவாய்ப்பு மற்றும் அபிவிருத்தி ஆகிய பணிகளில் தொடர்ந்தும் ஜனாதிபதி அவர்களின் நேரடி வழகாட்டலின் கீழ் ஈடுபடுவதே சாலச் சிறந்தது என்று நம்புகின்றேன். இதனை கருத்திற்கொண்டு நானும் என்னைச் சார்ந்தவர்களும் நடைபெறவிருக்கும் யாழ் மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளின் தேர்தல்களில் போட்டியிடுவதில்லை என்று தீர்மானித்துள்ளோம்.

என்னுடைய நிலைப்பாடு, நான் தேர்தல் மீது நம்பிக்கை அற்றவன் என்றோ அல்லது தேர்தல் மூலமான அதிகாரங்கள் மூலம் மக்களுக்குச் சேவை யாற்ற முடியாது என்று நம்புபவன் என்றோ அர்த்தம் அல்ல. அரசியலின் ஊடாக மக்களுக்கு குறிப்பிட்டத்தக்களவு சேவையாற்றிக் காட்டியதன் பின்னர் மக்களிடம் தேர்தலுக்காக வாக்கு கேட்பதே சிறந்த அரசியல் என்று நம்புகின்றேன். மக்கள் இதனைத் தான் எதிர்பார்க்கிறார்கள் என்பதை நான் கடந்த நாடாளுமன்ற தேர்தலில் புரிந்து கொண்டேன்.

எதிர்வரும் தேர்தல் குறித்து என்னுடைய நிலைப்பாட்டை எனது குடாநாட்டு மக்கள் புரிந்துகொள்வார்கள் என்றும் ஏற்றுக்கொள்வார்கள் என்றும் நம்புவதுடன் தொடர்ந்தும் எனது அரசியல் பணிகளுக்கு தமது பூரண ஆதரவை வழங்குவார்கள் என்றும் எதிர்பார்க்கின்றேன் என்றுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்றுநோயாளருக்கான சேவையில்....

புற்றுநோயால் பாதிக்கப்பட்டோர்களுக்கு மறு வாழ்வு அளிக்கும் முகமாக அவர்களுக்கான இலகுவான சிகிச்சை முறைகளை தனிப்பட்ட ரீதியில் வழங்கி வருகின்றது ''கேன்''எனப்படும் யாழ்ப்பாணப் புற்று நோயாளர் காப்பகம். மனிதாபிமானமிக்க பல்வேறு சமூகத் தொண்டர்களின் உந்துதலால் வடக்குக் கிழக்கு மக்கள் பயன்பெறும் பொருட்டு இக்காப்பகம் உருவாக்கப்பட்டது. இக்காப்பகத்தின் ரம்மியமான சூழல் நந்த வனச் சோலையாகக் காட்சி தருகின்றது.

2006 ஆம் ஆண்டு ஜனவரி 28ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்ட இக்காப்பகத்தில் பெண்கள் விடுதி, ஆண்கள் விடுதி தனித்ததனியாகவும் நோயாளர்கள் பொழுது போக்குவதற்கான கட்டடத் தொகுதிகள், பிரார்த்தனை மண்டபம் போன்றன அமைந்துள்ளன.

சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியிலிருந்து 100 மீற்றர் தூரத்தில் அமையப்பெற்றுள்ள இக்காப்பகத்தின் ஐந்தாம் ஆண்டு நிறைவு நாள் இன்றாகும்.

லண்டன் கேன் நிறுவனத்தின் நிதியுதவியுடன் இயங்கிவரும் இக் காப்பகத்துக்கு ஏனைய நாடுகளில்



இருந்தும் மனிதாபிமானமிக்க சமூக ஆர்வலர்களாகிய ஈழத் தமிழர்கள் பலரால் மாதாந்தம் நிதியுதவிகள் கிடைக்கப்பெறுகின்றன. உணவு, தங்குமிடவசதி, மருந்துச் சேவை ஆகியவற்றை நோயாளர் உட்பட பராமரிப்பாளர்களுக்கும் இலவசமாகவே இத்தொண்டு நிறுவனம் வழங்குகின்றது.

தமது இல்லங்களில் பராமரிப்பு எதுவும் பெற்றுக்கொள்ள முடியாமல் அநாதரவாக உள்ள நோயாளிகளுக்கும் வறுமை காரணமாக மேலதிக சிகிச்சைகளைப் பெற முடியாமல் ஒதுங்கி இருக்கும் நோயாளிகளையும் முன்னிலைப்படுத்தி சிகிச்சைகளைத் தகுதி வாய்ந்த புற்றுநோய் வைத்தியர் எ.யோகராஜா வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

புற்றுநோய் நாள்பட்ட நோய் என்பதால் இது தொடர்பான விழிப்புணர்வு பலரிடத்தில் இல்லை. தற்போதைய காலகட்டத்தில் அனைவருக்கும் புற்றுநோய்கள் ஏற்பட வாய்ப்புக்கள் இருப்பதாக வைத்தியர்கள் பலர் கருத்துத் தெரிவிக்கின்றார்கள். இந்த வகையில் தற்போது இக்காப்பகத்தில் கிளிநொச்சி, திருகோணமலை, வவுனியா, யாழ்ப்பாணம் உட்பட இந்த மாவட்டங்களில் இருந்து தினமும் 15 இற்கும் மேற்பட்டோர் தொடர்ந்து சிகிச்சைகளைப் பெறுவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள்.

> **புற்று நோயாளருக்கான தன்னலமற்ற சேவையை வழங்கி இன்றுடன் ஐந்தாம் ஆண்டு நிறைவு காண்கிறது 'கேன்' புற்று நோயாளர் காப்பகம்.**

இவற்றில்வன்னி மாவட்டத்தில் இருந்து அதிகளவானோர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்கள். தற்போது சிகிச்சை பெறுபவர்களில் மல்லாவி, கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 9 நோயாளிகள் சிகிச்சை பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

புற்றுநோய் தொடர்பாக பயிற்றுவிக்கப்பட்ட விசேடமான தாதியர்கள் மூவர் உட்பட நான்கு உதவியாளர்களும் இங்கு சேவையாற்றி வருகிறார்கள். இரவு பகல் என நோயாளர்களுக்கான மருத்துவச் சேவையினை மனம் சலிக்காமல் வழங்கும் இவர்களது பணி. ஏனைய நோயாளிகளும் இங்கு தங்கி இருந்து சிகிச்சை பெற விரும்புவதாக நாட்டம் கொள்கிறார்கள்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டோர் தமது இறுதிக் கால கட்டத்தில் உள ரீதியாகப் பாதிப்படையாமல் ஆத்ம திருப்திகொள்ள வேண்டும் என்ற நோக்குடன் சமூக ஆர்வலர்கள் சிலரால் உருவாக்கப்பட்ட இக்காப்பகத்தின்- "கேன்" நிறுவனத்தின் ஒருங்கிணைப்பாளரும் முகாமையாளருமாக வைத்திய கலாநிதி என்.சிவராஜாவும், செயலாளராக திருமதி கமலா அருணாசலமும் கடமையாற்றுகின்றார்கள்.

அத்துடன் வைத்திய கலாநிதி என்.தவக்குமார், வைத்திய கலாநிதி ரி.பேரானந்தராஜா, சட்டத்தரணி எம்.தியாகராஜா, ஆறு.திருமுருகன், வைத்திய கலாநிதி என்.தங்கராஜா பணிப்பாளர் சபையில் உள்ளனர்.

பொது முகாமையாளரான நித்தியானந்தன் அவர்களது ஆளுமையான செயற்பாட்டினால் நோயாளரும்



பணியாளரும் ஒன்றிணைந்த கூட்டுக் குடும்பம்போல் தமது சேவையினை ''கேன்'' நிறுவனம் வழங்கி வருகின்றது. அதைவிட இந்நிறுவனத்தில் மாணவர்கள் ஏனையோர் புற்றுநோய் பற்றி அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக சனிக்கிழமைகளில் மருத்துவபீட மாணவர்களால் விளக்கவுரைகள் வழங்கப்படுகின்றன.

இவ்வாறு சமூகத்துக்கு அர்ப்பணிப்பாக சிறப்பான தொண்டினை ஆற்றிவரும் ''கேன்'' நிறுவனம் ஐந்தாம் ஆண்டு நிறைவு நாளில் இன்று தடம் பதித்துள்ளது.

நோயாளிகள் தமது வீட்டில் எவ்வாறு இருப்பார்களோ அதைவிட மேலதிகமாக மனநிம்மதியுடன்

*நிஷா*

தமது இறுதிக் காலத்தை இங்கு கழித்து வருகின்றார்கள். அத்துடன் நோயாளி மரணமடையும் சந்தர்ப்பத்தில் சடலத்தைப் பொறுப்பேற்க யாரும் இல்லாத பட்சத்தில் அவர்களுக்குத் தேவையான இறுதிக் கிரியைகளை மத வேறுபாடின்றி நிறைவேற்றி வருகின்றார்கள்.

புற்றுநோயாளர் மேலதிக சிகிச்சைகளைப் பெற வேண்டி ஏற்படின் கொழும்பு வைத்தியசாலைக்கு அனுப்பி சிசிச்சைகளைப் பெறுவதற்கு சகல வசதிகளும் செய்து கொடுக்கிறது இந்நிறுவனம்.

இறுதிக் காலத்தில் நோயின் பிடியில் சிக்கி அல்லற்படும் நோயாளருக்கு இக்காப்பகம் அடைக்கலாம் கொடுப்பதால் இதுபோன்ற ஏனைய சமூக ஆர்வலர்களிடம் இருந்தும் மனிதாபிமான உதவிகளை பெற்றுக் கொள்வும் இந்நிறுவனம் தயாராக உள்ளது. 'கொடுத்தார்க்குக் குறைவில்லை' என்பதுபோல தமது வளங்களை உரிய முறையில் நல்வழியில் சென்றடைய இக்காப்பகத்தின் பணி மேலும் தொடரட்டும்.

**B.B.A தென் கிழக்குப் பல்கலைக் கழகம் (ஒலுவில்) வெளிவாரி**

* A/Lஇல் முழுமையான சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆவர்.
* மேற்படி கற்கை நெறியினை தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மேற்கொள்ள முடியும்.
* விரிவுரைகள் ஆரம்பம் 29.01.2011 காலை 8மணி.

விவரங்களுக்கு: **நிர்வாகி**, புதிய உயர்கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

## விண்ணக வாழ்வின் மூன்றாண்டு நினைவலைகள்

மண்ணுலகில் 15 ★ 07 ★ 1976



விண்ணுலகில் 31 ★ 01 ★ 2008

**அமரர் பொன்னுத்துரை கிருஷ்ணகுமார்**
(வருமான பரிசோதகர், நல்லூர் பிரதேசசபை)

நல்லவராக, வல்லவராக, சிறந்த செயல்வீரராக,
பொறுமையின் பொக்கிஷமாய், அன்புக்கு அணிகலமாய்,
பாசத்தின் பிறப்பிட மாய்,எங்கள் வாழ்வின் ஒளி விளக்காய்
இறந்த எங்கள் கண்ணா, எங்கள் குலவிளக்கே எங்களைத் தவிக்கவிட்டு
மூன்று ஆண்டுகாலம் ஓடினாலும் நீங்காது உம் நினைவலைகள்
எங்கள் மனதில் இருந்து அகலவில்லை.
எங்கள் உயிருள்ளவரை மறக்க முடியாமல் இருக்கிறது.
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து இன்று வானுறையும் தெய்வமாகிவிட்ட
எங்கள் கண்ணா! தங்கள் ஆத்மா சாந்தி அடைய
எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி, ஓம் சாந்தி, ஓம் சாந்தி

அப்பா, அம்மா, மனைவி, மகள்,
சகோதரர்கள், மைத்துனர்கள்,
மாமாமார்,மாமிமார், சித்தப்பா, சித்தி.

*நீதிமன்ற வீதி,*
*மல்லாகம்.*
*(109915)*

## வீதியின் நில அறை மூடி விலகியதால் விபத்து ஏற்படும் அபாயம்

வண்ணை, ஜன. 28

குருநகர், மவுண்கார்மேல் வீதியில் குடிதண்ணீர் விநியோகக் கட்டுப்பாட்டுக் கருவி பொருத்தப்பட்டுள்ள நில் அறை மேல் மூடி விலகி உள்ளதால் பெரும் விபத்துக்கள் எதிர்நோக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ்-பிரதான வீதியால் மவுண் கார்மேல் வீதிக்குத் திரும்பும் சந்திப் பகுதியிலேயே இத்தகைய அனர்த்தம் விளைவிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

திருத்த வேலைக்காக மேற்படி மூடியை விலக்கியவர்களின் பொறுப்பற்ற அசமந்தச் செயல்களால் இரவு வேளை மட்டுமல்லாது பகல் வேளைகளிலும் வானகங்களின் சில்லுகள் இந்த இடுக்கில் செருகி விபத்துகள் ஏற்படும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

(201-160)

**தேவை**

நெல்லியடியில் ஆரம்பிக்கப்படவுள்ள எமது நிறுவனத்தில் பணிபுரிவதற்கு ஆங்கில அறிவுள்ள பெண்பிள்ளை தேவை.

**நியூ நெல்சன் லேணர்ஸ்**
இல. 89, கண்டி வீதி, சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 4527

**வீடு வாடகைக்கு உண்டு**

5 அறைகளும் 2 Hall உம் கொண்ட புதிதாகத் திருத்தப்பட்ட சகல வசதிகளுடன் கூடிய வீடு சாவகச்சேரியிலிருந்து 1Km தூரத்தில் கண்டி வீதியில் வாடகைக்கு உண்டு.
நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
வாகனங்கள் நிறுத்தக்கூடிய [illegible]
[illegible]

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்
**றோயல் குளுக்கோஸ்**
100%சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
**றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்**
PACKED BY:
ROYAL Industries
Colombo 12, T.P 0777277670
அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா
நறுமணப்
பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**இலவசம்**
அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!
எம்மிடம் 18 டசின் றோயல் குளுக்கோசினைக் கொள்வனவு செய்து 1000 ரூபாய் பெறுமதியான அழகிய வர்ண ரீ-சேட் ஒன்றினை முற்றிலும் இலவசமாய் பெற்றுக்கொள்ளவும்.

## நீங்காத நினைவில் வருடங்கள் மூன்று



தோற்றம்:
14.01.1953

மறைவு:
01.02.2008

அமரர்
**கிறிஸ்தோபர் கொலின் தேவராசா**
( வரி மேற்பார்வையாளர்,
நல்லூர் பிரதேசசபை)
திதி: 28.01.2011
(அபரபக்க தசமி)

*ஓடியனவே வருடங்கள் மூன்று*
*ஓயவில்லை உங்கள் நினைவுகள்*
*நாடியதுவோ உங்கள் மனம்*
*நாதனடியே தஞ்சம் தான் என்று?*
*தேடியதுதான் எம்மனம் உங்களை*
*தாங்கவே முடியாது தவிக்கிறோம் இன்றும்!*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

''திருப்பதி''
கே.கே.எஸ்.வீதி,
இணுவில்.
*(109972)*

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## மாற்றமுறும் விழுமியங்களும் தமிழர் சமுதாயமும்

புதுவிதமானதொரு கலாசாரத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது தமிழர் சமுதாயம். இந்த நகர்வை உன்னிப்பாக அவதானிப்பவர்களுக்கு இரண்டு விதமான கருத்துக்கள் தோன்றக்கூடும்.

ஒன்று, இதுவரை காலமும் முன்னோர்களால் கட்டிக் காத்துவரப்பட்ட விழுமியங்கள் எல்லாம் சிறிது சிறிதாகக் கரைந்தும், தேய்ந்தும் அழிந்து போகக்கூடியவாய்ப்புக்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. அதனால் புதிய அறிவு சிந்தனைகளைக் கொண்ட சமுதாயம் ஒன்று இங்கே உருவாகப் போகின்றது. அது பெரும்பாலும் சீரற்ற - அநாகரிகம் மிக்க - தமிழர் பண்பாடுகளுக்கு மாறானதாகவும் இருந்துவிடலாம். அவ்வாறான மாற்றமும் வளர்ச்சியும் இங்கு தேவைதானா என்பதாகக் கொள்ளலாம்.

இரண்டாவது, மனித சமுதாயத்தில் மாற்றம் என்பது தவிர்க்க முடியாத ஒன்று. காட்டில் வாழ்ந்த விலங்கு நிலையிலிருந்து இன்றைய அறிவு சார்ந்த சமுதாயங்களாக மனித இனம் வளர்ந்து சிறந்து காணப்படுவதற்கு அவர்களை அவ்வப்போது ஆட்கொண்ட மாற்றங்களே காரணம்.

எனவே மாற்றங்களை எதிர்ப்பதோ, ஒதுக்கித் தள்ளுவதோ குறுகிய காலத்துக்கே பலனளிக்கும். நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் சமுதாய மாற்றம் என்பது சாசுவதமானதே. ஆனால் மாற்றங்களை வளர்ச்சியடைந்த, அறிவு சார்ந்த சமுதாயங்கள் சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்பவும் ஏற்கனவே பேணப்படும் விழுமியங்களை தற்காத்துக் கொள்ளவும் தூரப்பார்வையோடு ஏற்றுக் கொள்கின்றன. அவ்வாறு ஏற்றுக் கொள்பவை நின்று நிலைத்து புதிய - மற்றும் புதுமையான பண்பாடுகளாக மலர்ந்து விடுகின்றன. இதனை கலாசார மீள் எழுச்சி என்று கூறலாம்.

இந்த இரண்டுவிதத் தன்மைகளில் எதனையும் மக்கள் ஏற்று நிலை நிறுத்திக்கொள்ளப் போகிறார்கள் என்பது காலம் தான் காட்டித்தர வேண்டும்.

ஏ-9 பாதை திறக்கப்பட்ட கையோடு தென்னிலங்கையிலிருந்து யாத்திரிகர்களும், உல்லாசப் பயணிகளும் திமுதிமுவென்று வந்து போகத் தொடங்கியிருக்கிறார்கள். அவர்களுடன் அவர்களின் பண்பாடுகளும், நடைமுறைகளும் இங்கு வந்து செல்கின்றன. அவைகளில் நல்லவையும் இருக்கலாம். தீயவையும் இருக்கலாம். அப்படி என்ன நல்லவை என்று கேட்பீர்களானால் ஒன்றை இங்கு சுட்டிக் காட்டலாம். இங்கு வந்த ஒரு சிங்களக் குடும்பத்தினர் தமிழ்க் குடும்பம் ஒன்றுடன் சில நாள் தங்கியிருந்தார்கள். இருசாராரும் உணவு மற்றும் உரையாடல்களை மிகவும் அன்னியோன்னியமாக பரிமாறிக் கொண்டார்கள். அவர் கள் திருப்பிச் செல்ல வேண்டிய கட்டம் வந்ததும் பெரியவர்கள் எல்லாம் தமிழ்க் குடும்பத்தினருக்கு நன்றியும் வணக்கமும் கூறிக்கொண்டு புறப்பட்டவேளை அவர்களில் இளைஞர்கள் - தென்னிலங்கையில் பெரிய தொழில்களில் இருப்பவர்களும் கூட தமிழ்க் குடும்பத்தினரில் முதியவர்களின் கால்களில் குனிந்துத் தொட்டு வணக்கம் கூறிக் கொண்டு புறப்பட்டார்கள். ஆச்சரியமாக இருக்கிறதல்லவா?

இந்தப் பண்பாடு நம் மத்தியிலேயும் முன்னொரு காலத்தில் இருந்தது. இப்பொழுது மறைந்து விட்டது. வெளிநாட்டுப் பயணங்களும், பண வரவுகளும் இவை போன்ற பண்பாடுகளை நம்மிடத்திலிருந்து தொலைத்துவிட்டன. இளைஞர்கள், முதியவர்களை மதிக்கும் பண்பாட்டை காண்பதே அரிதாகப் போய்விட்டது. கல்விமான்களை அறிஞர்களை மதிப்பதெல்லாம் நம் மத்தியிலிருந்து மலையேறிவிட்டன. மறுக்க முடியுமா?

விரைவில் ரயில் சேவை வரப்போகிறது. இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் கப்பல் சேவை தொடங்கப் போகிறது. இவை மட்டுமல்ல இன்னும் எத்தனையோ மாற்றங்கள் வரப்போகின்றன.

இந்திய துணைத்துதரகம் யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்டு அண்மையில் இந்திய குடியரசு தினம் அங்கு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அமெரிக்க தகவல் நிலையத்தை அந்நாட்டு தூதுவர் அண்மையில் யாழ்ப்பாணத்தில் திறந்து வைத்தார். நோர்வே நாட்டின் ஆதரவில் விரைவில் இசை விழாவொன்று நடைபெறப்போவதாக அறிவிக்கப் பட்டுள்ளது. தென்னிலங்கையுடனான குடாநாட்டின் பயணத் தூரத்தை குறைக்கும் வகையில் சங்குப்பிட்டி கேரதீவுப் பாலம் அண்மையில் திறந்து வைக்கப் பட்டுள்ளது.

இவையெல்லாம் குடாநாட்டில் ஏற்படப்போகின்ற மாற்றங்களுக்கு - அபிவிருத்திகளுக்கு கட்டியம் கூறுபவை.

பல்கலைக்கழகத்தின் புதிய பல துறைகளை உருவாக்க அறிஞர்கள் யோசித்து வருகிறார்கள்.

வெளிநாட்டு மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் உள்வாங்கப்படுவதற்கும் ஆலோசிக்கப்படுவதாகத் தெரிகின்றது. யாழ்.பல்கலைக்கழகத்துக்கும் பிறநாட்டுப் பல்கலைக்கழகங்களின் ஆராய்ச்சித்துறைகளுக்கும் இடையில் பலமாற்றங்கள் முன்னரைவிட அதிகமாக இடம்பெறக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன.

பத்திரிகைத்துறை ஊடகத்துறைகளில் பாரிய மாற்றங்கள் தோன்றி வருகின்றன. நம் இளைஞர்கள் பிறநாடுகளுக்குச் சென்று பயிற் சிகள் பெற்று வரவும் வெளிநாட்டு நவீன தொழில்நுட்பங்களை கற்று முன்னேறுவதற்கும் சந்தர்ப்பங்கள் உருவாகி வருகின்றன.

இவைகளுக்கு மத்தியில் அரசியல் துறையிலும் புதிய மாற்றங்கள், புதிய சிந்தனைகள் தோன்ற வேண்டிய காலம் உருவாகியுள்ளது.

பலவீனமுற்ற சமூகங்களை வலிமை பெற்ற சமூகங்கள் அடக்கி ஒடுக்கி மேலாதிக்கம் புரிய எத்தனிப்பதெல்லாம் வருங்காலத்தில் அருகிப் போகலாம் இல்லாமலும் போகலாம். மனித உரிமை மீறல்களை உலகம் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கமாட்டாதென்பதை சமீப கால சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

காலம் மாறிக் கொண்டே இருக்கின்றது. அதனால் சிந்தனைகளும் மாறிக்கொண்டே இருக்கின்றன. எனவே நாகரிக விழுமியங்களும் மாறவே செய்யும். இதனையே "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவில...." என்று நம் முன்னோர் கூறினார்கள். வரப்போகும் மாற்றங்களுக்கேற்ப, அவைகளை சரியான முறையில் எதிர் கொள்ள தமிழர் சமுதாயம் ஆயத்தமாக வேண்டிய காலம் தோன்றியிருப்பதாகக் கருதலாமா?

## அம்பாறை மாவட்ட வேட்பாளர் தெரிவில் மு.கா. ஆதரவாளர்களிடையே மோதல்

அம்பாறை, ஜன.28

அம்பாறை மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் நடவடிக்கையில் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அதிகாலைவரை ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது, அங்கு கூடியிருந்த ஆதரவாளர்களிடையே கைகலப்புகளும் வன்முறைச் சம்பவங்களும் இடம் பெற்றன.

துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான ஒலுவில் கட்டட வளாகத்தில் மேற்படி தெரிவு நடவடிக்கை இடம்பெற்றது.

இதன்போது வேட்பாளர் ஆசனங்களைப் பெறும்பொருட்டு அங்கு திரண்டிருந்தவர்களின் ஆதரவாளர்கள் சிலர் வன்முறையில் ஈடுபட்டனர்.

குறிப்பாக, பொத்துவில் பிரதேசத்தைச் சேர்ந்த மு.கா. ஆதரவாளர் குழுக்கள் இரண்டினிடையே ஏற்பட்ட வாக்குவாதம் இறுதியில் மிக மோசமான கைகலப்பாக மாறியது.

இதேவேளை, அங்கு கூடியிருந்த மற்றுமொரு குழுவினர் அவர்களின் ஊர் சார்பாகப் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் தொடர்பில் அதிருப்தி கொண்டதையடுத்து அங்கிருந்த கதவு மற்றும் கண்ணாடிகளை உடைத்தனர்.

ஏற்கனவே, அம்பாறை மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்குரிய வேட்பாளர்களுக்கான நேர்முகத் தேர்வுகள், நாடாளுமன்ற உறுப்பினர்களான எச்.எம்.எம். ஹரீஸ் மற்றும் பைசால் காசிம் ஆகியோரின் தலைமையில் நடந்து முடிந்த நிலையிலேயே, மு.கா. தலைவர் மீண்டும் இந்தத் தேர்வினை நடத்தினார். (ம)

## நீதியாகத் தேர்தலை நடத்தி கௌரவமாக ஓய்வு பெறுங்கள்

### தேர்தல் ஆணையாளரிடம் ஐ.தே.க. கோரிக்கை

கொழும்பு, ஜன.28

நீதியானதும் நியாயமானதுமான முறையில் எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துமாறு தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திசாநாயக்கவிடம் ஐ.தே.க. கோரிக்கை விடுத்துள்ளது.

இதன் மூலம் அவர் கௌரவமாக ஓய்வு பெற முடியும் என ஐ.தே.க. தெரிவித்துள்ளது.

இம்முறை நீதி, நியாயமாக தேர்தலை நடத்துவதன் மூலம் தேர்தல் ஆணையாளர் கடந்த காலங்களில் ஏற்பட்ட கறைகளை நீக்கிக் கொள்ள முடியும் என இன்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஐ.தே.க. பிரதித்தலைவர் கரு ஜயசூரிய கூறியுள்ளார். (ம)

## சமூக வாழ்வில் 55 வீதமான முன்னாள் போராளிகள்

### புனர்வாழ்வு ஆணையாளர் தகவல்

கொழும்பு, ஜன. 28

புனர்வாழ்வு பயிற்சிகளில் ஈடுபட்டிருந்த முன்னாள் போராளிகளில் 55 வீதமானவர்கள் வெற்றிகரமாகத் தமது பயிற்சிகளை முடித்து சமூக வாழ்வில் இணைந்து கொண்டிருக்கிறார்கள். ஆரம்பத்தில் பதினோராயிரத்து அறுநூறுக்கும் மேற்பட்ட முன்னாள் போராளிகள் புனர்வாழ்வுப் பயிற்சிகளில் ஈடுபடுவதற்கு இணங்கியிருந்தார்கள்.

புனர்வாழ்வு, சிறைச்சாலை மறுசீரமைப்பு ஆணையாளர் எஸ்.ரணசிங்க விடுத்திருக்கும் செய்திக் குறிப்பொன்றில் இத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் போராளிகளை சமூகத்தில் மீளவும் இணைத்துக் கொள்வது மற்றும் புனர்வாழ்வு அளிப்பது தொடர்பான விழிப்புணர்வுத் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவிருக்கின்றது.

இது தொடர்பான கருத்தரங்கொன்று வரும் பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி காலிமுகத்திடல் ஹோட்டலில் பாம்லோஞ்சில் இடம்பெறும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

## முக்தி அடைய வழி

பக்தி செய்தால் எளிதில் முக்தி பெறலாம் என நந்தனார் பாடுகிறார். பக்தி பண்ணிக் கொண்டிருந்தால் முக்தி பெறலாமே.

நீங்கள் காட்டுக்குப் போக வேண்டாம், காய்கனி, கந்த மூலகங்களை உண்ண வேண்டாம், தலைகீழாக நிற்க வேண்டாம், அதெல்லாம் வழியில்லை.

சென்னையில் ஒரு தெரு உண்டு. தங்கசாலை என்றதெரு வழியாகச் சென்று கொண்டே இருந்தால் அதே தெரு பாதிக்குமேல் திருவொற்றியூர் நெடுஞ்சாலையாக மாறிவிடும். அதுபோல இறைவனை நினைத்து நினைத்து, பயன் கருதாமல் உருகிய உள்ளத்துடன் பக்தி செய்தால் முக்தி வந்து சேரும். 'முக்திக்கு வழி பக்தி' என்பதை உணர்ந்து எல்லோரும் பக்தி செய்ய வேண்டும்.

ஞானக்கதிர்

பக்தி என்பது வடசொல். அன்பு என்பது தென்சொல். இறைவனை அன்பு ஒன்றால் தான் அடைய முடியும். 'பக்தி வலையில் படுவோன் காண்க' என்று கூறுகின்றார் மாணிக்கவாசகர். 'அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே' என்கின்றார் ராமலிங்க அடிகளார். 'மூன்று வேளை நன்றாகச் சாப்பிடுகள். நன்றாக ஆடை அணிந்து கொள்ளுங்கள்.அலுவலகத்துக்கு போய் கொள்ளுங்கள்.ஆனால் உள்ளத்தில் பக்தி இருக்க வேண்டும். பக்தி இருந்தால் தெய்வம் உங்களைத் தேடிக்கொண்டு வரும். வேலை செய்தால் கூலி தானாக வரும் தானே? வேலைக்குத் தகுந்த கூலி நிச்சயமாகக் கிடைக்கும். சோம்பேறித்தனமாக இருந்தால் எவன் கூலி தருவான்? 'ஓம் நமவச்சிவாய நம' என்பதை விட ஒரு மகாமந்திரம் சைவர்களுக்குக் கிடையாது. 'சிவாயநம என்று சிந்தித்திருப்போருக்கு அபாயம் ஒருநாளும் இல்லை" என்கிறார் ஔவையார். மற்றச் சமயத்தவர்கள் அவரவர் தெய்வங்களின் மகாமந்திரங்களைத் தினசரி சொல்லி ஜெபசக்தி பெற வேண்டும். நித்திய வாழ்க்கையில் ரயிலில் போகிறபோதும் அல்லது எந்த வாகனத்தில் பிரயாணம் செய்யும் போதெல்லாம் உங்கள் வாழ்நாளில் எத்தனைக் கெத்தனை மகாமந்திரங்களை விடமால் சொல்லிக்கொண்டே வந்தால் அத்தனைக்கத்தனை மகாமந்திரங்களும் கடைசியாக உங்கள் ஆத்மா பிரியும் போது ஒரு தொகையாக வரும். நாமும் எப்பொழுதும் மகா மந்திரங்களை ஓதிக் கொண்டிருப்போம்.

*(நன்றி:-ஞானச்சுடர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவாலி இடிகுண்டு திட்டம்; மக்கள் கருத்தறிய ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜன.28

நவாலி கட்டுடை இடிகுண்டு அபிவிருத்தித் திட்டம் பெரிய அபிவிருத்தியாக இனம் காணப்பட்டுள்ளது.

எனவே மதிப்பீட்டுக்கு முன்னர் பொது அமைப்புக்கள், அரச செயலகங்கள், விவசாயிகளின் கருத்துக்கள் பெறப்படவேண்டியுள்ளது.

இதன் பின்னரே முழுமையான மதிப்பீட்டை நீர்ப்பாசனத் திணைக்களம் மேற்கொள்ளும்.

இவ்வாறு யாழ்.செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இ.மோகனேஸ்வரன் தெரிவித்துள்ளார். 'இடிகுண்டு' அபிவிருத்தி தொடர்பாக அவர் மேலும் தெரி விக்கையில்:

200 வருட பழைமை வாய்ந்த அபிவிருத்தித் திட்டமான இடிகுண்டு, அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படும் பலநோக்குத் திட்டமாகும்.

இதற்கு மதிப்பீடு தயாரித்து அபிவிருத்தி செய்யமுன்னர் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருடனும் கலந்து பேச வேண்டியுள்ளது.

குறிப்பாகத் தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் ஆலோசனையும் பெற வேண்டியள்ளது.

விரைவில் வலி.தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவில் கூட்டம் ஒழுங்கு செய்யப்படும்.

அன்றைய தினம் வழங்கப்படும் கருத்துக்களைக் கொண்டே மதிப்பீடு இடம்பெற்று இந்த ஆண்டு (2011) அபிவிருத்தி இடம்பெறும் எனத் தெரிவித்தார். (ஐ-302)

# 'காப்பற்' அமைக்கும் பணி மீண்டும் இந்த வாரத்தில்

யாழ்ப்பாணம், ஜன.28

யாழ்.நகரில் உள்ள பிரதான வீதிகளை 'காப்பற்' வீதிகளாக மாற்றியமைக்கும் பணிகள் மீண்டும் இந்த வாரத்தில் ஆரம்பமாகவுள்ளன என வீதி அபிவிருத்தி அதிகாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

'காப்பற்' வீதி அமைக்கும் பணி ஸ்ரான்லி வீதியில் ஆரம்பிக்கப்பட்டது. பின் இடை நிறுத்தப்பட்ட பணிகள் உடனடியாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த வீதிப் புனரமைப்பில் ஈடுபட்ட ஒப்பந்தக்கரர்கள் ஓரிரு நாள்களில் யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

இந்த வீதி ஓட்டுமடம் சந்தி வரை காப்பற் வீதியாக மாற்றப்படவுள்ளது.

யாழ்.மாநகரசபைக்கு உட்பட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழலுள்ள அனைத்து வீதிகளும் இவ்வாறு 'காப்பற்' வீதியாக மாற்றப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-26)

## நெல் கொள்வனவில் தரகர்கள்

யாழ்ப்பாணம்,ஜன.28

பெரும்போக நெல் அறுவடை தொடங்குவதற்கு முன்னர் நெல் கொள்வனவு தரகர்கள் விவசாயிகளிடம்நெல்கொள்வனவுதொடர்பாக முன் பதிவு செய்துவருகின்றன.

எழுபது கிலோ நெல் 3 ஆயிரத்து 500 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படும் என தரகர்கள் தெரிவித்துள்ளனர். இதே வேளை - ஆட்டக்காரி நெல் இனம் 3 ஆயிரம் ரூபாவுக்கு கொள்வனவு செய்வதற்கும் 500 -1 நெல் இனம் 3500 ரூபாவுக்கு கொள்வனவு செய்வதற்கும் தகரர்கள் தயாராக உள்ளனர். (ஐ-302)

# சமூக அக்கறை உள்ள வேட்பாளருக்கு வாக்களிக்கக் கோருகிறது மகாசபை

வடமராட்சி,ஜன.28

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சமூக அக்கறையாளர்களுக்கே வாக்களிக்கவேண்டும் என அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவர் எழுத்தாளர் தெணியான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மகாசபையின் அரசியல் உயர் பீடம் யாழ்ப்பாணத்தில் ஒன்று கூடி எடுத்த தீர்மானம் தொடர்பாக விளக்கம் அளிக்கையிலேயே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

இன்றைய சூழ்நிலையில் மகா சபை, உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதில்லை எனத் தீர்மானித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடாத நிலையில் ஏழை, எளியமக்களுக்கு உதவி செய்யக் கூடியவர்கள், அவர்களின் வாழ்வாதாரத்தைக் கவனிக்கக்கூடியவர்கள், மக்களின் இயல்பு வாழ்க்கைக்கும் பாதுகாப்புக்கும் துணையாக நிற்கக் கூடியவர்களை இனங்கண்டு அவர்களுக்கே வாக்களிக்கவேண்டும். எனவே சமூகத்தில் உண்மையான அக்கறையுள்ளவர்களுக்கு வாக்களியுங்கள் என்றுள்ளது.

## வட்டு .கலட்டிக்கு குழாய்மூலம் குடிதண்ணீர்: மதிப்பீட்டுப்பணி பூர்த்தி

யாழ்ப்பாணம்,ஜன.28

வட்டுக்கோட்டை- கலட்டிப் பிரதேசத்துக்கு குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்குவதற்கான மதிப்பீட்டுப் பணி நேற்று முன்தினம் இடம் பெற்று முடிவுற்றுள்ளது.

எதிர்வரும் 31 ஆம் திகதியன்று மண் அகழ்வு இடம் பெறும் எனத் தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் பிராந்திய முகாமையாளர் எந்திரி பா.தவேந்திரகுமார் தெரிவித்தார்.

மண் அகழ்வு இடம்பெற்றதும் குழாய்கள் புதைக்கப்பட்டு குடிதண்ணீர் வழங்கப்படும்.

இதேவேளை - பொதுத் தொட்டி அமைப்பதற்கு தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபைக்குச் செலுத்த வேண்டிய நிதியையும் உடன்செலுத்த கலட்டிப் பிரதேச மக்கள் முன் வரவேண்டுமென தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் பொறுப்பதிகாரி எஸ்.ரவீந்திரா கேட்டுள்ளார்.(ஐ-302)

# யாழ்.மாவட்டத்தில் அருகும் பாரம்பரியப் பொருள்கள்

யாழ்ப்பாணம், ஜன.28

நமது முன்னோர்கள் பயன்படுத்தி வந்த பாரம்பரிய உற்பத்திப்பொருள்கள் யாழ்.மாவட்டத்தில் இல்லாமல் போய்விட்டதாக 'கேன்' நிறுவத்தின் வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்பாளரும் முகாமையாளருமான வைத்திய கலாநிதி என்.சிவராஜா தகவல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

நமது முன்னோர்கள் பயன்படுத்தி வந்த பாக்குவெட்டி, கைவிளக்கு, மூக்குப்பேணி, அம்மி போன்ற பொருள்கள் பாவனையில் இல்லாமல் மறைந்து போய் விட்டன.

எதிர்கால சமூகத்தினருக்கு இவை பற்றி எதுவும் தெரியாமல் மறைக்கப்பட்டு விட்டன.

புராதன உற்பத்திப் பொருள்களைப் பாதுகாப்பதற்கு யாரும் முன்வருவதில்லை. தமிழரின் பண்பாட்டு விழுமியங்களைக் தென்னிலங்கையில் இருந்து வருவோர் சுரண்டிக் கொண்டு செல்வதற்கு நாம் இடம் கொடுத்து விட்டோம்.

மின்சார வசதிகள் இல்லாத காலத்தில் கைவிளக்கு அனைவர் வீட்டிலும் ஒளிவீசிக் கொண்டிருந்தது. 'கைவிளக்கில்' படித்துப் பட்டம் பெற்றவர்கள்தான் யாழ்.மண்ணைச் சேர்ந்தவர்கள்.

இவ்வாறு எமக்கு பெரும் உதவிகளைத் தந்த புராதன உற்பத்திப் பொருள்கள் அழிவடைந்து செல்வதற்கு நாமே காரணம் ஆகிவிட்டோம்.

எமது பண்பாட்டு விழுமியங்களைச் சித்திரிக்கும் முன்னோர் தேடித்தந்த சொத்துக்களைப் பாதுகாக்க நாம் அனைவரும் முன்வரவேண்டும் என்று அவர் மேலும் கூறினார். (ம-313)

**கவனிப்பாரற்று...**



அபிவிருத்தியடையுமா? நாவாந்துறையில் கடந்த 40 வருட காலமாக இயங்கிவரும் மாநகரசபை நூல்நிலையம் - மின்சார வசதி, கட்டட வசதிகள் சீரின்மை போன்றவற்றுடன் இயங்கிவருகின்றது. இதனால் அந்தப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றார்கள்.

அதிகளவான வாசகர்கள் பயன்பெற்று வரும் இந்த நூலகத்தின் திருத்தப் பணிகள் குறித்துப் பலரிடம் முறைப்பாடு செய்தும் பலன் எதுவும் இல்லை என்றும் கூறப்படுகிறது.

## பாலத்தில் சறுக்கி விழ்ந்தவர் 8 நாள்களின் பின் மரணம்

கொடிகாமம்,ஜன.28

வரணி, குடத்தனைப் பாலத்தில் இருந்து சறுக்கி வீழ்ந்த இடைக்குறிச்சி வாசி எட்டு நாள்களின் பின்னர் சிகிச்சை பயனின்றி நேற்று முன்தினம் மரணமானார்.

வரணி, இடைக்குறிச்சியைச் சேர்ந்த வி.சிற்றம்பலம் (வயது 72) என்பவரே மரணமானவராவார்.

வரணி குடத்தனைப் பாலத்தை மேவி வெள்ளம் பாயும் நிலையில் அதனூடாகச்சென்ற இவர் கால் சறுக்கி முழங்கால் முறிந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட இவர் சிகிச்சை பயன் அளிக்காத நிலையில் நேற்று முன்தினம் மரணமானார். (ஐ-122)

# சட்டமாணி நுழைவுத் தேர்வு யாழ்ப்பாணத்திலும் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜன.28

நாடளாவிய ரீதியில் சட்டமாணி கற்கை நெறிக்கு ஆள் சேர்ப்பதற்கான திறந்த பல் கலைக்கழகத்தின் நுழைவுத் தேர்வுப் பரீட்சை அடுத்தமாதம் 13 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலும் இடம் பெறவுள்ளது.

இந்த நுழைவுத் தேர்வில் தோற்றவுள்ள மாணவர்களைத் தயார்ப் படுத்துவதற்கான கருத்தரங்கு சட்டபீட இறுதியாண்டு மாணவர்களினால் இங்கு நடத்தப்படவுள்ளது.

நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் முழுநேர கருத்தரங்கு இடம் பெறும்.

சனிக்கிழமை இணுவில் மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவிலும் மறுநாள் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும் கருத்தரங்கு இடம்பெறும்.

மேலதிக விவரங்களுக்கு 0776106658, 0775273387 எனும் தொலை பேசியில் தொடர்பு கொள்ளலாம் எனச் சட்டபீட இறுதி யாண்டு மாணவன் வி.இளங்குமார் அறிவித்துள்ளார்.

நுழைவுத் தேர்வுக்கு விண்ணப்பித்த மாணவர்களை இக் கருத்தரங்குகளில் பங்கு பற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-302)

# சங்கானை சூட்டுச் சம்பவம்; சந்தேக நபர்கள் மறியலில்

யாழ்ப்பாணம்,ஜன.28

சங்கானையில் குருக்கள் மற்றும் அவரது இருமகன்மாரைச் சுட்டுக் கொள்ளையடித்த சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இரு சிப்பாய்கள் மற்றும் இருவரையும் அடையாள அணிவகுப்பில் நிறுத்துவது நேற்று முன்தினம் ஒத்திவைக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த குருக்கள் மரணமான நிலையில், சாட்சிகளான அவரது மகன்மார் ஆஸ்பத்திரியில் [illegible] அடையாள அணிவகுப்பு நடத்த முடியாத நிலையில் ஒத்திவைக்கப்பட்டது.

மல்லாகம் நீதிமன்றத்தில் இந்த அணிவகுப்பு நடைபெற ஏற்பாடாகி இருந்த நிலையில் காயமடைந்தவர்கள் தொடர்ந்தும் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருவதால் அவர்களை அழைத்து வரமுடியாதுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அதைஅடுத்து சந்தேக நபர்களை அடுத்தமாதம் 9 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (ஓ-ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுதுமட்டுவாழ் மக்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்

தென்மராட்சி , ஜன.28

தமது சொந்தக் காணியில் மீளக்குடியமரச் சென்ற எழுதுமட்டுவாழ் தெற்கைச் சேர்ந்தவர்கள் படையினரால் திருப்பி அனுப்பப்பட்டனர்.

இப்பகுதியில் வெடிப்பொருள்கள் அகற்றப்பட்டமைக்கான சான்றிதழ் கையளிக்கப்பட்டுள்ளதாக அறிந்த மக்கள் மீளக்குடியமர்வதற்கான ஆயத்தங்களுடன் சென்றனர். சிலர் வளவுகள் துப்புரவு செய்யும் பணியிலும் ஈடுபட்டனர்.

அவ்வேளையில் அப்பிரதேசப் படை அதிகாரி வந்து இன்னமும் இப்பகுதியில் வெடிப் பொருள்கள் முழுமையாக அகற்றப்படவில்லையெனக் கூறி காணிகளை பார்வையிட்டுச் செல்லுமாறும் மீளக்குடியமர்வு நடவடிக் கைகளில் ஈடுபட வேண்டாமெனவும் கூறியுள்ளார்.

அத்துடன் எழுதுமட்டுவாழ் நாகர் கோயில் வீதியின் கிழக்குப்புறத்தில் உள்ள காணிகள் குடியிருப்புக்களை வீதியில் நின்று பார்க்க அனுமதித்த போதிலும் உள்ளே செல்ல அனுமதிக்கப்படவில்லை.

இதனையடுத்து இப்பகுதி மக்கள் நேற்று முன்தினம் பிரதேச செயலகதுக்கு வருகை தந்து உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டபோது தென்மராட்சி கிழக்கு கரம்பகம் பகுதிக்கான கண்ணிகள் அகற்றியமைக்கான சான்றிதழ் வழங்கப்பட்டதாகவும் அந்த நிறுவனத்தினால் வழங்கப்பட்ட சான்றிதழில் எழுதுமட்டுவாழ் தெற்குப் பகுதியென தவறுதலாகப் பதிவு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தமது சொந்தக் காணியில் மீளக்குடியமர ஆவலுடன் சென்ற மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கரம்பகம் பகுதியில் மக்கள் மீள் குடியமர்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-207)

# வீதியில் மோ.சைக்கிள் நிறுத்தினால் தண்டம்

யாழ்ப்பாணம், ஜன.28

கொட்டடி மீன்சந்தை சுற்றாடல் பகுதியில் வீதியோரத்தில் மோட்டார் சைக்கிள்கள் நிறுத்துபவர்களுக்கு தண்டப் பணமாக 10 ரூபா அறவிடப்படுகிறது.

மீன்சந்தைக்கு மீன்களை வாங்க வரும் மக்கள் அங்குள்ள சைக்கிள் தரிப்பிடத்திலேயே தமது வாகனங்களை நிறுத்த வேண்டும்.

இதைமீறி சிலர் வீதியோரங்களில் தமது மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டுச் செல்கின்றனர்.

இதை அவதானிக்கும் சம்பந்தப்பட்ட சைக்கிள் தரிப்பிட ஒப்பந்தக்காரர்கள் வீதியில் நிறுத்தும் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் துவிச்சக்கர வண்டிகளை எடுத்துச்சென்று தமது பாதுகாப்பு நிலையத்தில் விட்டு விடுகின்றனர்.

இவ்வாறு வீதியில் நிறுத்தப்பட்ட வாகனங்களை எடுக்கச்செல்லும் மக்களிடம் தண்டப் பணமாக 10 ரூபா அறவிடப்படுவதோடு அதற்கான சிட்டை எதுவும் வழங்கப்படுவதில்லை இவ்வாறான நடவடிக்ககைகளால் பொதுமக்கள் தமது மோட்டார் சைக்கிள்கள் காணாமல்போய் விட்டதோ எனப் பயப்பீதி கொள்வதாகவும் தெரிவிக்கப் படுகிறது (ஐ-26)

# இட வசதியின்றி இயங்கும் வங்கிக் கிளைகள்

கொடிகாமம்,ஜன.28

கொடிகாமத்தில் இயங்கும் மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கிக் கிளைகள் இடவசதி குறைந்த அலுவலகங்களாக இயங்கும் அதேசமயம் வாடிக்கையாளர்கள் தமது தேவைகளை நிறைவேற்றுவதில் சிரமங்களை அனுபவிப்பதாகக் கூறப்படுகின்றது.

மக்கள் வங்கி ஒரே அறையில் மட்டும் இயங்குகின்ற அதேசமயம் வாடிக்கையாளர் தொகை அதிகமாக உள்ளது.

அவர்கள் தமது கடமையை நிறைவேற்றுவதில் பல சிரமங்களை அனுபவிக்கின்றனர். (122)

## கலாசாரம்...



கௌரவம்:- வலி. கிழக்கு பிரதேச பண்பாட்டுப் பேரவை நடத்திய கலை பண்பாட்டு விழாவில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுகின்றனர்.

# வரணி ஆஸ்பத்திரியில் வெள்ளி தோறும் பற்சிகிச்சை

கொடிகாமம்,ஜன.28

வரணிப் பிரதேச வைத்திய சாலையில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடமாடும் பற்சிகிச்சை சேவை இடம்பெறவுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

பிற்பகல் இரண்டு மணிக்கு இச்சேவை இடம்பெறும் எனவும் பொதுமக்கள் இச்சேவையில் பங்குபற்றிப் பயன் பெறுமாறும் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இச்சிகிச்சை யாழ்.போதனா வைத்தியசாலையின் பற்சிகிச்சைப்பிரிவினரால் நடமாடும் சேவையாக நடத்தப்படவுள்ளது. (ஐ-122)

# வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளருக்கு சுவிஸ் நிறுவனம் வாழ்வாதார உதவி

வடமராட்சி ஜன.28

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள மீனவக் கிராமங்களான தாளையடி, மருதங்கேணி ஆகிய கிராமங்களில்மீளக்குடியேறிய மீனவக் குடும்பங்களில் 70 பேருக்கு வாழ்வாதார மேம்பாட்டு உதவித் திட்டமாகத் தலா 82 ஆயிரம் ரூபா பெறுமதியான மீன்பிடி வலை உபகரணங்கள் மற்றும் கட்டுமரம் என்பன வழங்கப்பட்டன.

இவ் வாழ்வாதார மேம்பாட்டு உதவிகள் ' பாஸிக்' நிறுவனத்தினால் வழங்கப்பட்டன.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான நிதி உதவிகளை சுவிஸ் நாட்டின் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான முகவர் அமைப்பு (எஸ்.டி.சி) பாஸிக் நிறுவனத்துக்கு வழங்கியிருந்தது.

மீளக்குடியேறிய மீனவக் குடும்பங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் முறையே மருதங்கேணிக் கிராமத்தில் 46 பயனாளிக் குடும்பங்களுக்கும் தாளையடிக் கிராமத்தில் 24 பயனாளிக் குடும்பங்களுக்கும் இவ் உதவிகள் கிடைத்துள்ளன.

மீளவும் கடற்றொழிலை ஆரம்பிப்பதற்கு 70 பயனாளிகளும் கிராமிய கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம், பிரதேச கடற்றொழில் பரிசோதகர் மற்றும் கிராம சேவையாளர்கள் ஊடாக இனங்காணப்பட்டிருந்தனர். (ஐ-236)

# ஒலிபெருக்கி மூலம் அறிவித்து பழைய இரும்பு கொள்வனவு

வடமராட்சி,ஜன.28

பருத்தித்துறை நகர்ப் பகுதியில் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டு பழைய இரும்பு, பித்தளை, அலுமினியங்களை தென்பகுதி வியாபாரிகள் பொது மக்களிடமிருந்து கொள்வனவு செய்து வருகின்றனர்.

சிறியரக லெபறிகளில் ஒலிபெருக்கி மூலம் பழைய இரும்பு, பித்தளை அலுமினியம் என்பன வாங்கப்படும். அவற்றை வைத்திருப் போர் எம்மிடம் விற்பனை செய்யுங்கள் எனத் தென்பகுதி வியாபாரிகள் அறிவித்து சிறுவீதிகள், ஒழுங்கைகள் ஊடாகச்சென்று அவற்றை வாங்கி லொறிகளில் போட்டுக் கொண்டு செல்கின்றனர்.

பழைய இரும்பு, பித்தளை, அலுமினியம் என்பவற்றைக் கொள்வனவு செய்ய இப்படியான முறை தற்போது கைக் கொள்ளப்படுகிறது.

முன்னர் சைக்கிளில் வரும் வியாபாரிகள் கூவிக்கூவி இவற்றைக்கொள்வனவு செய்து வந்தமை குறிப்பிடத்தக்கது.(ஐ-236)

# போக்குவரத்துச் சபையின் டிப்போக்களில் கணக்குப்பிரிவு

தென்மராட்சி, ஜன.28

பருத்தித்துறை, காரைநகர், கிளிநொச்சி ஆகிய இலங்கை போக்குவரத்துச் சபையின் டிப்போக்களில் தனித் தனிக் கணக்குப் பிரிவுகள் இம்மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டு அவற்றுக்குத் தனித்தனிக் கணக்காளர்களும் நியமிக்ககப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை இ.போ.ச டிப்போவுக்கு கனகராசா அழகேஸ்வரனும் காரைநகர் இ.போ.ச டிப்போவுக்கு எஸ்.இளங்குமரனும் கிளிநொச்சி இ.போ.ச டிப்போவுக்கு கணேசபிள்ளை உமாசுதனும் கணக்காளர்களாக நியமனம் பெற்றுள்ளனர்.

இம்மூவரும் இ.போ.ச டிப்போக்களில் நிதிப் பிரிவில கடமையாற்றியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பஸ்சேவையினை அரசாங்கம் சுவீகரித்ததைத் தொடர்ந்து நாடெங்கும் தனித்தனி இ.போ.ச டிப்போக்கள் இயங்கிவந்ததுடன் தனித்தனிக் கணக்குப் பிரிவுகளும் இயங்கிவந்தன.

பின்னர் இ.போ.ச டிப்போக்கள் யாவும் மாகாண மட்டத்தில் பிராந்திய சபைகளாக்கப்பட்ட போது பிராந்திய சபைக் கணக்குப் பிரிவுகளே அந்ததந்தப் பிரதேச டிப்போக்களின் கணக்குகளைப் பெறுப்பேற்றிருந்து.

ஐ.ம.சு.க அரசாங்கம் பதவிக்கு வந்ததைத் தொடர்ந்து முன்னைய நிர்வாகக் கட்டமைப்பு முறைக்கு மாற்றப்பட்டு மாகாண, பிராந்திய சபைகள் கலைக்கப்பட்டு தனித் தனி இ.போ.ச டிப்போக்களாக அவை மாற்றப்பட் டன.

இதற்கமையவே ஒவ்வொரு இ.போ.ச டிப்போக்களுக்கும் தனித்தனிக் கணக்குப் பிரிவுகள் அமைக்கப்பட்டு கணக்காளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். (ஐ-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு மாவட்டத்தின் கல்வித் தேவைகள்

முல்லை மாவட்டத்தில் மீள்குடியேறிய மக்களுக்கு முக்கியமாகத் தேவைப்படுவது கல்வி நடவடிக்கையாகும். இந்த மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்கள் மிகவும் வறிய நிலையில் உள்ளவர்கள். இங்குள்ள பாடசாலைகள் யுத்தத்தினால் அழிவடைந்தும் பாதிக்கப்பட்டும் இருக்கின்றன. இந்தப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் மரநிழல்களிலும் கொட்டகைகளிலும் கல்வி கற்பதைக் காணக்கூடியதாக உள்ளது. இவர்களுக்கான சீருடைகள் இல்லாது எத்தனையோ பிள்ளைகள் மிகவும் கசங்கிய உடைகளோடு பாடசாலை செல்கின்றனர். சில மாணவர்கள் பாடசாலை செல்வதில் அக்கறை செலுத்துவதில்லை. இந்த மாவட்டத்தில் அனேக பாடசாலைகளிலும் தேவையான ஆசிரியவளம் குன்றிக் காணப்படுகின்றது.

அத்துடன் தளபாட வசதிகள் என்பவையும் இல்லை. ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களை விட எமது மாவட்ட மாணவர்கள் கல்வியில் பின்தங்கிய நிலையிலேயே உள்ளனர். 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் கூட எமது மாவட்ட மாணவர்கள் சிறப்பான பெறுபேறுகளைப் பெறவில்லை. தற்போது சில வசதிகள் ஏற்பட்டும்கூட இந்த மாவட்ட மாணவர்களின் கல்வி நிலையில் மாற்றங்கள் காணப்படவில்லை. மீள்குடியேற்றத்தின் பின்னராவது எமது பாடசாலைகளை மீளக்கட்டி எழுப்பி மாணவர்களது கல்வி நிலையில் முன்னேற்றம் காண்பதில் எவ்வித முன்னேற்றமும் தென்படுவதாக இல்லை. பாடசாலைகளில் வெளிமாவட்டங்களில் இருந்து கற்பிக்க வரும் ஆசிரியர்களுக்கான தங்குமிட வசதிகள் இல்லாத நிலை நிலவி வருகின்றது. தங்குமிட வசதியற்ற பாடசாலைகளில் ஆசிரியர்களின் கற்பித்தல் நடவடிக்கைகள் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. மாணவர்களுக்கான போக்குவரத்து வசதிகள் உரியமுறையில் இல்லாமையும் வீதிகள் சீரின்மையும் பெரும் தடைகளாக உள்ளன. எவ்வளவோ இன்னல்களையும் தடைகளையும் தாண்டியே எமது மாவட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றனர். எமது மாவட்டத்திலிருந்து பல்கலைக்கழகம் செல்லும் மாணவர் தொகை குறைந்தே காணப்படுகிறது. ஏனைய மாவட்டங்களில் தனியார் கல்வி நிறுவனங்கள் இருப்பது போல இந்த மாவட்டத்தில் இல்லை. இப் படியான சூழலில் மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பது அரிதிலும் அரிதாகவே காணப்படும். தற்போது ஒட்டுசுட்டான் பிரதேசத்திலே உள்ள பாடசாலைகளில் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம் வலதுகரை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை ஆகிய இரு பாடசாலைகள் தரமுயர்த்தப்பட்டுள்ளன. ஆனால் இரு பாடசாலைகளையும் அண்டிய மாணவர்களை விட அனேக மாணவர்கள் ஐந்து தொடக்கம் ஆறு கிலோமீற்றர் தொலைவில் இருந்து பாடசாலைக்கு வரும் நிலை ஏற்பட்டுள்ளது. உதாரணமாக கூழா முறிப்பில் இருந்து ஒட்டுசுட்டான் வரும் மாணவன் ஐந்து கிலோ மீற்றர் தூரத்தைக் கடந்து வரவேண்டும். அதேபோன்று மன்னாகண்டல், கெருடமடுவில் உள்ள மாணவர்கள் ஐந்து தொடக்கம் ஆறு கிலோ மீற்றர் தூரம் கடந்துதான் ஒட்டுசுட்டான் அல்லது வலதுகரை பாடசாலைக்குச் செல்லவேண்டும். இரண்டுக்கும் நடுவே உள்ள கற்சிலைமடு பாடசாலையிலே சுமார் 400இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயில்கின்றார்கள். இதில் சுமார் 200 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் தரம் 5 இற்கு மேற்பட்டவர்கள். இவர்களது கல்விநிலை மிகவும் பாதிக்கப்படும் நிலை காணப்படுகின்றது. சாதாரணமாக கற்சிலைமடு பாடசாலைக்கே உரிய நேரத்துக்குச் சமுகமளிக்க முடியாத மாணவர்கள் ஐந்து, ஆறு கிலோ மீற்றர் தூரம் எப்படிக் கடந்து உரிய நேரத்துக்குச் செல்லப் போகிறார்களோ தெரியவில்லை. வெறுமனே ஆசிரியர்களையோ அல்லது மாணவர்களையோ நாம் குறைகூறுவதில் அர்த்தமில்லை. பாடசாலைக் கல்வியானது சகல வளங்களையும் உள்ளடக்கியதாக இருத்தல் அவசியம். அத்துடன் ஆசிரியர்களுக்கான வசதிகள் ஆய்வுகூட உபகரணங்கள் என்பனவற்றோடு மின் இணைப்பும் இருத்தல் வேண்டும். எமது மாவட்டத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் முன்பள்ளிகள் இயங்கி வந்தன. மாணவச் செல்வங்களுக்கு அடிப்படைக் கல்வி மிக முக்கியமானது. அந்த நிலையில் நடந்து வருகின்ற முன்பள்ளிகள் தற்போது கட்டடங்கள் அழிக்கப்பட்டதால் வசதிகள் அற்ற நிலையிலும் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் இல்லாததால் அவற்றை ஒழுங்காக நடத்த முடியாமல் வேறு பாடசாலைகளிலும் வீடுகளிலும் இயங்கி வருகின்றன. சில இடங்களில் இயங்க முடியாமல் உள்ளதாகவும் அறியமுடிகிறது.

கடந்த பல வருடங்களாகப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்கள் ஆசிரிய பற்றாக் குறைகளை நிவர்த்தி செய்யும் முகமாக எதுவித வேதனமும் இன்றி அரசு தம்மையும் உள்வாங்கி நிரந்தர நியமனம் வழங்கும் என்ற எதிர்பார்ப்போடு செயற்பட்டார்கள். ஆனால் ஒன்றுமே நடக்கவில்லை. நேர்முகத்தேர்வு நடக்கும். விரைவில் நியமனம் கொடுக்கப்படும். அதனைப் பற்றிய பேச்சுவார்த்தை நடைபெறுகிறது எனப் பத்திரிகை வாயிலாகத் தெரிவிப்பதோடு சரி. பல வருடங்களாகப் பணிபுரிந்த தொண்டர் ஆசிரியர்களுக்கு இதுவரையும் நியமனத்துக்கான எதிர்வுகள் இல்லை. சொந்த ஊரைச் சேர்ந்த படித்த மாண வர்கள் எமது பாடசாலை, எமது மாணவர்கள், அவர்களை நாம் கல்வியில் உயர்த்த வேண்டும் என்ற பெருநோக்கில்செயற்பட்டவர்கள் தொண்டர் ஆசிரியர்கள். ஆனால் தென்பகுதியிலே தொண்டர்களுக்கான நியமனம் இடையிடையே வழங்கப்பட்டது. இங்கு அவ்விதம் நடைபெறவில்லை. அதனால் தொண்டர் ஆசிரியர்கள் இப்போது ஆர்வமாகச் செயற்படுவதில்லை. ஏனோ தானோ என்ற நிலையில் செயற்படுகிறார்கள். இதனால் பாதிக்கப்படுவது எமது மாணவர்கள்தான். இதேபோன்றுதான் முன் பள்ளி ஆசிரியர்களும் எவ்வித கொடுப்பனவுகளுமின்றிப் பணிபுரிகிறார்கள். எவ்விதத்திலும் அவர்களுக்கு ஊதியம் கொடுக்க எவரும் முன்வரவில்லை.

ஒருபிள்ளையை அதுவும் மூன்று தொடக்கம் நான்கு வயதுப் பிள்ளையை ஒரு வீட்டில் வைத்துப் பராமரிப்பதற்கு எவ்வளவோ கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஆனால் பல பிள்ளைகளுடனான ஒரு முன்பள்ளி ஆசிரியர் எவ்வளவு கஷ்டப்படுகிறார் என்பதனைக் கூட எவரும் காதில் விழுத்தியதாகத் தெரியவில்லை. இப்படியே வன்னி மாணவர்களின் கல்வி நிலை பாதிக்கப்பட்டு வருகிறது. இது மட்டுமல்ல, விளையாட்டுத் துறையினை எடுத்துக் கொண்டாலும் அவர்களுக்கான சிறந்த விளையாட்டு மைதானங்கள் இல்லை. ஏற்ற உபகரணங்கள் இல்லை. விளையாட்டு ஆசிரியர்கள் இல்லை எனப் பலவிதமான தடைகள். *(வளரும்)*

*சிலையூர் தனார்*

# இரணைமடு அபிவிருத்திக்கு முன்னின்று உதவக் கோரிக்கை

கிளிநொச்சி,ஜன.28

மனிதவள அபிவிருத்தியும்-உட்கட்டுமான அபிவிருத்தியும் ஒருங்கே ஈடுபடுத்துவதன் ஊடாக எமது கிளி நொச்சி மாவட்டம் முதலில் துரித அபிவிருத்தி அடையும். எனவே இரணைமடு அபிவிருத்திக்கு நீர்பாசனத் திணைக்களம், கமக்காரர் சம்மேளனங்கள் மற்றும் அரச திணைக்களங்கள் முன்நின்று உதவவேண்டும்.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

இரணைமடுக் குளத்தை அபிவிருத்தி செய்வது, குடிதண்ணீர் மற்றும் விவசாய நீர்ப்பாசன அபிவிருத்திக்கான முக்கிய கூட்டம் கிளிநொச்சி அரச அதிபர் தலைமையில் இடம்பெற்றது.

அரச அதிபர் தொடர்ந்து உரையாற்றுகையில்-

2002 இல் இருந்து இரணைமடுக் குளத்து நீரைப் பன்முக தேவைக்களுக்குப் பன்படுத்துவது தொடர்பாக ஆராயப்பட்ட போதும்,'மஹிந்த சிந்தனை' திட்டம் மூலமும் வடக்கின் வசந்தத்தின் மூலமுமே இந்தத் திட்டம் இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முதற் கட்டமாக 164.4 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி முழுமையாகப் பயன்படுத்தப்படவுள்ளது.இந்த அபிவிருத்தித் திட்டம் யாழ்.கிளிநொச்சி நீர்வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டத்திற்குப் பொறுப்பான திட்டப் பணிப்பாளர் எந்திரி தி.பாரதிதாசனால் முன்னகர்த்தப்படவுள்ளது.

அதேநேரம் சில அபிவிருத்தித் திட்டங்கள் கிளிநொச்சி மாகாண நீர்பாசனத் திணைக்களத்தினால் முன்னகர்த்தப்படவுள்ளன.

மேலும் விவசாயிகளின் கோரிக்கையின்படி ஜப்பான் - தாய்வான் போன்ற நாடுகளில் பயன்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்களும் இரணை மடுக்குள அபிவிருத்தித் திட்டத்தில் பயன்படுத்தப்படும்.

இந்தத் திட்டம் ஏழு ஆண்டுகளுக்குள் முழுமை பெற்று வடக்குப் பகுதியில் உள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்கள் நன்மை அடையும்.

எனவே பிரதேச அபிவிருத்தியை மையமாகக் கொண்ட இரணைமடுக்குள அபிவிருத்தி விரைவில் வெற்றி அடையும் என்றார்.

யாழ்ப்பாணம்,கிளிநொச்சி நீர்வழங்கல் வடிகால் அமைப்பு திட்டப்பணிப்பாளர் எந்திரி தி.பாரதிதாசன் பேசுகையில்-

கிளி நொச்சி மக்கள் எந்த வகையிலும் பாதிக்கப்படாத வகையில் அறிமுகப்படுத்தப்படும் திட்டமாக இரணைமடுக்குள அபிவிருத்தி இடம் பெறும். வெளிநாட்டுத் தொழில்நுட்பப் பொறிமுறைகள் இங்கு பயன்படுத்தப்படும் என்றார்.

மேற்படி அபிவிருத்திக் கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட விவசாய சமாசத் தலைவர் எஸ். மனோகரன், பிரதேச செயலர்கள், நீர்பாசனத் திணைக்களப் பொறியியலாளர்கள், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து உதவி அரச அதிபர் நா.சத்தியசீலனின் நன்றி உரையுடன் கூட்டம் முடிவுற்றது.

(க-302)

# மழையால் பாதிக்கப்பட்டோருக்கு உணவல்லாத பொருள்கள்

அண்மையில் பெய்த மழையினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட 100 குடும்பங்களுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்டம் அலுவலகத்தினால் உணவல்லாத பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி, கண்டாவளை பிரதேசத்துக்கு உட்பட்ட பரந்தன் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட 100 பயனாளிகளுக்கு இவ்வாறு உணவல்லாத பொருள்கள் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டுள்ளன. (ம-8)

# ஆசிரியர் பற்றாக்குறையால் மாணவர் பாதிப்பு

கிளிநொச்சி,ஜன.28

கிளிநொச்சி ஆனைவிழுந்தான் அ.த.க பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதால் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் பாதிப்படைந்து வருவதாகப் பெற்றோர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.தரம் ஒன்று தொடக்கம் தரம் ஏழு வரை உள்ள இப்பாடசாலையில் மாணவர் தொகைக்கேற்ப ஆசிரியர் இல்லை. அத்துடன் தரம் ஒன்று - தரம் ஏழு வரை பாடசாலை அனுமதிகள் வழங்கப்பட்ட போதிலும் தரம் ஆறு மற்றும் தரம் ஏழு ஆகிய வகுப்புக்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கற்றல் நடவடிக்கைகள் நடைபெறுவதில்லை.

இதனால் மாணவர்களின் எதிர்காலம் பாதிப்படைய வாய்ப்புள்ளது. அத்துடன் இப்பாடசாலையில் அனுமதி பெற்றுவிட்டு பிள்ளைகளுக்கு வேறு பாடசாலைகளில் அனுமதி பெறமுடியாது.

எனவே மாணவர்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பெற்றோர் கோரிக்கை விடுக்கின்றனர். (க-313)

# நிதி வழங்கப்படாமையால் வீதிப் புனரமைப்பில் தாமதம்

கிளிநொச்சி,ஜன.28

மன்னார் பிரதேச சபைக்கு உட்பட்ட 286 பிரதேச சபை வீதிகள் மீள்புனரமைப்புச் செய்யப்பட வேண்டும். ஆனால் முன்வைக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களுக்கான எண்ணக் கருப் பத்திரத்துக்கு நிதி வழங்கப்படுவதில்லை. இதனால் உரிய காலத்தில் பிரதேச சபை வீதிகள் மீள்புனரமைப்புச் செய்யப்பட முடியாதுள்ளது. மன்னார் பிரதேச சபைச் செயலாளர் சி.எம் யேசுநேசன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - பொதுமக்களும் பொது அமைப்புகள், சனசமூக நிலையங்களும் வீதி மீள் புனரமைப்புக் குறித்து தினமும் கடிதங்களை அனுப்பிய வண்ணம் உள்ளனர். ஆனால் அரசுக்கு முன்வைக்கப்படும் கருத் திட்டங்களுக்குநிதிப் பங்களிப்புகிடைப்பதில்லை. அத்துடன் மக்கள் பங்களிப்புடன் முன் வைத்த 'நெல்சிப்' திட்டத்திற்கும் இதுவரை நிதி கிடைக்கவில்லை. இதனால் அபிவிருத்திகளை உடன் எய்தப் படமுடியாதுள்ளது.

நிதி ஒதுக்கீடு கிடைக்கும் பட்சத்திலேயே வீதி அபிவிருத்திகள் இடம்பெறும் என பிரதேச சபை செயலாளர் சி.எம்.யேசுநேசன் மேலும் தெரிவித்தார்.

(க-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழ்கடல் தொழிலுக்கு அனுமதியில்லை; கரைச்சி கடற்றொழிலாளர்கள் அவதி

விசுவமடு,ஜன.28

ஆழ்கடல் தொழில்களுக்கான அனுமதிகள் வழங்கப்படாமை யினால் தாங்கள் தொழில்வாய்ப் பின்றி இருப்பதாக கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேசத்திற்கு உட்பட்ட கரைச்சி வடக்கு கடற்றொழில் கிராமங் களான தட்டுவன்கொட்டியில் 345 கடற்றொழிலாளர்களும் உமையாள்புரம், பரந்தன் ஆகிய இடங்களில் 110 கடற்றொழி லாளர்களும் காஞ்சிபுரம், குமர புரம் ஆகிய இடங்களில் 125 கடற்றொழிலாளர்களும் நாகேந் திரபுரத்தில் 245 கடற்றொழி லாளர்களும் தர்மபுரத்தில் 275 கடற்றொழிலாளர்களும் கல் லாறு கிராமத்தில் 175 கடற் றொழிலாளர்களும் கண்ணகி நகரில் 82 கடற்றொழிலாளர் களும் என 1357 கடற்றொழிலா ளர்கள் மீள்குடியமர்ந்துள்ளனர்.

இந்த நிலையில் தமக்கான ஆழ்கடல் தொழில்களுக்கான அனுமதி கிடைக்கவில்லை எனவும் இதனால் தாங்கள் எது வித தொழில்வாய்ப்புகளும் இன்றி பெரும் சிரமம் அடை வதாகவும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் கடற்றொழில் தவிர வேறு எதுவித தொழில்களும் தங்களுக்குத் தெரியாது என வும் அவர்கள் கூறுகின்றனர்.

இவ்வாறு கடற்றொழில் களுக்கான அனுமதிகள் கிடைக் கப் பெறாமையினால் பெரும் சிரமங்களையும் எதிர்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ள னர். உரிய அதிகாரிகள் இதற் கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்படுகிறது. (ம-6)

# வவுனிக்குள வாய்க்கால்கள் சேதம் புனரமைத்துத் தரக் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜன.28

முல்லைத்தீவு, வவுனிக்குளத்தின் பிரதான நீர்ப்பாசன வாய்க்கால் கள் நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமையால் விவசாய நடவடிக்கை கள் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பெரும் நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றாக வவுனிக்குளம் அமைகின்றது. இந்நிலையில் குளத்தின் அணைக்கட்டு பலவீனமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனைவிட வவுனிக்குளத்தில் இருந்து விவசாய நிலங்களுக்கு நீரினைக் கொண்டுசெல்லும் இடதுகரைப் பிரதான வாய்க்கால், மத்திய துருசு பிரதான வாய்க்கால், வலதுகரைப் பிரதான வாய்க்கால் என்பன சேதமடைந்து காணப்படுகின்றன. வயல்களுக்கு நீரைக் கொண்டு செல்லும் கிளை வாய்க்கால்களும் அவற்றுக்கான வீதிகளும் என்று மில்லாதவாறு சேதமடைந்து, பற்றைக்காடுகள் மண்டிக்காணப் படுகின்றன. அத்துடன் பிரதான வாய்க்கால் வீதிகளில் உள்ள பாலங்கள், வயல்வெளி வாய்க்கால் வீதிகளில் உள்ள பாலங்கள், மதகுகள் என்பனவும் சேதமடைந்துள்ளன. இவற்றினைப் புனரமைத்துத் தரும் படி அந்த மக்கள் கேட்டுள்ளனர். (10-6)

# அநாதரவான நிலையில் முதியோர்

கிளிநொச்சி,ஜன.28

கிளிநொச்சி மாவட்டத்தில் முதி யோர்கள் அநாதரவாகக் கைவிடப்பட்ட நிலையில் மன உளைச்சல்களுடன் உள்ளதை அவதானிக்க முடிவதாக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

போரின் போது உறவுகளைப் பறி கொடுத்தும், பிரிந்தும் உள்ள குடும்பங் கள் கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகம் குறிப்பாக தடுப்பு முகாம்களில் உள்ள பிள்ளைகளின் பெற்றோர், உறவினர் கள் கைகொடுக்காத நிலையில் தனி மையில் பலவிதமான உளத் தாக்கங் களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

இவர்களைப் பாரமரிப்பதற்கு அல்லது பொறுப்பேற்பதற்கு முதியோர் இல்லம் ஒன்று கிளிநொச்சி மாவட்டத்தில் அமைக்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-313)

நல்ல விழா...



சிறப்பான நடனம்: முல்லைத்தீவு செம்மலை மகா வித்தியாலயத்தின் கால்கோள் விழாவில் மாணவிகள் வரவேற்பு நடனத்தை நிகழ்த்துகின்றனர். (555)

# பளை மக்களால் சேகரிக்கப்பட்ட பொருள்கள் கிழக்கே

கிளிநொச்சி,ஜன.28

கிழக்கு மாகாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோ கிக்க வென பளைப் பிரதேச மக்களால் சேகரிக்கப்பட்ட உதவிப் பொருள்கள் பச் சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவை யினால் கிளிநொச்சி மாவட்ட செயலகம் ஊடாக லொறியில் கொண்டு செல்லப் பட்டுள்ளன.

38 ஆயிரம் தேங்காய், உடுபுடை வைகள், உணவுப் பொருள்கள் போன்ற ஒரு லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பொருள் கள் மக்களிடம் சேகரிக்கப்பட்டு கொண்டு செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட் டது.

அண்மையில் பெய்த தொடர் மழை யால் கிழக்கு மக்கள் பெரும் பாதிப்புக்குள் ளானமை குறிப்பிடத்தக்கது. (ஓ-207)

# மாந்தை கிழக்கில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் அடிப்படை வசதிகளின்றிச் சிரமம்

கிளிநொச்சி,ஜன.28

முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்த மக்கள் தமக்குப் போதிய அடிப்படை வசதிகள் இதுவரை ஏற்படுத்தித் தரப்பட வில்லை எனவும் இதனால் தாங்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத் தின் மாந்தை கிழக்கு பிரதேசத் திற்கு உட்பட்ட பாண்டியன் குளம், நட்டாங்கண்டல், கரும் புள்ளியான், மூன்றுமுறிப்பு, பாலிநகர், சிவபுரம், கொல்ல விளாங்குளம், வன்னி விளாங் குளம், சிறாட்டிக்குளம், உள்ளிட்ட 15 கிராம அலுவலர் பிரிவு களில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு மீளக்குடியேற்றம் செய்யப்பட்ட பகுதிகளில் 70 வீதமான மக்கள் இன்றுவரை வாழ்விட வசதிகள் இன்றி காணப்படுகின்றனர்.

அத்துடன் நட்டாங்கண்டல் குடியிருப்புகளுக்கான பிரதான வீதி முதல் சிறு வீதிகள் வரை யும் ஒட்டங்குளம், கொம்பறுத்த குளம், கரும்புள்ளியான், பனங் காமம் ஆகிய கிராம வீதிகளும் இதுவரை புனரமைக்கப்படா மல் இன்றுவரை குண்டும் குழி யுமாகக் காணப்படுகின்றன.

இதனால் இப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பயணிக்க முடி யாமல் பெரும் சிரமங்களையும் எதிர்நோக்கிவருகின்றனர்.

அத்துடன் மிகநீண்டதூரக் கிராமங்களில் தங்களின் அடிப் படைத் தேவைகளை நிறைவு செய்வதாயின் மல்லாவி நக ருக்கோ அல்லது மாங்குளம், கிளிநொச்சி, வவுனியா என்றே செல்லவேண்டியுள்ளதாகவும் அதற்கான சீரான போக்கு வரத்து வசதிகள் எவையும் இல்லையெனவும் தெரிவிக் கின் றனர்.

போதிய மருத்துவ வசதிகள் கூட இல்லை எனவும் இப் பகுதிகளில் மீளக்குடியேறியுள்ள மக்கள கவலை தெரிவித்துள்ள னர்.

இதேவேளை -

தாங்கள் மீளக் குடியமர்ந்து ஒரு வருடத்தை கடந்துள்ள நிலையிலும் தமக்கான போதிய அடிப்படை வசதிகள் எவையும் இல்லையெனவும் கவலை தெரி வித்துள்ளனர். (ம-6)

கிளிநொச்சி கல்வி வலயத்தில்

# 85 பாடசாலைகள் மீள இயங்குகின்றன

கிளிநொச்சி,ஜன.28

கிளிநொச்சி கல்வி வலயத் தில் உள்ள 103 பாடசாலை களில் 85 பாடசாலைகள் மீள இயங்கி வருவதுடன் மேலும் இரு புதிய பாடசாலைகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன.

கிளிநெச்சி கல்வி வலயத் திற்கு உட்பட்ட கரைச்சி, கண் டாவளை, பளை, பூநகரி ஆகிய கல்விக் கோட்டங்களின் கீழ் உள்ள 103 பாடசாலைகளில் 85 பாடசாலைகள் மீள ஆரம்பிக் கப்பட்டுள்ளன.

அத்துடன் கண்டாவளைக் கோட்டத்திற்குட்பட்ட முரசு மோட்டை முருகானந்தா ம.வி யின் ஆரம்பப் பிரிவிற்கான முரசுமோட்டை முருகானந்தா ஆரம்பப் பாடசாலையும், கிளி நொச்சி மத்திய கல்லூரியின் ஆரம்பப் பிரிவும் என இரண்டு பாடசாலைகள் கடந்த வாரம் முதல் ஆரம்பிக்கப்பட்டு தற் பொழுது 87 பாடசாலைகள் இயங்கி வருகின்றன.

கரைச்சிக் கல்விக் கோட்டத் தில் 34 பாடசாலைகளும் பூநகரி கல்விக் கோட்டத்தில் 20 பாட சாலைகளும் கண்டாவளை கல்விக் கோட்டத்தில் 18 பாட சாலைகளும், பளைக் கல்விக் கோட்டத்தில் 11 பாடசாலை களும் என 83 பாடசாலைகள் இயங்கத் தொடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-6)

# மலையாளபுரம் ஆற்றில் வெளியார் மணல் அகழ்வு

கிளிநொச்சி,ஜன.28

கிளிநொச்சி மலையாளபுரம் கிராமத்தின் எல்லைப்புற ஆற் றில் வெளியாள்கள் அனுமதியின்றி அதிகளவு மணலினை அகழ்ந்துகொண்டு செல்வதால் இக்கிராம மக்கள் தமக்குத் தேவையான மணலைப் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர் கொள்ள வேண்டி வருமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் பல கிராமங்களுக்கு வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளதால் அதிகளவானோர் அனுமதியின்றி மணல் அகழ்வில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இந்த நிலையில் மலையாளபுரத்தில் வீட்டுத் திட்டங்கள் வழங்கப்படும் பட்சத்தில் மணலுக்குத் தட்டுப்பாடு ஏற்படக் கூடும் எனக் கிராம அபிவிருத்திச் சங்கத்தால் தகவல் தெரிவிக் கப்பட்டுள்ளது. (க-3...)

# வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கு மரவேலை, தையல் பயிற்சிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.28

வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கான மரவேலைப் பயிற்சியும் தையல் பயிற்சியும் கிளிநொச்சி குருகுலத்தில் இடம் பெறவுள்ளது.

18-38 வயதுக்கு இடைப் பட்ட இளைஞர், யுவதிகள் மேற் படி பயிற்சியில் கலந்துகொள் ளலாம்.

இவ்வாறு மாகாதேவா ஆச் சிரம சைவ சிறார் இல்லத் தலை வரும் மாகாண பொது நிர்வாக பிரதி பிரதம செயலாளருமான தி.இராசநாயகம் அறிவித்துள்ளார்.

முதற்கட்டமாக தையல் பயிற் சியில் 50 பேருக்கும் மரவேலைப் பயிற்சியில் 50 பேருக்குமாக மொத்தம் 100 பேருக்குப் பயிற்சி கள் வழங்கப்படவுள்ளன. பயிற் சிக் காலத்தின் போது இணைந்து கொள்ளும் பயனாளி களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படும் வதுடன் - பயிற்சி முடிவின் பின்னர் தேசிய தரச் சான்றி தழும், உப கரணங்களும் வழங் கப்படும்.

விண்ணப்பங்களை எதிர் வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும் அவர் கேட்டுள்ளார். விண்ணப்பங்கள் யாவும் தலைவர், குருகுலம் - மகாதேவா சைவசிறார் இல்லம், ஜெயந்தி நகர், கிளிநொச்சி என் னும் முகவரிக்கு அனுப்பிவைக் கப்படவேண்டும்.

இதேவேளை முதலில் வரும் விண்ணப்பங்கள் மட்டும் பரி சீலனை செய்யப்பட்டுத் தகுதி யானவர்கள் இணைத்துக் கொள் ளப்படுவர். என்று தி.இராசநாய கம் தெரிவித்தார். (க-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டங்களின் விலையேற்றத்திற்கு அரசு வெள்ளத்தைக் காரணம் கூற முயற்சிக்கிறது!

கண்டி, ஜன.28

மக்களின் வாழ்க்கைச் செலவீனத்தைக் கட்டுப்படுத்த முடியாத அரசானது, தனது இயலாமையை மறைப்பதற்கு வெள்ளத்தைக் காரணம் காட்ட முயற்சிக்கின்றது - என ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

முட்டை மற்றும் மரக்கறிகளின் விலையேற்றத்திற்கு மழை வெள்ளமே காரணம் என அரசு கூறுகிறது. 14 இராணுவ வாகனங்களில் கொழும்புக்கு மலைநாட்டுக் காய்கறிகளை எடுத்துவந்து விற்பதனால் அவற்றின் விலையைக் கட்டுப்படுத்த முடியாது. ஏனெனில் தம்புள்ள, கெப்பிட்டிப்பொல போன்ற இடங்களிலிருந்து இன்னும் 500 லொறிகளில் காய்கறிகள் கொழும்புக்கு வருகின்றன.

வெங்காய உற்பத்தியில் ஒழுங்கமைப்புக் கிடையாது. தம்புள்ள, மொனராகலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் ஒரே பருவத்தில் அறுவடை செய்யப்படுவதில்லை. அவ்வப் பிரதேச மழை வீழ்ச்சியை மையமாக வைத்தே அவை உற்பத்தியாகின்றன. இதைச் சாதகமாகக் கொண்டு அவ்வப்போது பகுதி அடிப்படையில் உற்பத்திகளை திட்டமிட முடியும்.

நெல் உற்பத்தியின்போது பெரும்போகத்தில் ஒரு வருடத்திற்கான 80 சதவீத தேவையைப் பூர்த்திசெய்யக் கூடிய அறுவடை கிடைக்கிறது. களஞ்சிய வசதி இன்மையும் விவசாயின் பொருளாதார நெருக்கடியும் அவற்றை உடன் விற்க வேண்டிய சூழ்நிலையை உருவாக்கிவிடுகின்றன.

எஞ்சிய உற்பத்தியை அரசு கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்தவேண்டும். இதனால் தட்டுப்பாடு ஏற்படும்போது அரசு கையிருப்பைப் பயன்படுத்தமுடியும். இவ்வாறு பல்வேறுபட்ட திட்டமிடப்பட்ட பொருளாதாரக் கட்டமைப்பொன்று ஏற்படுத்தப்படவேண்டும் - இவ்வாறு அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

(204)

## வீதிக்கும் இப்படியா...



பாதிப்பு: கம்பளை- பேராதனை பிரதான வீதியில் பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்திற்கு அண்மையில் மண்சரிவு ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது. இதற்கான அறிகுறியாக பாதை ஓரத்தில் வெடிப்பு தோன்றி கீழ் இறங்கியுள்ளது. (204)

## அதிக மழையால் வெலிமடையில் தோட்டங்கள் நாசம்

இடைவிடாது பெய்துவரும் அதிக மழையால் வெலிமடைப் பிரதேசத்தில் பயிர்கள் அழுகி நாசமாகியுள்ளன.

தொடர்ந்து மழை பெய்து வருவதால் பயிர்களுக்கு எவ்வித பராமரிப்பையும் மேற்கொள்ள முடியாமல் இருக்கின்றது என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்தநிலை நீடித்தால் ஏற்கனவே உயர்ந்துள்ள மரக்கறிகளின் விலை மேலும் உயர்வடையுமெனக் கூறப்படுகிறது. (ளி)

# அதிகாரிகளின் செயற்பாட்டால் வர்த்தகர்கள் திண்டாட்டம்

நுவரெலியா, ஜன.28

நோர்வூட் பகுதி வர்த்தகர்கள் தாம் திட்டமிட்ட முறையில் பழிவாங்கப்படுகின்றனர் எனத் தெரிவிக்கின்றனர்.

நோர்வூட், டிக்கோயா, டின்சின் மற்றும் அதனையண்டிய தோட்டப்புறக் கடைகளுக்கு பயணம் செய்யும் சுகாதார பரிசோதகர்கள், விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள், விற்பனை வரிப் பரிசோதகர்கள், வருமான வரி அதிகாரிகளினாலேயே தாம் இவ்வாறு பழிவாங்கப்படுகின்றனர் என்று அவர்கள் கூறுகின்றனர்.

குறிப்பாக சிகரட் விற்பனை செய்யும் கடைகளின் உரிமையாளர்கள் புதுவிதப் பழிவாங்கல் நடவடிக்கைக்கு உள்ளாகி வருகின்றனர் என்று கூறப்படுகின்றது.

குறித்த சில அதிகாரிகள் தம்மால் திட்டமிட்ட ஒருவரை அனுப்பி சிகரட் வாங்க வைத்து பின்னர் அவருக்கு 20 வயது தான் ஆகிறது என்று அடையாளப் படுத்தி 21 வயதுக்குக் குறைந்த ஒருவருக்கு எப்படி சிகரட் விற்க முடியும் எனக் கேட்டு வழக்குத் தாக்கல் செய்கிறார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான செயற்பாடு ஒரேநாளில் சுமார் 40 - 50 கடைகளில் நடைபெறுகின்றது. இது தொடர்பாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் எதிர்வரும் 2 ஆம் திகதி விசாரணைக்கு வரவிருக்கின்றன என்று வர்த்தகர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். இதை ஒரு திட்டமிட்ட பழி வாங்கல் நடவடிக்கையாகவே இப்பகுதி வர்த்தகர்கள் கருதுகிறார்கள்.

எனவே மேற்படி தாக்கல் செய் யப்பட்டுள்ள வழக்குகள் தொடர்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் தலையிட்டு தமது இக்கட்டு நிலைக்கு தீர்வுபெற்றுத்தர வேண்டும் - என வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ளி)

# நீங்காத நினைவில் முப்பத்தொரு நாள்கள்...

## அமரர் பொன்னுச்சாமி நாகலிங்கம்



மண்ணில் 28.11.1933

விண்ணில் 29.12.2010

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வத்துள் சென்றவரே
நின் நினைவு வந்து
நித்தம் எமை வாட்டுதையா

காலங்கள் எவ்வளவு வேகமாக நகர்கிறது
கண்ணயர்ந்த சில நாள்களில்
முப்பத்தொரு நாள்கள் கடந்ததும்
முள்ளாக எம் மனதில் குத்துதையா உம் நினைவு
அன்புடனும் பண்புடனும்
அவனியில் அனைவரையும் அரவணைத்த
அந்த இனிய நாள்கள் வந்து
உந்தன் நினைவைக் கூட்டுதையா

முப்பத்தொன்றென்ன இன்னும்
முன்னூறு ஜென்மங்கள் கடந்தாலும்
உம் ஆன்மா இறைவனில் ஈடேற
எந் நாளும் இறைவனிடம் நாம் தொழுவோம் உமக்காக!

Students University of Wolver Hamption
United Kingdom

(ஸ/575264)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறை வைத்தியசாலையில் அபிவிருத்தி வேலைகள் ஆரம்பம்

அம்பாறை, ஜன.28

அம்பாறை பொது வைத்தியசாலையில் இந்த வருடத்தில் பல்வேறு அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சர் அண்மையில் நேரில் விஜயம் செய்து வைத்தியசாலையைப் பார்வையிட்டார். அப்போது வைத்திய சாலையின் பணிப்பாளர் டாக்டர் எஸ்.ஜெயசிங்க முக்கிய தேவைகள் அடங்கிய வேலைத்திட்ட அறிக்கையொன்றை அவரிடம் கையளித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அம்பாறை மாவட்ட மக்கள் வைத்திய சிகிச்சைக்காக கொழும்பு, கண்டி ஆகிய இடங்களிலுள்ள வைத்தியசாலைகளையே நாடுகிறார்கள். மாவட்டத்திலுள்ள தனியார் மருத்துவ மனைகளில் கூடுதலான பணம் செலுத்தியும் சிகிச்சை பெறுகிறார்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இந்த நிலைப்பாட்டை நீக்கும் பொருட்டு அம்பாறை வைத்தியசாலையில் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அத்துடன் கிழக்கு மாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. மாகாணத்திலுள்ள மூன்று மாவட்டங்களிலுமிருந்துவரும் வைத்திய அதிகாரிகள் பற்றாக்குறையை நீக்கும் பொருட்டு எதிர்வரும் பெப்ரவரி முதல் வாரத்தில் அம்பாறை மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளுக்கு 15 டாக்டர்களும், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளுக்கு 13 டாக்டர்களும் திருகோணமலை மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளுக்கு 5 டாக்டர்களும் நியமிக்கப்படவுள்ளனர் என சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# அபிவிருத்தித் திட்டங்களுக்கு மூன்று கிராமங்கள் தெரிவு

மட்டக்களப்பு, ஜன. 28

ஐரோப்பிய ஒன்றியத்தின் 90 வீதமான நிதியுடனும் ஜேர்மனின் 10 வீதமான நிதியுடனும் மட்டக்களப்பு மாவட்டத்தில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக மேலும் மூன்று கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

போரதீவுப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவில் சின்னவத்தை, பட்டிப்பளைப் பிரதேச செயலாளர் பிரிவில் தாந்தாமலை, ஏறாவூர் பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவில் கொடுவாமடு ஆகிய கிராமங்களே அபிவிருத்திக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தக் கிராமங்களில் சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்துதல், மனிதப் பண்புகளை மேம் படுத்துதல் , கட்டுமானப் பணிகள் ஆகியவை மேற்கொள்ளப்படவுள்ளன. இந்தத் திட்டம் தொடர்பாக கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க மட்டக்களப்புக் கிளைக் காரியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் திட்ட முகாமையாளர் கென்றியஸ் கூஸ் விளக்கமளித்துள்ளார். இந்த நிகழ்வில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க மர்வட்டக் கிளைத் தலைவர் த.வசந்த ராசா, குறித்த பிரிவுகளின் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சித்திரக் கலைத்துறைக்கு கிழக்கில் மீண்டும் புத்துயிர்

மட்டக்களப்பு, ஜன.28

கிழக்கு மாகாணத்தில் சித்திரக் கலைத்துறைக்கு மீண்டும் புத்துயிர் அளிக்கவும் பாடசாலை மாணவர்களிடையே அதைப் பிரபல்யப்படுத்தவும் கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

கிழக்கின் உதயம் என்னும் தலைப்பின் கீழ் பாடசாலை மாணவர்களிடையே சித்திரப் போட்டிகள் நடத்தப்படும். வெற்றி ஈட்டும் மாணவர்களுக்குப் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும் என கிழக்கு மாகாண அழகியல் துறைக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் சாள்ஸ் தயானந்தா தெரிவித்துள்ளார்.

சித்திரப் பாட ஆசிரியர்களுக்கான விசேட செயலமர்வுகள் மூதூர், கந்த ளாய், அம்பாறை, பதியத்த லாவ, மகா ஓயா, தெஹியத்த கண்டிய, மட்டக்களப்பு, பட்டிருப்பு ஆகிய கல்வி வலயங்களில் நடத்தப்படும் என்றும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார். (ஏி)

## இலகுவாகப் பயணிக்க...



புனரமைப்பு: அம்பாறை மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட வீதிகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. (204)

# தமிழ் இனத்தின் அடையாளங்களை எழுத்தாளர்கள் ஆவணமாக்க வேண்டும்

திருகோணமலை,ஜன.28

எங்களுடைய இனத்தின் சான்றுகளைக் கவிதைகளாக வடித்து, வளர்க்க வேண்டும். காலங்காலமாக எமது தமிழினத்தின் அடையாளங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. நாங்கள் இழந்த அடையாளங்களை எழுத்தாளர்கள், கவிஞர்கள் ஆகியோர் ஆவணமாக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் திருகோணமலை நகரசபையின் முன்னாள் தலைவர் க.செல்வராஜா.

தில்லைநாதன் பவித்திரனின் 'ரசவாதம்' கவிதை நூல் வெளியிட்டு விழா கடந்த சனிக்கிழமை திருகோணமலை நகரசபையின் நகராட்சி மன்ற மண்டபத்தில் நடைபெற்றது. இந்த விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கவிதை என்றால் அது வரலாற்றின் கதையாக இருந்து, விதையாக மாறி, எமது உள்ளத்தில் உறைய வேண்டும். அப்போதுதான் அக்கவிதை காலத்தால் அழியாது நிலைத்து நிற்கும்.

பவித்திரனின் கவிதைகள் சிலவற்றில் தமிழரின் இன்றைய நிலைப்பாடு ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. இன்னும் அவர் நிறைய எழுதவேண்டும்.

தமிழரின் வரலாற்றை, தமிழரின் அடையாளத்தை தொல்காப்பியம் எடுத்துக்காட்டுகின்றது. தமிழருக்கென்று பல அடையாளங்கள் இருக்கின்றன. அவற்றில் தந்தை செல்வா தமிழரின் அரசியல் அடையாளம்.

பாரதி தனது கவிதைகள் மூலம் இன உணர்வை உண்டாக்கினார். இன்றைய ஈழத்துக் கவிஞர்கள் தமிழரின் வீரத்தையும், சரித்திரத்தில் இடம்பிடித்த விடயங்களையும் இடங்களையும் கவிதைகளாக்க வேண்டும். இந்த விடத்தில் பகிரங்கமாகவே இந்த வேண்டுகோளை விடுக்கின்றேன்- என்றார்.

இவ்விழாவில் முதன்மை விருந்தினராகத் திருகோணமலை மாவட்டக் கலை இலக்கிய ஒன்றியத் தலைவர் திருமலை நவம் கலந்து கொண்டு உரையாற்றுகையில்,

காலத்தின் தேவை கருதி படைப்பாளிகள் படைப்புகளைப் படைக்கவேண்டும். திருகோணமலை மாவட்டத்தில் இதுவரை சுமார் 154 கவிதைப் புத்தகங்கள் வெளிவந்திருக்கின்றன.

எனினும் இந்த மண்ணினுடைய வரலாற்றை தமிழரின் போராட்ட வரலாற்றைச் சொல்கின்றவர்கள் மிகக் குறைவாகவே இருக்கின்றார்கள். திருமலை எழுத்தாளர்களே! எமது வரலாற்றைப் பதிவுகளாக்க முயற்சி செய்யுங்கள் -என்றார். இந்த நிகழ்வில் எழுத்தாளர்கள், கவிஞர்கள், இலக்கிய ஆர்வலர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஏி)

# திருமலையில் தொடர் மழையால் நுளம்புத் தொல்லை

திருகோணமலை, ஜன.28

திருகோணமலை மாவட்டத்தில் அண்மையில் பெய்த அடை மழையாலும் ஏற்பட்ட வெள்ளப் பெருக்காலும் பல கரையோரப் பிரதேசங்களில் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளது.

அண்மையில் தொடர்ந்து பெய்த மழை காரணமாக கரையோரப் பிரதேசங்களில் வெள்ளம் வழிந்தோட முடியாமால் தேங்கி நிற்பதனால் நுழம்புப் பெருக்கம் அதிகரித்துள்ளது. இதனால், மலேரியா, டெங்கு ஆகிய நோய்கள் பரவும் அபாயம் தோன்றியுள்ளது என மாவட்ட சுகாதாரப் பணிமனை எச்சரிக்கை விடுத்துள்ளது.

வீடுகள், பாடசாலைகள், பொது இடங்கள் ஆகியவற்றில் குவியும் குப்பை கூளங்களை அகற்றுமாறும், நீர் தேங்கும் பொருள்களைப் புதைத்து விடுமாறும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம் சுற்றாடலில் நுளம்புகள் பெருகுவதையும் நோய்கள் பரவுவதை முன்கூட்டியே தடுக்கமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொதித்தாறிய சுத்தமான குடிதண்ணீரைப் பொதுமக்கள் தொடர்ந்து பயன்படுத்தும் போது தொற்றுநோய்கள் ஏற்படாமல் தவிர்க்க முடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஏி)

# கிழக்கில் வெள்ளத்தின் பின்னர் நெற்பயிர்களுக்கு நோய்கள்

மூதூர், ஜன. 28

திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் கிழக்கு கிளிவெட்டி, ஈச்சிலம்பற்று, தம்பலகாமம் ஆகிய பிரிவுகளில் பெரும்போக நெற்செய்கை பண்ணப்பட்ட பல ஆயிரம் ஏக்கர் வயல்கள் நீரில் மூழ்கியுள்ளன. இதனால் விவசாயிகள் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்குகின்றனர்.

குடலை, கதிர்ப் பருவ வேளாண்மையே பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. வெள்ளப் பாதிப்பிலிருந்து மீண்ட வேளாண்மை தற்போது வாடல், இலை சுருட்டி, தந்துக்குத்தி, அறக்கொட்டியான் ஆகிய நோய்களுக்கு இலக்காகி வருகிறது. விவசாயத் திணைக்களத்தால் சிபார்சு செய்யப்பட்ட கிருமிநாசனி தெளித்தும் உரிய பலன் கிட்டவில்லை.

மழை ஓய்ந்ததன் பின்னர் நிலவும் குளிரான காலநிலையே இந்த நோய்கள் தீவிரமாகப் பரவக் காரணியாகும் என விவசாயிகள் தெரிவிக்கிறார்கள். இந்த நோய்களால் இம்முறை நெல் விளைச்சலில் பாரிய வீழ்ச்சியேற்படும் என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

# தென்கிழக்குப் பல்கலைக்கு குவைத் தூதுவர் வருகை

அம்பாறை, ஜன.28

இலங்கைக்கான குவைத் தூதுவர் யாகூப் வை. அல்-அத்தீக் தென்கிழக்கு பல்கலைக் கழகத்திற்கு கடந்த செவ்வாய்க்கிழமை பயணம் மேற்கொண்டுள்ளார். தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் இடம் பெறும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களையும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தின் நிலையையும் தூதுவர் பார்வையிட்டார்.

உபவேந்தர் கலாநிதி எஸ்.எம்.எம்.இஸ்மாயில் தலைமையில் தூதுவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்த நிகழ்வுகளில் தென்கிழக்கு பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் ஏ.இஸ்ஹாக், பதிவாளர் எச்.அப்துல் சத்தார் ஆகியோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுரைச்சோலை மின் உற்பத்தி அடுத்த வாரம் ஆரம்பம்

கொழும்பு, ஜன.28

இலங்கையின் முதலாவது அனல்மின் உற்பத்திநிலையமான நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் மின் உற்பத்திப் பணிகள் அடுத்தவாரம் ஆரம்பிக்கப்படும் என மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த அனல்மின் உற்பத்தி நிலையத்தின் முதலாம்கட்ட நிர்மாணப் பணிகள் முடிவடைந்துள்ள நிலையில் 300 மெகா வோட் மின்சாரம் அடுத்த வாரம் முதல் தேசிய மின்உற்பத்தியுடன் சேர்க்கப்பட உள்ளது.

சீன அரசின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்படும் இந்த அனல்மின் உற்பத்தி நிலையத்தின் மூலம் மொத்தம் 900 மெகா வோட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படவுள்ளது.

இதன் முதலாம்கட்ட நிர்மாணப்பணிகள் தற்போது முடிவடைந்துள்ளன.

அடுத்த கட்ட நிர்மானப் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நுரைச் சோலை அனல் மின்நிலையத்தின் நிர்மாணப் பணிகள் அனைத்தும் 2014ஆம் ஆண்டில் நிறைவு பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சி)

# புறக்கோட்டையில் வர்த்தக நிறுவனங்கள் இடிக்கப்பட்டதை எதிர்த்து ஐ.தே.க. போராடும்

கொழும்பு, ஜன. 28

கொழும்பு புறக்கோட்டையில் அமைந்திருந்த 13 வர்த்தக நிலையங்களை இடித்து அகற்றியதற்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி கொழும்பு மக்களை ஒன்றுதிரட்டி போராட்டம் நடத்தும் என்று அக்கட்சி தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய மேல்மாகாண சபை உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் இதனைத் தெரிவித்தார்.

அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

கொழும்பு நகர் பாதுகாப்பு அமைச்சு நிர்வகிக்கும் நகராக மாறிவிட்டது. கொழும்பு புறக்கோட்டையில் அமைந்திருந்த 13 கடைகளை பாதுகாப்பு அமைச்சு கடந்த சனிக்கிழமை இடித்து அகற்றிவிட்டது.

இவை சட்டவிரோத கடைகள் அல்ல. மாநகர சபைக்கோ, வீடமைப்பு அதிகார சபைக்கோ அல்லது நகர அபிவிருத்தி சபைக்கோ சொந்தமானவையுமல்ல. அப்படியானதொரு நிலையில் பாதுகாப்பு அமைச்சு பலவந்தமாக இந்தக் கடைகளை இடித்து அகற்றியுள்ளது.

இதுதொடர்பான செய்தி ஊடகங்களில் வெளிவராதவாறு இருட்டடிப்புச் செய்யப்பட்டுவிட்டது. கடை உரிமையாளர்களுக்கு வெள்ளிக்கிழமை தகவல் வழங்கப்பட்டு சனிக்கிழமை கடைகள் இடித்து அகற்றப்பட்டன.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில்தான் இவ்வாறான வர்த்தகக் கட்டடங்கள் அமைக்கப்பட்டன. நாம் இவற்றை இடித்து அகற்ற நடவடிக்கை எடுக்கவில்லை.

வர்த்தகத்துக்குப் பாதிப்பு ஏற்படாமலேயே நாம் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்தோம். ஆனால் இந்த அரசு அனைத்தையும் இடித்துத் தள்ளிவிட்டு அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அதிகாரத்தை கையில் எடுத்துச் செயற்படுகின்றார். சட்டம் கவனத்தில் எடுக்கப்படவில்லை. புறக்கோட்டையில் உள்ள ஏனைய வர்த்தகர்களும் அச்சத்தில் உள்ளனர்.

அரசின் இந்தச் செயற்பாட்டுக்கு எதிராக நாம் கொழும்பு மக்களை ஒன்றுதிரட்டி போராட்டம் நடத்துவோம். - என்றார். (சி)

# 670 இடங்களில் மண்சரிவு அபாயம்

### மக்களை வெளியேற்ற நடவடிக்கை

கொழும்பு, ஜன. 28

நாட்டில் மண்சரிவு அபாயம் ஏற்படக்கூடிய 670 இடங்கள் ஐந்து மாவட்டங்களில் அடையாளம் காணப்பட்டுள்ளன என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவன மண்சரிவு ஆய்வு மற்றும் சேவைகள் பிரிவுத் தலைவர் ஆர். எம். எஸ். பண்டார தெரிவித்துள்ளார்.

அதற்கமைய கண்டியில் 247 வீடுகளிலிருந்தும் மாத்தளையில் 160 வீடுகளிலிருந்தும் மக்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வெள்ள அனர்த்தம் குறித்து விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

மாத்தளை மாவட்டத்தில் குடாரத் தொட்டி, மவுசாகெலை, போதிகொட ஆகிய பகுதிகளில் உள்ள 57 வீடுகளிலிருந்து கடந்த திங்களன்று மக்கள் அகற்றப்பட்டனர். இவர்களின் வீடுகளில் விரிசல் உருவாகி, உடைந்து வருகின்றன. மாத்தளை லக்சல வீதியும் மண்சரிவுக்குட்பட்டுள்ளது.

பதுளையிலும் மண்சரிவு அபாயம் உள்ள இடங்களில் மக்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கண்டி மாவட்டத்தில் 447 இடங்களில் ஆய்வு நடத்தினோம். பின்னர் 247 இடங்களிலிருந்து மக்கள் அகற்றப்பட்டுள்ளனர்-என்றார். (சி)

## நிவாரண பொருள்கள் இத்தாலியால் அனுப்பிவைப்பு

கொழும்பு, ஜன.28

அனர்த்த காலங்களில் நிவாரண உதவிகளை வழங்குவதற்கான உபகரணத் தொகுதி ஒன்றை இத்தாலி அரசு இலங்கைக்கு வழங்கியுள்ளது.

510 லட்சம் யூரோக்கள் பெறுமதியான இந்த உபகரணங்கள் இத்தாலியின் ரோம் நகரிலிருந்து விமானம் மூலம் கொழும்பு நோக்கி அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)



இலங்கை - இந்தோனேஷிய நாடாளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் புதிய தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள மு.கா.தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் அண்மையில் நாடாளுமன்றில் நடைபெற்ற கூட்டத்தில் அந்த நாட்டுத் தூதுவர் தஜவ்பர் ஹுசைன், சிரேஷ்ட அமைச்சர் பௌசி ஆகியோருடன் அமர்ந்திருக்கின்றார். (சி)

## களனி நகரசபையில் போட்டியிட மேர்வினின் மகனுக்குத் தடை

கொழும்பு, ஜன. 28

அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் களனி நகரசபைக்குப் போட்டியிட விருப்பம் தெரிவித்த போதிலும் அதற்கு அரசு அனுமதிக்கவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி நேற்றுத் தெரிவித்தது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக் கட்சியின் எம்.பி. ஹரீன் பெர்னாண்டோ இதனைத் தெரிவித்தார். அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை வெற்றிகொள்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சி மிகவும் ஒற்றுமையுடன் செயற்பட்டு வருகின்றது. அமைச்சர்களும் அமைப்பாளர்களும் கட்டிப்புரண்டு சண்டையிடுவதுபோல் நாம் சண்டையிடவில்லை. ஆனால் ஆரோக்கியமான முறையில் காரசாரமான விவாதங்கள் எமக்கிடையே இடம்பெறுகின்றன.

அதிக எண்ணிக்கையிலான அரச ஆதரவாளர்கள் தினமும் எமது கட்சியில் இணைந்து வருகின்றனர். கிராம மட்டத்தில் எமக்கு ஆதரவு அதிகரித்துக்கொண்டு வருகின்றது. மார்ச் 12 இற்கு பின் பெரும் எழுச்சி ஏற்படும்.உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் ஒரு குடும்பத்தில் ஒருவர் மட்டும்தான் அரசில் போட்டியிட முடியும் என்று அரசு கட்டுப்பாடு விதித்துள்ளது. ஆனால் ராஜபக்ஷவின் குடும்பம் முழுவதும் அரசில் உள்ளது.

அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் களனி நகரசபைக்குப் போட்டியிட விருப்பம் தெரிவித்தபோது அரசு அதற்கு அனுமதி வழங்கவில்லை - என்றார். (சி)

## இலங்கையருக்கு ஈராக்கில் மீண்டும் வேலைவாய்ப்பு

கொழும்பு, ஜன. 28

ஈராக்கில் இலங்கையர்கள் வேலைவாய்ப்புப் பெற்றுக் கொள்வதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடு நீக்கப்பட்டுள்ளது என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் நேற்றுத் தெரிவித்தது.

ஈராக்கில் யுத்தம் ஆரம்பித்த காலத்தைவிட, தற்போது அங்கு நிலைமை அமைதியாக இருப்பதால் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் நலன்புரி அமைச்சர் டிலான் பெரேரா இத்தீர்மானத்தை எடுத்துள்ளார் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்தார். (சி)

## பெண் போராளியை புனர்வாழ்வுக்கு அனுப்பாத சிறை அதிகாரி சிக்கலில்

கொழும்பு, ஜன. 28

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இராணுவத்திடம் சரணடைந்த விடுதலைப் புலிகளின் பெண் உறுப்பினர் ஒருவரை புனர்வாழ்வுக்குட்படுத்துமாறு நீதிமன்றம் இட்ட ஆணை மீறப்பட்டமை குறித்து கொழும்பு நீதிமன்றம் கவனம் செலுத்தியுள்ளது.

குறிப்பிட்ட விடுதலைப் புலிகளின் பெண் உறுப்பினருக்கு எதிரான வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, அவர் சார்பாக ஆஜரான சட்டத்தரணி அது குறித்து நீதிமன்றத்தின் கவனத்தை ஈர்த்தார்.

பிரஸ்தாப பெண் நீண்டகாலமாக வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அவரை புனர்வாழ்வுக்குட்படுத்துமாறு வெலிக்கடைச் சிறைச்சாலையின் பெண்கள் பிரிவுக்குப் பொறுப்பான பெண் சிறை அதிகாரிக்கு நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டிருந்தது. ஆயினும் அவர் அதை அலட்சியம் செய்துள்ளார்.

அதன் காரணமாகப் பிரஸ்தாப பெண் உறுப்பினர், விடுதலையாவதற்கான காலம் தள்ளிப்போயுள்ளது. அவருக்கு எதிரான வழக்கும் காலதாமதமாகியுள்ளது. அதனைக் கருத்திற்கொண்ட நீதிமன்றம் வெலிக்கடைச் சிறைச்சாலை பெண் அதிகாரியை நீதிமன்றத்துக்குச் சமுகம் அளிக்குமாறு அழைப்பாணை விடுத்துள்ளது. (சி)

# அண்மைய வெள்ளப் பெருக்கினால் 91ஆயிரம் கால்நடைகள் பாதிப்பு


அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் சுமார் 91,600 மாடுகள், எருமைகள், 38,000 ஆடுகள், 20,0000 கோழிகள் பாதிக்கப்பட் டுள்ளன என மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும் அவற்றில் எத்தனை விலங்குகள் உயிரிழந்துள்ளன என்பதை அதிகாரிகள் இன்னும் கணக்கிடவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான கள மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என விலங்கு வேளாண்மை மற்றும் அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் டாக்டர் நிமல் சந்திரசிறிதெரிவித்தார்.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் கால்நடைகளுக்கு பெரும்பாதிப்பு ஏற்பட்டது எனக் குறிப்பிட்ட அவர் மட்டக்களப்பு மாவட்டத்தின் தொப்பிகல போன்ற பகுதிகளின் நிலவரங்கள் இன்னமும் செல்ல முடியாத நிலையில் இருக்கின்றன என்று தெரிவித்துள்ளார்.

இ[illegible] இறந்த விலங்குகளின் சரியான எண்ணிக்கையை இனங்காண்பது [illegible] மேலும் கூறியுள்ளார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் ஜன்ம தினத்தை முன்னிட்டு வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் தும்பளை சிவப் பிரகாச மகாவித்தியாலய மாணவன் வி.யதீஸுக்கு பருத்தித்துறை ஸ்ரீ இராம கிருஷ்ண சாரதா சோவாச் சிரமத்தால் சைக்கிள் ஒன்று வழங்கப்பட்டது. செல்வச்சந்நிதி ஆலயத் தொண்டன் வ.ஆ.அதிரூபசிங்கமும் படத்தில் உள்ளார்.

# உப்புக்கும் தண்ணீருக்கும் கூட நாதியற்றுப் போய்விட்ட யாழ்ப்பாணம்

கடும் யுத்த காலமாக இருந்த கடந்த 30 ஆண்டுகளில் கூட யாழ்ப்பாணம் குடிதண்ணீருக்காகக் கொழும்பை நம்பி இருந்ததில்லை. ஆனால் தற்போது டசின், டசினாகத் தண்ணீர்ப் போத்தல்களை வெளிமாவட்டங்களில் இருந்து இறக்குமதி செய்யும் நாதியற்ற நிலையினை யாழ்ப்பாணம் அடைந்து வருகின்றது என்று தெரிவித்தார் யாழ். வர்த்தக கைத்தொழில் சங்கத்தின் தலைவர் பூரணச்சந்திரன்.

யாழ். நகரில் அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சர்வதேச வர்த்தகக் கண்காட்சியினை முன்னிட்டு யாழ்.பொது நூலகக் கேட்போர் கூடத்தில் 'வடக்கு மாகாணத்தில் பொருளாதார வர்த்தகச் சூழல்' எனும் தலைப்பில் கருத்தரங்கு இடம் பெற்றது.

இதனை யாழ். வர்த்தக கைத்தொழில் சங்கத்தின் தலைவர் பூரணச்சந்திரன் ஆரம்பித்து வைத்தார்.

"ஆனையிறவில் உற்பத்தி செய்யப்பட்ட உப்பினை இலங்கையின் எல்லா மாவட்டங்களுக்கும் விநியோகித்து வந்த யாழ்ப்பாணம், தற்போது இந்தியாவில் இருந்து உப்பை இறக்குமதி செய்து நுகருகின்ற நிலைக்கு வந்துள்ளது. இது யாழ்ப்பாணத்தின் நாதியற்ற நிலையினை வெளிப்படுத்துகின்றது" என்றும் தெரிவித்தார் பூரணச்சந்திரன்.

இலங்கையில் முதலீடு செய்யத் திட்டமிடுவோர் யாழ்ப்பாணத்தை விரும்புவது வரவேற்கத்தக்கது என்று தெரிவித்த அவர், "எடுத்துக்காட்டாக பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெறும் சர்வதேச வர்த்தக கண்காட்சியில் கூட சுமார் 150 காட்சிக்கூடங்கள் வரையிலேயே அமைக்கப்படும். ஆனால் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வர்த்தகக் கண்காட்சியில் சுமார் 300 வரையான காட்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளமை முதலீட்டாளர் கவனம் யாழ்ப்பாணத்தை நோக்கித் திரும்பியிருப்பதைக் காட்டுகின்றது" என்றார்.

தனது உரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழர்கள் யாழ்ப்பாண உற்பத்திகளை அதிகமாக விரும்புகின்றனர்.

அரிசிமா, பழவகைகள் போன்றவற்றை சிறப்பான உணவுப் பதனிடல் தொழில் நுட்பத்தை கையாண்டு இந் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியும்.

ஆனால் அதற்கான சிறந்த வசதிகள் இன்னும் கிடைக்கவில்லை. யாழ்ப்பாணத்தில் உட்கட்டுமானங்களில் அரசின் அவதானம் போதாமலே உள்ளது.

பிரதானமாக யாழ்ப்பாணத்துக்குள் நுழைவதற்காகக் காணப்படும் வீதியின் தரம் பருவகால மாற்றங்களுக்கு ஏற்ப மாறும் தன்மையுடையதாக இருப்பதும் முதலீட்டாளரின் ஆர்வத்தை பாதிக்கின்றது - என்றார்.

(ம)

## 'விஸ்வகீர்த்தி' விருது பெற்றார்



யாழ்ப்பாணம்,ஜன.28

சமாதான நீதிவான்களின் மனித உரிமைகள் அமைப்பின் சர்வதேசப் பணிப்பாளரும் யாழ். கல்வித் திணைக்கள முகாமைத்துவ உதவியாளருமான தாதபிள்ளை தர்மரட்ணம் சமூக சேவைக்கான விஸ்வகீர்த்தி கௌரவ விருதைப் பெற்றுள்ளார்.

பத்தரமுல்லவில் இடம் பெற்ற நிகழ்வில் இவர் பெற்றோலியத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, வண. கார்டினர் மல்கம் ரஞ்சித் ஆகியோரிடமிருந்து விருதையும் தங்கப் பதக்கத்தையும் பெற்றுக் கொண்டார்.

அரியாலையைச் சேர்ந்த இவர், அரியாலை வெட்டுக்குளம் புவனேஸ்வரி ஆலயத்தின் பரிபாலன சபையின் முன்னாள் தலைவரும் ஆலயத்தின் தேர்த் திருப்பணிச் சபையின் முன்னாள் தலைவருமாவார்.(ஐ)

## சைவத்திருமுறை சைவ சிந்தாந்த வகுப்புக்கள்

யாழ்ப்பாணம்,ஜன.28

சைவத் திருமுறை, சைவ சித்தாந்த வகுப்புக்கள் யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் பெப்ரவரி மாதம் ஆரம்பமாகவுள்ளன.

சைவத்திருமுறை, சைவசித்தாந்த வகுப்புக்கள் ஆகியன ஒவ்வொரு மாதமும் முதலாம், மூன்றாம் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9.30 மணிமுதல் பிற்பகல் 4.30 மணிவரை நடைபெறும்.

இவ்வகுப்புக்களில் திருமுறை பற்றிய விளக்கவுரை, பொருள் விளக்கம், பண்ணிசைப் பயிற்சி, சித்தாந்த சாத்திரங்கள், பண்டார சாத்திரங்கள் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இப்பயிற்சி வகுப்புக்களில் சமயதீட்சை பெற்றோரும், மாமிச உணவை உண்ணாதவர்களும் பங்குபற்றமுடியும். (ற)

# வர்த்தக மையமாக இருந்துள்ள யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம்,ஜன.28

பண்டுதொட்டு யாழ்ப்பாணம் முக்கிய வர்த்தகப் பரிமாற்ற மையமாக இருந்துள்ளது என்று யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவரும் தொல்பொருள் திணைக்கள இணைப்பாளருமான பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் கூறினார்.

யாழ்ப்பாணம் கிறீன் கிறாஸ் ஹோட்டலில் தொல்பொருள் ஆய்வுப் பட்டறையை ஆரம்பித்து வைத்துப் பேசிய பேராசிரியர் புஸ்பரட்ணம் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகை யில்:

பண்டு தொட்டு எமது பாளி இலக்கியங்களில் நாகதீபம் எனவும் தமிழ் இலக்கியங்களில் நாகநாடு எனவும் தனித்துவமாக அழைக்கப்பட்ட பிராந்தியம் இது.

அதன் பண்டைய இலக்கியங்களில் புகைபடர்ந்து காணப்பட்டாலும் 1980களின் பின் குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகள் அதன் புராதன வரலாற்றுக்கு வெளிச்சம் ஊட்டியுள்ளது.

யாழ்ப்பாணம் முக்கிய வர்த்தகப் பரிமாற்ற மையமாக இருந்துள்ளது. இது கோட்டையில் மேற்கொள்ளப்படும் ஆய்வில் கிடைத்த சான்றுகள் உறுதி செய்கின்றன.

இங்கு பௌத்த, இந்து மதங்கள் மட்டுமன்றி சமணம், ஆஜிவிக மதங்களும் முன்னர் இருந்திருக்கலாம். அவை எதிர்காலத்தில் இங்கு மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் மூலம் தெரியவரலாம்.

இஸ்லாமிய மதத்தை தென்னாசியாவின் ஏனைய மதங்களில் இருந்து வேறுபடுத்த 19நூற்றாண்டில் இந்துமதம் உருவாக்கப்பட்டது. அதற்குள் பௌத்த மதமும் உள்ளடங்குகிறது.

இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள அபிவிருத்தியில் கோட்டைப் புனரமைப்பு புதிய அத்தியாயமாகும். அதன் பாரம்பரிய மரபுரிமைச் சின்னங்களைக் கண்டறிந்து பாதுகாப்பது என்பது முக்கிய அம்சமாகும்.

அதற்கான வேலைத்திட்டங்களை மரபுரிமை அமைச்சும் இலங்கை தொல்லியல்துறையும் குடாநாட்டு அரசு நிறுவனங்களும் இணைந்து ஆரம்பித்துள்ளன. இதன் பேறாகக் கிடைக்கும் உண்மைகள் இலங்கை மக்களிடையே சகோதரத்துவம், கலாசார ஐக்கியம், அமைதி,. சமாதானம் வளர உதவும். - என்றார்

(ம-7-319)

# முதலீட்டுத் துறைகள் அடையாளம் காணப்பட்டன

இலங்கையில் தற்போது வணிகச் சூழல் சிறப்பாகக் காணப்படும் யாழ்ப்பாணத்தில் முதலீடு செய்வதற்கு உள்நாட்டவரும் வெளிநாட்டவரும் ஆர்வமாகவுள்ளனர். இதன் பொருட்டு வளங்களும் வாய்ப்புக்களும் சிறப்பாகக் காணப்படும் துறைகளை இலங்கை முதலீட்டுச் சபையின் யாழ்.பிராந்திய கிளை அடையாளம் கண்டுள்ளது - முதலீட்டுச் சபையின் யாழ். பிராந்திய பிரதிப் பணிப்பாளர் ஆர்.ஜெயமானன்.

விவசாயம் - மீன்பிடி, சுற்றுலா - விடுதிகள், வீடமைப்பு, மருத்துவ - சுகாதார கவனிப்பு சேவைகள், தகவல் தொழில் நுட்பம், கல்விச் சேவைகள் ஆகியவற்றுக்கு அதிக கேள்வியும் வளங்களின் உதவியும் யாழ்ப்பாணத்தில் தாராளமாக உள்ளதாகவும் யாழ். சர்வதேச வர்த்தகக் கண்காட்சியை ஒட்டி யாழ். பொது நூலகத்தின் கேட்போர் கூடத்தில் நடந்த 'வடக்கு மாகா ணத்தின் பொருளாதாரச் சூழல்' என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் தெரிவித்தார்.

"யாழ்ப்பாணத்தில் தற்போது 650,000 மக்கள் வாழ்கின்றனர். இவர்களில் 25,000 குடும்பங்கள் விவசாயத்திலும் 18,000 குடும்பங்கள் மீன்பிடியிலும் ஈடுபட்டுள்ளன. எனினும் ஏனைய துறைகளிலும் மக்களின் பொருளாதார பங்களிப்பை அதிகரிக்க வேண்டும். குறிப்பாக சுற்றுலாத் துறையில் முதலீடு செய்வதற்கு வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி, வேலணை, மண்டைதீவு, ஊர்காவற்றுறை, அனலைதீவு ஆகிய பிரதேசங்கள் பொருத்தமாக உள்ளன.

சாவகச்சேரி, கைதடி, கோப்பாய் போன்ற பிரதேசங்கள் நடுத்தர வகுப்பு மக்களுக்கான தொடர் மாடிக் கட்டடங்கள் அமைய [illegible]

யாழ்ப்பாணத்தில் தற்போது உள்ள மக்கள் இப்போது யாழ் போதனா வைத்தியசாலையில் மட்டுமே தரமான மருத்துவ, சுகாதாரச் சேவையை பெறக் கூடியதாக இருக்கிறது. இங்கு உள்ள மிகைக் கேள்வியை கருத்தில் கொண்டு தனியாரும் அதில் முதலீடு செய்ய வாய்ப்புள்ளது.

இவற்றுக்கு மேலாக யாழ். பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களால் வெளியீடு செய்யப்படும் திறமையான மனிதவளத்தை உள்வாங்கிக் கொள்வதற்கு தகவல் தொழில் நுட்பம், கல்விச் சேவைத் துறைகளிலும் நல்ல வாய்ப்புள்ளது. இவை தொடர்பான மேலதிக தகவல்களை எமது 'இன்வெஸ்ற் சிறில்ங்கா' இணையத் தளத்தினூடாக அறியலாம்" - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இக்கருத்தரங்கில் யாழ். வர்த்தக கைத்தொழில் சங்கத் தலைவர் பூரணச்சந்திரன் மற்றும் வர்த்தகசேவை அரச அதிகாரிகளும் பங்குபற்றினர். கருத்தரங்கு ஆங்கிலத்தில் இடம்பெற்றதுடன் இதில் யாழ்.பிரதேச தொழில் முயற்சியாளர்கள் தவிர பாகிஸ்தான், இந்தியா, தென்னிலங்கைத் தொழில் அதிபர்களும் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
நல்லது எது, கெட்டது எது என ஆராய்ந்து பார்த்து செயற்படும் நாள். குழந்தைகள், குடும்பத்தினர் கேட்ட பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். கலைஞர்கள் எதிர்பார்த்த வாய்ப்புகளைப் பெறலாம். கடந்த காலத்தில் உதவி செய்த ஒருவரை நினைத்துப் பார்ப்பீர்கள். வெளியிடங்களுக்குச் செல்லும் உறவினர் ஒருவரை சந்திக்கலாம்.

**இடபம்:**
கனிவான பேச்சுக்களால் காரியம் சாதிக்கும் நாள். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். சுயதொழில் புரிவோர் கூடுதல் வருவாய் பெறலாம். தந்தை தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். நீண்ட நாள்களாக உங்களுடன் பேசாத ஒருவர், திடீரெனத் தொலைபேசியில் பேசலாம்.

**மிதுனம்:**
சிறிய விடயம் ஒன்றுக்குப் பெரிய அளவில் அலட்டிக் கொள்வீர்கள். எப்படியும் வந்து விடும் என நினைத்த பணவரவு ஒன்று வராமல் போகலாம். வியாபாரிகள் அகலக்கால் வைக்காமல் எதிலும் எச்சரிக்கையாக செயற்பட வேண்டும். பணிபுரிவோர் நிர்வாகத்தினரின் கண்டிப்பிற்கு ஆளாகலாம். மறதியால் அவதிகளுக்கு ஆளாகலாம்.

**கடகம்:**
தொழில் பிரச்சினை ஒன்றை நினைத்துப் பெரிய அளவில் கவலைப்படுவீர்கள். உங்களின் கருத்துக்கு எதிர் கருத்துக்கள் சொல்லி நண்பர்கள் எரிச்சல் உண்டாக்கலாம். சிலர் கேட்ட உதவிகளைச் செய்ய முடியாமல் அவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். வெளியூர்களில் இருந்து வரும் உறவினர்களுக்காகக் காத்திருக்கலாம். கடன்களைக் கேட்டு வாங்குவீர்கள்.

**சிங்கம்:**
உறவினர்கள் மத்தியில் உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். பெரிய மனிதர்கள் சிலரின் சந்திப்பு நிகழும். அவசரமாக முடிக்க வேண்டிய வேலை ஒன்றைப் பரபரப்பாக செயற்பட்டு முடிப்பீர்கள். குடும்பத்தினரின் எண்ணங்களை அறிந்து, அதற்கேற்ற வகையில் நடப்பீர்கள். பெண்களால் சந்தோஷமான அனுபவம் பெறலாம். இனிய நாள்.

**கன்னி:**
காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருக்கும் நாள். அலைச்சல் குறைந்து ஓய்வு எடுப்பீர்கள். சிலரின் அன்புத் தொல்லைகளுக்கு ஆள்படலாம். கணவன், மனைவி இடையே பண விடயங்களில் சிறு வாக்குவாதங்கள் ஏற்படலாம். நண்பர்கள் மூலம் நல்ல ஆலோசனை பெறலாம். குரு வழிபாட்டின் மூலம் குதூகலம் கூடும். திடீர் செலவு நேரும்.

**துலாம்:**
தொய்வு, தாமதமின்றி எந்த வேலையையும் உடனுக்குடன் செய்து முடிப்பீர்கள். கணவன், மனைவி இடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த உறவினர் ஒருவர் உங்களின் வீடு தேடி வரலாம். சிறிய அளவில் இலாபத்தை எதிர்பார்த்த காரியம் ஒன்றில் பெரிய அளவில் இலாபம் கிடைக்கலாம். கோபம், வேகம் தவிர்க்கவும்.

**விருச்சிகம்:**
வழக்கமான சில வேலைகளைச் செய்ய முடியாமல் குறுக்கீடுகள், தடைகளைச் சந்திக்கலாம். தொலைபேசி வழியில் சங்கடம் தரும் அல்லது சந்தோஷம் தரும் செய்தி ஒன்றைக் கேட்கலாம். தொழில் ரீதியாக மற்றவர்களின் விமர்சனங்களைச் சந்திக்கலாம். உறவினர் வீட்டுக்குச் செல்ல கணிசமான தொகைக்கு பொருள்கள் வாங்கலாம்.

**தனுசு:**
பல நாள்களாக வராத கடன் மிகுதி ஒன்றை வசூலிப்பதில் அக்கறை காட்டுவீர்கள். இளைய உடன்பிறப்புக்கள் ஆதரவாக நடந்து கொள்வர். அதிக செலவாகும் என நினைத்த காரியம் ஒன்று குறைந்த செலவில் முடியலாம். கைநழுவிப் போன வாய்ப்புகள் மீண்டும் தேடி வரலாம். நன்றி மறக்காமல் நடந்து கொள்வீர்கள். சிலரின் பாராட்டைப் பெறலாம்.

**மகரம்:**
புத்திசாலித்தனமான செயற்பாடுகளால் ஆதாயம் பெறுவீர்கள். பிடிவாதமாக இருந்து சில காரியங்களை வெற்றிகரமாக முடிப்பீர்கள். பல நாள்களாக பார்க்காமல் இருந்த உறவுப் பெண் ஒருவரை இன்று எதிர்பாராமல் பார்க்கலாம். வியாபாரிகள் வீண் அலைச்சல்களுக்கு ஆள்படலாம். புதியவர்களின் அறிமுகம் கிடைக்கும். தொழில் ரீதியான வரவு உண்டு.

**கும்பம்:**
நேர்மை, நாணயமாக நடந்து கொள்ள முற்பட்டாலும் சிலரின் விமர்சனங்களுக்கு ஆள்படலாம். தொழில் ரீதியாக வெளியூர் பயணங்கள் செல்லலாம். சிலர் உடல் ரீதியான உபாதைகளைச் சந்திக்கலாம். தந்தை வழியில் எதிர்பாராத சிரமங்கள், செலவுகள் ஏற்படலாம். பெரிய மனிதர்களின் ஆசிகளைப் பெறுவீர்கள். சோர்வு கூடும்.

**மீனம்:**
முக்கியமான சிலரை சந்திக்க முற்பட்டு, அவர்கள் இல்லாமல் திரும்ப நேரிடலாம். மற்றவர்கள் செய்த தவறுக்காக சிலர் உங்களை விமர்சிக்கலாம். நாடி வந்தவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் உதவி செய்வீர்கள். மனதில் இனம்புரியாத கோபம், வேகம் உண்டாகும். பணிபுரிவோர் சில வேலைகளை செய்ய மறந்து அதிருப்திக்கு ஆளாகலாம்.

# இரசாயனவியலி முக்கியத்துவமும் எமது வருங்கால

**சர்வதேச இரசாயனவியல் ஆண்டு –2011 ஐ முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

இரசாயனவியலானது உலகளாவிய ரீதியில் ஏற்படும் சாவல்களை எதிர்கொள்வதில் மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. இன்றைய காலத்தின் தேவைகளான புதியவகை சக்தி மூலங்களை உருவாக்கும் காலநிலை மாற்றங்களைப் புரிந்து கொள்ளல், நிலம், நீர், வளி என்பவற்றை உள்ளடக்கிய நச்சுத்தன்மையற்ற சூழலை உருவாக்குதல் போன்றவற்றிற்கு இரசாயனவியல் அறிவு வேண்டப்படுகிறது. திண்மங்கள், திரவங்கள், வாயுக்கள் ஆகிய சடப்பொருள்கள் யாவும் இரசாயன மூலகங்கள் அல்லது அவற்றின் சேர்வைகளால் ஆனவை. அத்துடன் ஆழ்ந்து நோக்கினால் உயிர்வாழ்வதற்குரிய எல்லாச் செயற்பாடுகளும் இரசாயனத் தாக்கங்களால் கட்டுப்படுத்தப்படு கின்றன. இந்நிலையில் இரசாயனவியலின் முக்கியத்துவத்தை பொது மக்களுக்கு எடுத்துக்காட்டும் மிகப்பெரிய தேவையாகும்.

2011 ஆம் ஆண்டு இரசாயனவியலாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். ஐக்கிய நாடுகள் சபையானது 2011 ஆம் ஆண்டை சர்வதேச இரசாயனவியல் ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. உண்மையில் இந்தப் பிரகடனத்திற்கு முக்கிய காரண கர்த்தாக்கள் தூய மற்றும் பிரயோக இரசாயனத்திற்கான சர்வதேச ஒன்றியமும் (IUPAC) கல்வி, விஞ்ஞானம், கலாசாரத்திற்கான ஐக்கிய நாடுகள் அமைப்பும் (UNESO) ஆகும். இதற்கு இர சாயன ஆர்வலர்களிடமிருந்து பெரு வரவேற்பு கிடைத்து முன்பு ஐ.நா. சபையானது வெவ்வெறு துறைகளுக்கு சர்வதேச ஆண்டுகளை அறிவித்துள்ளது. சமாதான



IUPAC இன் சின்னம்

(PEACE) ஆண்டாக 1986 உம் எழுத்தறிவு (LITERACY) ஆண்டாக 1994 உம் பௌதிகவியல் (PHYSICS) ஆண்டாக 2005 உம் பிரகடனப்படுத்தப்பட்டன. இந்த வருடம் இரசாயனவியலுக்குரியதாகும். சர்வதேச இரசாயனவியல் ஆண்டு 'இரசாயனவியல் - எமது வாழ்வு, எமது வருங்காலம்' என்னும் தொனிப்பொருளில் கொண்டாடப்படும். இதன் ஆரம்ப நிகழ்வானது பிரான்சின் தலை நகரமான பாரிஸில் இம் மாதம் 27 ஆம் 28ஆம் திகதிகளில் பிரமாண்டமாகக் கொண்டாடப்படுகிறது. இரசாயனவியல் ஆண்டின் நிகழ்வுகள் உலகளாவியதாகவும் நாடாளவியதாகவும், பிரதேச ரீதியாகவும் நடத்தப்படவுள்ளன. இலங்கையில் இலங்கை இரசாயனவியற்கழகத்தில் (I Chem C) தேசிய செயலகமொன்று உருவாக்கப்பட்டு நாடாளவிய ரீதியில் விழாக்களை நடத்துவதில் முன்னின்று செயற்பட்டு வருகின்றது.

பாரிஸில் ஆரம்ப நிகழ்வுகள் இடம்பெறும் அதே வேளை இலங்கை இரசாயனவியற் கழகமானது சிறிமாவோ பண்டாரநாயக்கா ஞாபகார்த்த கண்காட்சி மண்டபத்தில் (BMICH இன் புதிய கட்டடப் பகுதி) இந்த மாதம் 27 முதல் 30 ஆம் திகதி வரை 'இரசாயனவியலின் விநோதங்கள்' எனும் தலைப்பில் ஒரு கண்காட்சியை ஒழுங்கு செய்துள்ளது. இதன் ஏனைய செயற்பாடுகளாக கட்டுரை எழுதுதல் மற்றும் சித்திரம் வரைதல் போட்டிகள், நினைவு முத்திரை வெளியிடல், புலமைப்பரிசில்கள் வழங்கல், நடமாடும் பரிசோத னைக் கூடங்கள் ஏற்படுத்தல், பல்கலைக்கழகங் களுக்கிடையிலான விவாதப் போட்டிகள் நடத்துதல், பாடசாலைகளுக்கிடையிலான புதிர்ப்போட்டி, மாயாஜால வித்தை போன்றன ஒழுங்கு செய்யப் பட்டுள்ளன. இவ்வாண்டில் பொது மக்களுக்கும் மாணவர்களுக்கும் இரசயானவியலின் முக்கியத்து வத்தை தெளிவுபடுத்துவதற்காக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் இரசாயனவியல் துறை பல நிகழ்வுகளை ஒழுங்கு செய்துள்ளது. இரசாயனவியல் பற்றிய ஆக்கக் கட்டுரைகளை வடமாகாணத்தில் இயங்கும் பத்திரிகைகளில் பிரசுரித்தல், க.பொ.த. உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்குரிய இரசாயனப் பரிசோதனை களடங்கிய இறுவட்டு (CD) ஒன்றை வெளியிடல், இப் பரிசோதனைகளை நேரில் காண்பதற்கு மாணவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் அளித்தல், விரிவுரையுடன் செய்து காட்டுதல் (Lecture Demonstration) என்பன இவ்வருடத்தில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச இரசாயனவியல் ஆண்டின் (2011) முக்கிய இலக்குகளாவன:

I. உலகத்தின் தேவைகளை நிவர்த்தி செய்வதில் இரசாயனவியலின் முக்கியத்துவத்தை பொது மக்களை உணரச்செய்தல்.

II. சிறுவர்கள் மாணவர்கள் மத்தியில் இரசாய்ன வியிலில் சிரத்தையை ஊக்குவித்தல்.

III. இரசாயனவியலின் ஆக்கபூர்வ எதிர்காலத்திற்கான ஆர்வத்தை ஏற்படுத்தல்.

IV. மேரி கியூரி அம்மையார் நோபல் பரிசு பெற்றதன் நூற்றாண்டு விழாவையும் இரசாயனக் கழகங்களின் சர்வசேத அமைப்பு உருவாகிய நூற்றாண்டு விழாவையும் கொண்டாடுதல்.

**பொது மக்களை இரசாயனவியலின் முக்கியத்துவத்தை உணரச் செய்தல்**

ஒவ்வொரு பொது மகனும் உலகத்தின் தேவைகளை பூர்த்தி செய்வதில் இரசாயனவியலானது எவ்விதத்தில் உதவுகின்றது என்பது பற்றி அறிந்திருத்தல் நன்று. இரசாயனவியல் என்றால் என்ன? அதன் தன்மைகள், அதனைப்பற்றிய அறிவு போன்றவற்றைத் தெரிந்து கொண்டால் அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளலாம்.

சர்வதேச இரசாயனவியல் ஆண்டில் இரசாயன ஆர்வலர்கள் இரசாயனவியலின் விஞ்ஞானம் மற்றும் கலை, மனிதவள அறிவை மேம்படுத்துவதிலும் அதன் பொருளாதார வளத்தை அதிகரிப்பதிலும் நல்லதொரு வளமான சூழலை உருவாக்குவதிலும் அதன் பங்கு போன்றவற்றைக் கொண்டாடவுள்ளனர். சேதன இரசாயனத்தைக் கற்கும் மாணவர்களில் ஒரு பகுதியினர் சுகாதாரம் சம்பந்தமான வேலைகளைப் பெற்றுக் கொண்டாலும் இன்னொரு பகுதியினர் மருந்தாக்கத் தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ள முயற்சிக்கின்றனர். ஆம் இதுவும் இரசாயனவியலின் ஓர் படிக்கல்லாகவே இருக்கின்றது. ஏனெனில் இத் தொழிற்சாலைகள் உயிர்காக்கும் மருந்துகளை உருவாக்குவதோடு மட்டுமல்லாமல் சூழலியல் மாற்றங்களையும் கருத்தில் எடுத்து செயற்படுகின்றன. முற்றுமுழுதாகப்பார்த்தால் இரசாயனவியலின் தாக்கம் எங்கெல்லாம் புகுந்திருக்கிறது என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

**சிறுவர்கள், மாணவர்கள் மத்தியில் இரசாயனவியலுக்கான விருப்பை ஊக்குவித்தல்**


இரசாயனவியல் ஆசிரியர்கள் இரசாயனவியலில் மாணவர்களுக்கு ஆர்வத்தை ஊட்டுவதில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். இவர்கள் மட்டுமல்லாது இரசாயனம் தெரிந்த அனைவரும் இதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...லின் ...ம் ...லமும்


மேரி கியூரி அம்மையார்

பங்கு கொண்டு வகுப்பறைகளில் மாணவர்களின் ஈடுபாட்டை, குறிப்பாக ஆரம்ப வகுப்புகளில் அதாவது சிறுவயது முதற்கொண்டு அவரவர்க்கு எற்ற விதத்தில் இரசாயன அறிவை வளர்க்க வேண்டும். மாயாஜால வித்தைகளை இரசாயன மூலகங்கள் கொண்டு செய்தல், கையால் செய்யக்கூடிய சிறு சிறு தொழிற்பாடுகள், தேசிய இரசாயன வாரத்தை பிரதேசங்களில் அறிமுகப்படுத்தி செயற்படுத்துதல் போன்றவற்றின் மூலம் சிறுவர்களை இரசாயனவியல் தெரிந்தவர்களாக மாற்றவும் பிற்காலத்தில் அவர்களால் புதியவகைக் கண்டுபிடிப்புகளையும் தயாரிப்புகளையும் செய்யக்கூடியதாக ஆக்கவும் முடியும். சிறு உதாரணமாக நீரை எவ்வாறு சுத்தப்படுத்தலாம் என்பதை சிறுவர்களிடத்தில் செய்து காட்டலாம். பல்கலைக்கழக மாணவர்கள் தங்களுடைய பாடவிதானங்களுடன் தொடர்புடைய தொழிற்பாடுகளை பொதுமக்களுடன் இணைந்து பொது இடங்களிலோ பல்கலைக்கழகங்களிலோ செயற்படுத்துவதன் மூலம் பல்வேறு தரப்பினரையும் இரசாயனவியலுடன் ஒன்றிக்கச் செய்யலாம். இரசயாயனத் தொழிற்சாலைகளில் உள்ளவர்கள் தங்களது உற்பத்திகளை மாணவர்களுக்கு எடுத்துச் சொல்வதனால் எதிர்காலத்தில் அவர்களை நல்ல




தொரு உற்பத்தியாளர்களாக உருவாக்கலாம். எனவே 2011 ஆம் ஆண்டு இரசாயனவியலாளர்களுக்கு நல்லதொரு எதிர்பார்ப்புள்ள ஆண்டாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

**இரசாயனவியலின் ஆக்கபூர்வ எதிர்காலத் திற்கான ஊக்கத்தை ஏற்படுத்தல்**

எமது மாணவர்களின் பொது அறிவு கூடியுள்ளதை அவதானிக்கும் அதே நேரத்தில் ஆக்கத்திறனானது எதிர்பாக்காத அளவுக்கு குறைந்துள்ளதைக் காணலாம். இரசாயனவியலானது ஆக்கத்திறனை ஏற்படுத்துவதற்கு ஓர் சிறந்த வழியாகும்.

ஏனெனில் இரசாயனவியலாளர்கள் மூலக்கூறுகளை வடிவமைக்கும் படைப்பாளிகளாவர். அதாவது தங்களது திறமைகளைப் பயன்படுத்தி வெவ்வேறு வழிகளில் புதிய உற்பத்திப் பொருள்களையோ அல்லது அவற்றை உருவாக்குவதற்கான முறைகளையோ கண்டுபிடிப்பார்கள். இன்றைய உலகின் சவால்களுக்கு முகம் கொடுத்து வெற்றிகாணக் கூடிய முறையில் இவர்கள் செயற்படுவார்கள். மூலக்கூற்று மருத்துவ அபிவிருத்தியில் புதியனவற்றை கண்டுபிடிப்பதிலும் உணவுக்கும் சக்திக்குமான தேவைகளுக்கு புதிய வகை மூலங்களை கண்டறிவதற்கும் விஞ்ஞானத்தின் ஆழ்ந்த அறிவு தேவைப்படுகின்றது. இத்துறைகளின் அபிவிருத்தியானது நவீன உலகினைத் தீர்மானிக்கும் ஒன்றாக இருக்கின்றது. இவற்றுக்கெல்லாம் மூலகாரணமாக விளங்குவது இரசாயனவியலும் அதன் ஆக்கு திறனும் என்பது பலருக்குத் தெரிவதில்லை. இரசாயனவியல் ஆண்டானது மக்களுக்கு ஒரு தெளிவான விளக்கத்தை அதாவது விஞ்ஞானம், மருத்துவம், தொழில்நுட்பம் போன்ற துறைகள் எவ்வாறு இரசாயனவியலுடன் பின்னிப்பிணைந்துள்ளது என்பதை அறிவிக்கக்கூடிய சந்தர்ப்பத்தை வழங்குகின்றது. இரசாயனவியலானது விஞ்ஞானத்தின் பல்வேறுபட்ட துறைகளைத் தொட்டு நிற்கின்றபடியால் அதன் தனித்தன்மை சில சமயங்களில் அறியப்படாமல் உள்ளது. இரசாயனவியலாளர்கள் இரசாயனவியலின் அடையாளத்தைப் பேணுவதில் எங்கெங்கு அதன் செயற்பாடுகள் உள்ளதோ அங்கெல்லாம் அவற்றை உரக்க ஒலிக்கச் செய்வதிலும் ஈடுபட வேண்டும். இரசாயனவியலை வெறுமனே மனனம் செய்ய வேண்டிய உண்மைகளின் தொகுப்பாக இல்லாமல் ஒரு ஆக்க விஞ்ஞானமாக கற்பிப்பது இந்தப் பாடப்பிரிவின் இயக்க ஆற்றலை மாணவர்கள் உணர்ந்து கொள்ள உதவும்.

**கியூரி அம்மையாரின் நோபல் பரிசின் நூற்றாண்டு, சர்வதேச இரசாயனவியல் கழகங்கள் அமைப்பின் நூற் றாண்டு விழாக்கள்**

இரசாயனவியலின் வளர்ச்சியில் மேரி கியூரி அம்மையார் முக்கிய பங்காற்றியுள்ளார். இரசாயன மூலகங்களான ரேடியம், போலோனிய என்பனவற்றைக் கண்டுபிடித்தமைக்காக இரசாயனவியலுக்கான நோபல் பரிசில் 1911 ஆம் ஆண்டில் இவருக்கு வழங்கப்பட்டது. கியூரி அம்மையார் நோபல் பரிசில் பெற்றது இது முதற்தடவையல்ல. 1903 ஆம் ஆண்டு கதிரியக்கத்தைக் கண்டுபிடித்தமைக்காக பௌதிகவியலுக்கான நோபல் பரிசை இவரது கணவரான பியர் கியூரி உடனும் ஹென்றி பெக்கியூரல் உடனும் இணைந்து பெற்றுக்கொண்டார். இன்று வரையும் இவரைப் போன்ற மிகச் சிலரே இரண்டு நோபல் பரிசுகளுக்குரியவர்களாகவுள்ளனர். லீனஸ் போலிங் (இரசாயனவியல் - 1954, சமாதானம் -1962) ஜோன் பாட்டீன் (பௌதிகவியல் 1956, 1972) பிரெட் சங்கர் (இரசாயனவியல் 1958, 1980) ஆகியோர் மற்றைய இரட்டைப் பரிசுக்குரியவர்களாவர். கியூரி அம்மையாரின் காலத்துடன் ஒப்பிடும் போது தற்போது குறைவான தடைகளைப் பெண்கள் எதிர்நோக்கினாலும் ஒப்பீட்டளவில் 1901 ஆம் ஆண்டிலிருந்து இப்போது மட்டும் ஒரேயொரு பெண்மணி பௌதிகவியல் பரிசையும் வேறு மூவர் இரசாயனவியல் பரிசிலையும் வென்றுள்ளார்கள். பெண்களைப் பொறுத்தவரையில் ஆண்களுடன் ஒப்பிடும் போது இதுவொரு குறையாகவே உள்ளது. எனவே கியூரி அம்மையாரின் இரசாயனவியலுக்கான பங்களிப்பைக் கொண்டாடுவதும் சர்வதேச இரசாயனவியல் ஆண்டின் முக்கியமானதொன்றாக விளங்குகின்றது. இதை விட 2011 ஆம் ஆண்டானது சர்வதேச இரசாயனவியல் கழகங்களின் அமைப்பு ஆரம்பிக்கப்பட்ட நூற்றாண்டாகவும் விளங்குகின்றது. இதன் மூலம் சர்வதேச ரீதியாக இரசாயனவியலாளர்களுக்கிடையில் ஓர் ஒருமைப்பாட்டை ஏற்படுத்தி சர்வதேச பொதுத்திட்ட பெயரீடு, அணுநிறை, பௌதிக மாறிலிகள் போன்றன விஞ்ஞான தொடர்பாடல்களை இலகுவாக்கும் முறையில் உருவாக்கப்பட்டுள்ளது.

கலாநிதி யசோதா பிரபாகர்
இரசாயனவியல்துறை
யாழ்.பல்கலைக்கழகம்.

சர்வதேச இரசாயனவியல் ஆண்டானது இரசாயனவியலின் நடந்து முடிந்த வெற்றிகளைக் கொண்டாடுவதற்கும் எதிர்காலத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் ஒரு சந்தர்ப்பமாகும். இதன்பயன் இரசாயணம் தெரிந்தவர்களை விட தெரியாதவர்களுக்கே பெரிதாக இருக்க வேண்டும். மாணவர்கள், குடும்ப அங்கத்தவர்கள் நண்பர்கள் எனப் பலருடனும் ஒன்று சேர்ந்து வாழ்வில் ஒரு முறையே வரக்கூடிய இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இரசாயனவியலின் முக்கியத்துவத்தை இரசாயனவியல் - எமது வாழ்வு, எமது வருங்காலம் என்னும் தொனிப்பொருளுடன் எங்கெங்கும் பரவச் செய்வோமாக.

# கற்றும் அறிவில்லாத மூடர்க்கு



பகவான் ராமகிருஷ்ணரைப் பார்க்க வந்த மருத்துவர் ஒருவர், "நீங்கள் கடவுளைக் கண்டதாகச் சொல்லுகிறார்கள். எனக்கும் நீங்கள் இங்கே... இப்போதே... கடவுளைக் காட்ட முடியுமா?" என்றார். அதற்கு ஸ்ரீராமகிருஷ்ணர் "நீங்கள் ஒரு மருத்துவர் தானே என்னை உடனே ஒரு மருத்துவர் ஆக்க முடியுமா?

"அதெப்படி முடியும்... நான் ஐந்தாண்டுகள் கல்வி கற்றுப் பரீட்சை எழுதி முறையாக மருத்துவர் ஆகி இருக்கிறேன். நீங்களும் அவ்வாறே கல்வி கற்றுப் பரீட்சை எழுதி வெற்றி பெற்றால்தான் மருத்துவர் ஆக முடியும்" என்றார். "அதே மாதிரி நானும் பல்லாண்டு சமயக்கல்வி கற்று இறைவனைக் காணும் பேறு பெற்றேன். நீங்களும் என்னுடன் சில வருடங்கள் தங்கி இந்தக் கல்வியைக் கற்றால் நீங்களும் இறைவனைக் காண முடியும்" என்றார் குருதேவர்.

மருத்துவம், பொறியியல் இவை எப்படிக் கல்வியாகிறதோ அப்படியே சமய ஞானமும் ஒருவகைக் கல்விதான்.

மருத்துவர் நோய்களையும், நோயாளிகளையும் கையாளுகிறார். பொறியியலாளர் கணினிகளையும் கருவிகளையும் நிர்வகிக்கிறார். அது மாதிரி சமய ஞானம் உடையவர் எதைக் கையாளுகிறார்? எதை நிர்வகிக்கிறார்? ஓர் உண்மையான சமய ஞானம் உள்ளவர்கள் தன் வாழ்வைச் சரியாகக் கையாளுகிறார். இன்ப துன்பங்களை, சுக துக்கங்களை வெகு நேர்த்தியாகக் கையாளுகிறார். சமய ஞானிக்கு அடையாளம் விபூதி, குங்குமம், ருத்திராட்சம், துளசி மணிமாலை மட்டுமல்ல இன்பதுன்பங்களை, சுகதுக்கங்களை வெகு சுலபமாகக் கையாளும் திறனே உண்மையான மதத் தன்மை ஆகிறது.

எப்போதும் நிம்மதியாக இருப்பது, சாந்தமாக நிறைவாக ஆனந்தமாகத் தன்னை வைத்திருப்பது இவைதான் உண்மையான சமயத் தன்மை என்பதே என் கருத்து "நடந்தால்நல்லது... நடக்காவிட்டால் ரொம்ப நல்லது" என்று மனதின் சமநிலை இழக்காத சுகதுக்க நிர்வாக மேலாண்மை உடையவரே பழுத்த ஆன்மிகவாதி.

இந்தச் சுக துக்க நிர்வாகக் கலையை உணர்ந்தவரையே கீதை ஸ்திதப்ரக்ஞன் என்று பிரகடனம் செய்கிறது. அப்பா ஆட்சியைக் கொட்டிக் கொடுத்த போதும், அம்மா தட்டிப் பறித்த போதும் சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரையாக இராமர் இருந்தாரே அதுதான் உண்மையான சமயத் தன்மை.

மனிதர்கள் விரும்பித் தேர்ந்தெடுப்பது எப்போதுமே சுகத்தைத்தான். ஆனால் என்ன ஆச்சர்யம்! அவர்களுக்குக் கிடைப்பது எப்போதுமே துக்கம்தான். எந்த மனிதனும் துக்கத்தை விரும்புவதே இல்லை. சுகமாகவே இருக்கவே ஆசைப்படுகிறான். ஆனால் அவன் துக்கமாகவே இருக்கிறான். ஏன் இப்படி? மனிதன் சுகத்தை வரவேற்க முன் வாசலைத் திறந்ததும் காற்று வேகத்திலேயே பின்வாசல் திறக்கிறது. அதன் வழியாகத் துக்கம் வந்து உள்ளே உட்கார்ந்து விடுகிறது.

அமெரிக்காவில் ஒருவன் ஏழுமுறை திருமணம் செய்து கொண்டான். ஒவ்வொரு முறையும் தனக்குக் கிடைத்த கசப்பான அனுபவத்தால் நீதிமன்றப் படியேறி விவாகரத்து பெறுவான். பிறகு தான் எதிர்பார்த்தபடியே ஒரு பெண் கிடைத்து விட்டாள் என்று விருந்து கொடுத்து மறுபடியும் திருமணம் செய்வான். கொஞ்சகாலத்தில் மறுபடியும் அதேவேதனை... அதேதுயரம்... நீதிமன்றம்... விவாகரத்து... இப்படி ஏழு திருமணங்கள் முடிந்து விட்டன.

மறுபடியும் அவன் எட்டாவது திருமணம் செய்யக்கூடும் என்று உறவும் நட்பும் நினைத்தபோது அவன் மிகவும் மாறி இருந்தான். ஆச்சரியப்படத்தக்க வகையில் தெளிவு பெற்றவனாகப் பேசினான். "இது வரை நான் மணமுறிவு செய்து கொண்ட ஏழு பெண்கள் மீதும் எந்தவிதமான தவறும் இல்லை என்னிடம் தான் தவறு இருந்தது. அவர்கள் இப்படி இருக்க வேண்டும், அப்படி இருக்க வேண்டும் என்று நான்தான் எதிர்பார்ப்பேன்...ஆனால், அவர்கள்? அவர்கள் விருப்பப்படியேதான் இருந்தார்கள். என் எதிர்பார்ப்பின்படி மாற்றிவிடலாம் என்று போராடுவேன்; எதுவும் மாறாது நான் தேடிய ஆள் இவள் இல்லை என்று உதறி விடுவேன். ஒவ்வொரு முறையும் அவர்கள் அவர்களாகவே இருந்தார்கள். நான் நானாகவே இருந்தேன். இது என்னுடைய பிழையல்லவா... இந்த உண்மை புரிவதற்குள் ஏழு திருமணங்கள் நடந்துவிட்டன. எனவே மீண்டும் இப்படியொரு தவறு செய்யமாட்டேன்" என்று திருமண நினைப்பை விட்டு விட்டான்.

மற்றவர் மூலம் சுகம் கிடைக்காதபோது நாம் மிகப் பெரிய தவறு செய்கிறோம். பிறரிடமிருந்து சுகம் கிடைக்காது என்கிற உண்மையைப் புரிந்து கொள்வதில்லை. மாறாக மற்றவர்மூலம் நமக்குத் துக்கம் கிடைத்தது என்று பிழையாக மொழி மாற்றிச் சொல்லுகிறோம். இது பிரம்மாண்டமான பொய். பிறர்மூலம் நமக்குச் சுகம் கிடைக்க முடியாதபோது துக்கம் மட்டும் எப்படிக் கிடைக்க முடியும்? சுகமோ துக்கமோ பிறரிடமிருந்து நமக்குக் கிடைக்கிறது. என்பது பிரமை... கற்பனை... நாம் தொடர்ந்து தவறுகளாகவே செய்கிறோம். தவறுகளைத் தவறுகள் என்று உணர, ஒப்புக் கொள்ள மறுக்கிறோம். பிறரிடமிருந்து நாம் சுகத்தை எதிர்பார்ப்பதே நம்மைத் துக்கம் உடையவனாக ஆக்குகிறது என்பதை யோசிக்கவோ ஏற்கவோ நமக்குச் சம்மதம் இல்லை.

அர்த்தமற்ற வீணான நம்பிக்கைகளே துக்கத்தின் முதல் படி.. அதாவது ஒருபொழுதும் பூர்த்தியடையவே முடியாத விருப்பங்கள் தான் காரணம். நீங்கள் கற்ற சமயக் கல்வி உங்கள் துக்கத்தை முற்றிலும் நீக்கவில்லையோ, சுகதுக்கங்களைக் கடந்து போகும் துணிவைத் தரவில்லையோ அது ஓர் உண்மையான சமயக் கல்வியாக இருக்க முடியாது. இதனால்தானே "பல கற்றும் பல கேட்டும் பயனொன்றும் இல்லையடி எங்கள் முத்து மாரியம்மா" என்று பாட்டாலே அறைகிறார் பாரதியார். இதையே "கற்றும் அறிவில்லாத மூடருக்கு நான் என் செய்வேன்?" என்று பாடுகிறார் தாயுமானவர்.

சுகி.சிவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலக் கண்ணிவெடிகளை அகற்றும் எலிகள்



எலிகள் நிலக் கண்ணிவெடிகளை அகற்றும் செயல் பாட்டுக்குப் பயன்படுத்தப்படுகின்றன என்கிற தகவல் உங்களுக்குத் தெரியுமா?

மனிதர்கள், நாய்கள் ஆகியவற்றை விடவும் வேகமாகவும் விவேகமாகவும் நிலக் கண்ணிவெடிகளை அகற்றக் கூடியன எலிகள்.

நிலக் கண்ணிவெடிகளில் இருந்து எழுகின்ற மணத்தை வைத்து அவ்வெடிகளை அடையாளம் காண எலிகளால் இயலும். அத்துடன் அவ்வெடிகளைச் செயல் இழக்க வைக்கவும் முடியும்.

ஆனால் எலிகளுக்குப் பிரத்தியேகப் பயிற்சிகளை வழங்கி வழிக்குக் கொண்டுவர வேண்டி இருக்கும்.

மொசாம்பிக் நாட்டில் சிவில் யுத்தம் 1992 ஆம் ஆண்டு முடிவுக்கு வந்து விட்டது.

இருந்தாலும் அங்கு நிலக் கண்ணிவெடி அச்சம் இன்றும் தொடர்கின்றது.

மாதாந்தம் 20 பேர் கண்ணிவெடியில் சிக்கி கால்களை இழக்கின்றனர். நிலக் கண்ணிவெடியில் சிக்குவோரில் 60 சதவீதத்துக்கும் அதிகமானோர் உயிர் இழக்கின்றனர்.

இந்நிலையில் இந்நாட்டில் எலிகளின் உதவியுடன் நிலக் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் வெற்றிகரமாக இடம்பெறுகின்றன.

எலிகள் குறைந்தது ஒன்பது மாத காலப் பயிற்சியின் பின் இப்பணியில் ஈடுபடுத்தப்படுகின்றன.

ஒரு நிலக் கண்ணிவெடியை ஒரு எலி செயல் இழக்க வைக்கும்போது அதன் திறமையைப் பாராட்டி ஒரு வாழைப்பழம் பரிசாக தவறாமல் கொடுக்கப்படுகின்றது.

சாதாரணமாக இரு எலிகளால் மாத்திரம் இரு மணித்தியாலங்களுக்கு இடையில் 200 சதுர மீற்றர் பரப்பு உள்ள நிலக் கண்ணிவெடிப் பிரதேசத்தை துப்புரவு செய்ய முடியும் என்று இங்கு நிருபணம் ஆகி உள்ளது. இதே பணியைச் செய்ய மனிதர்களுக்கு ஒரு நாள் எடுக்கின்றது

# முக எலும்புகள் வயதை காட்டிக் கொடுக்கும்

ஒருவரை வயதானவர் என்பதை அறிய அவரது தோல் சுருக்கங்களே அடையாளம் காட்டி விடும். எனினும் தற்போது ஒருவரின் முகத்திலுள்ள எலும்புகளின் அமைப்பை வைத்தே அவரது வயதை கணக்கிட முடியும் என ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.



இது குறித்து அறிவியலாளர்கள் பல்வேறு ஆண்கள் மற்றும் பெண்களை சி.டி. ஸ்கேன் கொண்டு சோதனை செய்துள்ளனர். அதில் ஒவ்வொரு வயதினருக்கும் அவர்களுடைய முகத்தின் எலும்புகளின் கட்டமைப்பு மாறுபடுவதை அவர்கள் கண்டறிந்தனர்.

மேலும் ரோசெஸ்டர் மருத்துவ ப்பல்கலை கழகத்தில் பிளாஸ்டிக் மற்றும் மறுசீரமைப்பு அறுவை சிகிச்சை பிரிவின் தலைமை பிரிவு கண்காணிப்பாளரான ஹோவர்டு லேங்ஸ்டீன் என்பவர் முகத்தில் உள்ள மென்மையான திசு படிப்படியாக குறைந்து விடுதல் மற்றும் முகத்தின் எலும்புகள் தனது இலகு தன்மையை இழந்து கடினமாக இருத்தல் ஆகியவை வயதை கண்டறிய மருத்துவர்களுக்கு உதவும் விடயங்கள் என தன்னுடைய அறிக்கை ஒன்றில் கூறியுள்ளார்.

# சைக்கிள் ஒடுவது தலைவலிக்கு நிரந்தரத் தீர்வு



''தலைவலியும் பல்வலியும் தனக்குத் தனக்கு வந்தால் தான் தெரியும்'' என்பார்கள். இதற்குக் காரணம் அந்த வலியை அனுபவித்தால் தான் அதன் கொடுமை விளங்கும்.

மைகிரைன் தலைவலி என்னும் ஒற்றைத் தலைவலி மிகவும் கொடுமையானது. இதற்கான தீர்வைத்தான் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

அதாவது சைக்கிளை எடுத்துக் கொண்டு தினமும் கொஞ்ச நேரம் உற்சாகமாய் ஓட்டுங்கள். சில மாதங்களிலேயே உங்கள் தலைவலி பறந்து போய்விடும் எனச் சொல்லி வியக்க வைக்கின்றனர் ஸ்வீடன் நாட்டு ஆராய்ச்சியாளர்கள்.

கடந்த சில மாதங்களாகத் தலைவலியால் பாதிக்கப்பட்டிருந்த நபர்களைக் கொண்டு நடத்தப்பட்ட ஆராய்ச்சியில்தான் இந்த முடிவு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உடற்பயிற்சி செய்தால் தலைவலி அதிகமாகி விடும் எனும் தவறான கருத்தில் பலரும் உடற்பயிற்சி செய்ய மறுத்து வருகின்றனர்.

ஆனால் உண்மையில் சைக்கிள் ஒட்டும் பயிற்சியானது தலை வலி வரும் வாய்ப்பை 90 விழுக்காடு வரை குறைக்கும் என்கின்றனர் மருத்துவர்கள். இதற்குக் காரணம்,நீங்கள் சைக்கிள் ஒட்டும் போது உங்கள் உடலில் எண்டோர்பன்கள் அதிகமாகச் சுரக்கின்றன. எண்டோர்பன்கள் வலி நிவாரணியாகச் செயற்படும் என்பதால் தலைவலி வராமல் அது தடுத்து விடுகிறது என மருத்துவ விளக்கம் அளிக்கின்றனர்.

# சின்னச் சின்ன தகவல்கள்...

ஒரே இடத்தில் அனைத்து அகராதிகளும்: ஆங்கிலச் சொல் ஒன்றின் பொருள் வேண்டுமா? இணையத்தில் பல அகராதிகள் உள்ளன. இவற்றின் தளங்களில் சென்று தேடலாம்.

ஆனால் அதற்குப் பதிலாக, ஒரே முயற்சியில் அனைத்து அகராதிகள் தரும் பொருள் வேண்டும் என்றால், கூகுள் செல்லலாம்.

கூகுள் சர்ச் பாக்ஸில் define:WORD என்ற வடிவத்தில் அந்த சொல்லை டைப் செய்திடவும்.

இதில் WORD என்ற இடத்தில் நீங்கள் பொருள் தேடும் சொல்லை டைப் செய்திட வேண்டும். உடன் கூகுள் ஒன்லைனில் உள்ள அனைத்து அகராதிகளிலும் இந்தச் சொல்லுக்குப் பொருள் தேடி வரிசையாகத் தரும்.

இணைய வேகம் அறிய: உங்கள் இணைய இணைப்பின் வேகத்தை அறிய, முதலில் இணைப்பை இயக்குங்கள். பின் http://speedtest.net/ என்ற முகவரியில் உள்ள தளத்திற்குச் செல்லுங்கள்.

அங்கு வேகத்தைச் சோதனை செய்வதற்கான தொடர்பல் கிளிக் செய்தால், உடனே உங்கள் பராட்பேண்ட் இணைப்புக்கான ரௌட்டருக்கும் கணினிக்கான வேகத்தையும், இணைய டவுண் லோட் ஸ்பீடையும் அது அளந்து காட்டும்.

கீழாக உங்களுக்கு இன்டர்நெட் இணைப்பு தரும் நிறுவனத்தின் பெயருடன், இணைப்பின் தன்மையை நட்சத்திரக் குறியிட்டுக் காட்டும். அதிலேயே வரைபடம் ஒன்று காட்டப்பட்டு அதில் இணைய இணைப்பினை நீங்கள் பெறும் நகரம் சுட்டிக் காட்டப்படும்.

# புளூடூத் பயன்பாடும் பாதுகாப்பும்

வயர்கள் ஏதுவுமில்லாமலும் தானாகவும் இணைப்பினை ஏற்படுத்திக் கொள்வதுதான் புளூரூத். நம் அன்றாட வாழ்க்கையின் பல அம்சங்களை எளிமைப்படுத்தும் விடயங்கள் இதில் உள்ளன.

நாம் கணினிகள், பொழுதுபோக்குச் சாதனங்கள், டெலிபோன் ஆகியவற்றைப் பயன்படுத்தும்போது அவை தங்களுக்குள் பல வகைகளில் இணைத்துக் கொள்கின்றன.

வயர்கள், கேபிள்கள், ரேடியோ சிக்னல்கள், இன்ப்ரா ரெட் கதிர்கள் எனப் பல வகைகளில் இணைப்பு ஏற்படுத்தப்படுகிறது.

ஆனால் புளூரூத் சாதனங்களை இணைப்பதில் தனி வழி கொண்டுள்ளது. குறைந்த மின்சக்தி பயன்பாடு, ஒரே நேரத்தில் எட்டு சாதனங்களுடன் தொடர்பு, எந்த வகையிலும் ஒன்றுக்கொன்று குறுக்கிட்டு செயல் இழக்காத நிலை, இணைந்திடும் சாதனங்கள் நேராக இருந்திடத் தேவையற்ற நிலை, 32 அடி வட்டத்தில் புளூரூத் தொழில் நுட்பம் கொண்ட எந்தச் சாதனத்தையும் கண்டு இணையும் லாவகம் எனப் பல ப்ளஸ் பாய்ண்ட்களை அடுக்கிக் கொண்டு செல்லலாம்.

புளூரூத் இயக்கப்பட்ட சாதனங்கள் அவற்றின் எல்லைகளுக்குள் இருக்கையில் யாரும் இயக்காமலேயே ஒன்றையொன்று புரிந்து கொள்கின்றன. முகத்தை மூடிய நிலையிலும் கண்களை மட்டுமே கண்டு ரோமியோவை ஜூலியட் அடையாளம் கண்டது போல புளூரூத் உள்ள சாதனங்கள் ஒன்றையொன்று கண்டு கொள்கின்றன.

ஒரு எலக்ட்ரானிக் உரையாடல் அவற்றுக்குள் ஏற்படுகிறது. இந்த சாதனங்களைப் பயன்படுத்துபவர் எந்த பட்டனையும் இதற்கென அழுத்த வேண்டியதில்லை.

இந்த எலக்ட்ரானிக் உரையாடல் இரண்டு அல்லது மூன்று சாதனங்களுக்கிடையே ஏற்பட்டவுடன் (அவை கணினியாகவோ, கைத்தொலைபேசியாகவோ, ஹெட்செட் ஆகவோ, பிரிண்டராகவோ இருக்கலாம்) அந்த சாதனங்கள் தங்களுக்குள் ஒரு நெட்வொர்க்கினை ஏற்படுத்திக் கொள்கின்றன.

இதை பெர்சனல் ஏரியா நெட்வொர்க் எனக் கூறலாம். ஆங்கிலத்தில் இந்த நெட்வொர்க்கை அல்லது என அழைக்கின்றனர். இரண்டிற்கு இடையே ஏற்படும் இந்த நெட்வொர்க் அதே அறையில் மற்ற இரண்டிற்கு இடையே ஏற்படும் நெட்வொர்க்கால் பாதிக்கப் படுவதில்லை. இணைப்பு உறுதி செய்யப்பட்ட நிலையில் இந்த இரண்டு சாதனங்களுக்கிடையே தகவல் பரிமாற்றம் ஏற்படுகிறது.

இது ஒலி, போட்டோ, வீடியோ, பைல் என எதுவாகவும் இருக்கலாம். புளூரூத் பயன்படுத்தப்படும் சாதனங்கள்: அன்றாட வாழ்வின் நடைமுறையை இந்த புளூரூத் இணைப்பு சந்தோஷப்படுத்துகிறது. எடுத்துக் காட்டாக புளூரூத் ஹெட்செட்கள் உங்களுடைய [illegible] ஆகியவற்றுடன் வயர் எதுவுமின்றி இணைப்பு கொடுத்து செய[illegible] போனில் இந்த வசதியைப் பெற 2 என்ற தொழில் நுட்பம் இருக்க வேண்டும். ஹெட்செட்டும் அதே தொழில்நுட்பத்துடன் வடிவமைக்கப் பட்டிருக்க வேண்டும். பாடல்களை மட்டுமல்ல, போனுக்கு வரும் அழைப்புகளையும் இதில் மேற்கொள்ளலாம். பிரிண்டர்களும் புளூரூத் தொழில் நுட்பத்தில் இயங்கும் வகையில் இப்போது வடிவமைக்கப்படுகின்றன.



உங்கள் மொபைல் போனில் போட்டோ ஒன்று எடுத்த பின்னர் அதனை அச்செடுக்க பிரிண்டருடன் இணைக்க வேண்டியதில்லை. பிரிண்டரையும் கைத்தொலைபேசியையும் புளூரூத் மூலம் இணைப்பை ஏற்படுத்தினால் போதும். கார்களை ஓட்டிச் செல்கையில் நம் மொபைல் போனுக்கு அழைப்பு வந்தால் யாரிடமிருந்து அழைப்பு வருகிறது என்பதனை எடுத்துக்காட்டி தொலைபேசியை எடுக்காமலேயே பேசச் செய்திடும் தொழில் நுட்பம் கொண்ட சாதனங்கள் வந்துள்ளன.

உள்ளே பயணம் செய்திடும் ஐந்து நபர்களின் போன்களை இவ்வாறு இணைத்து இயக்கலாம். அதே போல மொபைல் போனில் ஜி.பி.எஸ். ரிசீவர் இருந்தால் எக்ஸ்டெர்னல் ஜி.பி.எஸ். சாதனம் ஒன்றை புளூரூத் மூலம் இணைத்து தகவல்களைப் பெறலாம். இறுதியாக கம்ப்யூட்டர் இணைப்பைக் கூறலாம். உங்களுடைய மொபைல் போனை புளூரூத் மூலம் கம்ப்யூட்டருடன் இணைத்து பைல்களை அப்டேட் செய்திடலாம். புளூரூத் வசதி கொண்ட கீ போர்டுகளும் இப்போது வந்துவிட்டன.

இவற்றையும் கணினி மற்றும் செயற்பாட்டிற்கு ஏற்ப கைத்தொலைபேசியுடனும் இணைக்கலாம். புளூரூத் செக்யூரிட்டி: எந்த நெட்வொர்க் இணைப்பு ஏற்படுத்தினாலும் அங்கே பாதுகாப்பு பிரச்னை ஏற்படுகிறது. இங்கும் அதே கதைதான்.

உங்கள் மொபைல் போனில் புளூரூத்தை இயக்கிவிட்டு சிறிது தூரம் காரிலோ ஸ்கூட்டரிலோ செல்லுங்கள். ஏதாவது இன்னொரு புளூரூத் சாதனம் குறுக்கிட்டு இணைப்பை ஏற்படுத்தும். உங்கள் போன் திரையில் இது போல ஒரு சாதனம் இந்த பைலை அனுப்பவா என்று கேட்கிறது? ஏற்றுக் கொள்கிறாயா? என்ற கேள்வி இருக்கும். உடனே இணைப்பைக் கட் செய்வதே நல்லது.

ஏனென்றால் இது போல வரும் பைல்களில் வைரஸ் இருக்கும். எனவே தான் இணைப்பு இருந்தாலும் பைலை ஏற்றுக் கொள்ளும் அனுமதியை நாம் தரும்படி மொபைல் போனின் புளூரூத் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு புளூரூத் மூலம் அடுத்த சாதனங்களைக் கைப்பற்றி கெடுப்பதை , மற்றும் என [illegible] எனவே நம்பிக்கையான நபர் அல்லது கைத்தொலைபேசி அல்லது சாதனம் [illegible]ாகத் தெரிந்தாலொழிய இத்தகைய இணைப்பை அனுமதிக்கக் கூடாது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் ஆலயம்



(சென்றவாரத்தொடர்ச்சி.....)

இலங்கையில் காத்தல் கடவுளான விஷ்ணுவும் அழித்தல் கடவுளான சிவனும் ஒரே இடத்திலிருந்து அருள்பாலிக்கும் அற்புதத் திருத்தலமாக இயக்கச்சி மல்வில் கிருஷ்ணர் கோயில் உள்ளது.

இங்கு சமுத்திரத் தீர்த்தத்திற்கு ஆலயத்திலிருந்து புறப்படும் சுவாமி ஏ-9 வீதியை அடைந்து அங்கிருந்து கரந்தாய், புதுக்காடு, சோரன்பற்று, மாசார், மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை ஊடாக ஆழியவளை ஆற்றங்கரைக்குச் சென்று சமுத்திரத் தீர்த்தமாடுவார். சமுத்திரத் தீர்த்தத்தைக் காண ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொள்வர். மகா தீர்த்தம் முடிவுற்றதும் அங்கு நடைபெறும் மகேஸ்வர பூஜையின் பின்னர் வேம்படி கொடுக்கிளாய், கொற்றாண்டார் குளம், இயக்கச்சி தெற்கு ஊடாக ஆலயத்தை வந்தடைவார். வீதியுலா வரும் வேளையில் மக்கள் வழி நெடுகிலும் பூரண கும்பம் வைத்து இறைவனைத் தரிசிப்பதுடன் அவருடன் வரும் அடியார்களுக்கு அவல், சுண்டல், பழவகைகளையும் வழங்கி உபசரிப்பர். சமுத்திரத் தீர்த்தத்திற்கு மறுநாள் கேணித்தீர்த்தம் நடைபெறும். காலை ஆலய நீர்ச்சுணையான குளத்தில் நீராடுவார். மாலை காவல் தெய்வமான வைரவருக்குப் பொங்கல் செய்து உற்சவத்தை நிறைவு செய்வர்.

ஆரம்பத்தில் கட்டப்பட்ட மூலஸ்தானம், நிருத்த மண்டபம் என்பன புதிதாக நிர்மாணிக்கப்பட்டவை. அன்பர்களின் உதவியுடன் ஏனைய மண்டபங்களான தம்ப மண்டபம், வசந்த மண்டபம், களஞ்சிய அறை, மடப்பள்ளி போன்றவை நிர்மாணிக்கப்பட்டன.

எம்பெருமான் வீதியுலா வருவதற்கு ஐந்து தலை நாகப் பாம்பு வாகனம், கருட வாகனம், ஆஞ்சநேயர் வாகனம் போன்றவை ஆரம்பகாலத்தில் ஆலயத்தில் இருந்தன. தேர்த்திருவிழாவுக்கு அன்றைய காலத்தில் கட்டுத் தேரில் சுவாமி வீதியுலா வருவார். தேரானது மாட்டு வண்டியில் கட்டப்பட்டே வீதியுலா வரும். காலப் போக்கில் வாகனங்கள் பழுதடைந்ததால் மகா சமுத்திரத் தீர்த்த உபயகாரர்களினால் ஐந்து தலை நாகபாம்பு வாகனமும் ஊர் வணிகன் பற்று அடியார் ஒருவரால் குதிரை வாகனமும் ஆலய அறங்காவலர்களால் கருட வாகனமும் ஆலயத்திற்குக் கிடைக்கப் பெற்று உற்சவ காலத்தில் பயன்படுத்தப்பட்டு வந்தன.

ஆலயத்திற்குக் கோபுரம் இல்லாத குறையினை நிவர்த்தி செய்யும் முகமாக திருவிழா உபயகாரர்களால் வருடாவருடம் ஆலய முகப்பில் சிறந்த முறையில் வடிவமைக்கப்பட்ட சிகரம் பொருத்தப்படும். (சிகரம் ஆலய உற்சவங்களில் பொருத்துவது தற்போது அருகிவிட்டது) ஆலய உற்வங்களைச் சிறப் பாக நடத்த ஒவ்வொரு திரு விழா உபயகாரர்களும் கங்கணங் கட்டிச் செய்து வந்தனர். உற்சவ காலத்தில் இரவு வர்ண மின் விளக்குகளால் வீதிகள் அலங்கரிக்கப் பட்டு பகல்போல் காட்சியளிக்கும். பெரும் மின் பிறப்பாக்கிகள் வீதிகளைப் பகலாக்கி இரவு முழுவதும் இயங்கிக் கொண்டிருக்கும். ஆலய உற்சவ காலத்தில் மிகப் பிரபல்யம் மிக்க நாதஸ்வர, தவில் வித்து வான்கள், வில்லிசைக் கலைஞர்கள் ஆகியோரின் இசை வெள்ளம் அனைத்துப் பகுதியில் கேட்கும் வகையில் அனைத்து இடங்களிலும் ஒலி பெருக்கிகள் பொருத்தப் பட்டிருக்கும்.

மாசிமாத பீம ஏகாதசி, மார்கழி வைகுண்ட ஏகாதசி உற்சவ தினங்களில் ஏகாதசி புராணம் பாடப்பெற்றுப் புராணிகர்களால் பலன் சொல்லும் வழக்கம் இன்றும் இந்த ஆலயத்தில் நடைமுறையில் உள்ளது. ஆலயப் பெருமானின் பக்தி கொண்ட அடியார்கள் புதிதாகத் தொழில்கள் தொடங்கும் வேளையில் ஆலயத்திற்கு வந்து பூஜை செய்த பின்னர் தொழில்களைத் தொடங்கும் வழக்கமாக உள்ளது.

நெல் வயல்களில் விதைப்புச் செய்வோர், தென்னந் தோட்டங்களில் தேங்காய் பறிப்போர் ஆலயத்திற்கு வருகைதந்து பூஜை செய்த பின்பே அவற்றினைத் தொடங்குவர். இதன் பயனாகக் கிடைக்கும் விளைச்சலில் ஒரு பகுதியினை ஒதுக்கி வைத்து அதனை ஆலயத்திற்குக் காணிக்கையாக வழங்குவர். தமது இளமைக்காலப் பகுதியில் மாட்டுவண்டில் கட்டிக் கொண்டு முரசுமோட்டை, கண்டாவளை, பூநகரி ஆகிய பகுதிகளுக்குள் சென்று காணிக்கைகள் (நெல் மூடைகளை) பெற்று வந்ததாக முதியவர்கள் தெரிவித்தனர். காணிக்கை வாங்கச் சென்ற மாட்டு வண்டிலின் பாகங்கள் இன்றும் ஆலய வளாகத்தில் வைக்கப்பட்டுள்ளன. ஆலயத்திற்குக் காணிக்கையாகக் கிடைக்கும் நெல்,தேங்காய் ஆகியவற்றில் ஆலயத் தேவை போக எஞ்சியவற்றை விற்பனை செய்து அதில் கிடைத்த நிதியில் மடப்பள்ளி, இரண்டாம், மூன்றாம் மண்டபங்கள் நிர்மாணிக்கப்பட்டதாகவும் தெரிவித்தனர். ஆலயத்திற்கு வரும் அடியார்கள் சோலை நடுவில் ஆலயத்திற்கு தெற்கே உள்ள நாகதம்பிரான் ஆலயத்திலும் தென்கிழக்கே உள்ள அம்மன் ஆலயத்திலும் பொங்கலிட்டுப் படைப்பதுவழக்கமாகும். இந்த அடியார்களின் நலன்கருதி அன்பர் ஒருவரால் 1948ஆம் ஆண்டு கிணறு ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டது. கிணறு அமைத்துக் கொடுத்த அடியாருக்குக் குழந்தைப்பேறு இல்லாதிருந்ததாகவும் அறங்காவலர் சபையின் ஆலோசனைகளுக்கமைய கிணறு அமைத்துக் கொடுத்த பின்னர் எம்பெருமானின் அருளால் 9 பிள்ளைகள் பிறந்ததாகவும் தெரிவித்தனர்.


தீராத நோய்களால் பீடிக்கப்பட்ட பலர் ஆலயத்தில் தங்கி நின்று குணமானதாகவும் குழந்தைப்பேறு இல்லாதவர்களும் திருமணபந்தம் கிடைக்காதவர்களும் ஆலயத்திற்கு வந்து பயன் பெற்றுள்ளனர். வெளிநாடு செல்வோர் புதிதாக வியாபாரம் ஆரம்பிப்போர், வாகனத்தொழில் செய்வோர் எம்பெருமான் ஆலயத்திலிருந்தே தமது முயற்சிகளை ஆரம்பிப்பர். ஆலய உற்சவத்தின் மஹா சமுத்திரத் தீர்த்தம் ஆழியவளை கடலில் நடைபெற்ற பின்னர் தமது தொழில் சிறப்புற நடைபெறுமென அப்பகுதி கடற்றொழிலாளர்கள் புளகாங்கிதத்துடன் தெரிவித்தனர்.

ஆலய உள் பிரவாக, சுற்றுப் பிரகார, கொட்டகைகள் கண்டாவளையைச் சேர்ந்த அன்பரினால் நிர்மாணிக்கப்பட்டது.

(தொடரும்)

# சாவகச்சேரி லயன்ஸ் கழகம்

(சென்றவாரத்தொடர்ச்சி.....)



**1979** ஆம் ஆண்டு மே மாதம் 4 ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டதே சாவகச்சேரி லயன்ஸ் கழகமாகும்.

அது முதல் நடமாடும் மருத்துவப் பரிசோதனை முகாம்களை டாக்டர் செல்வி கந் தையா, லயன் டாக்டர் அருளா னந்தம் ஆகியோரின் உதவியுடன் அல்லாரை, கச்சாய் போன்ற நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த மக்க ளுக்குச் சைக்கிளில் சென்று மருத்துவப் பரிசோதனைகளை நடத்தியதுடன் அப்போது குடாநாட்டில் தட்டுப்பாடு காணப்பட்ட மருந்து வகைகளையும் பால்மா வகைகளையும் கப்பலில் தருவித்துப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலவசமாக வழங்கி வந்தார். அந்த வேளையில் நுணாவில் பகுதியில் சிறுவர்களுக்குப் பரவி வந்த சிரங்கு நோய்களுக்குரிய மருந்துகளையும் வீடு வீடாகச் சென்று வழங்கினர்.

மேலும் சங்கத்தானையில் முழுமையாகச் சேதமடைந்து காணப்பட்ட சாரதா முன்பள்ளியினை சாவகச்சேரி இந்துக்கல்லூரி லியோ கழக உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் புனரமைத்துக் கொடுத்ததுடன் நுணாவில் கிழக்கு சர்வசாதன சனசமூக நிலைய முன்பள்ளிக்கு விளையாட்டு முற்றம் அமைத்து மாவட்ட ஆளுநரினால் திறந்து வைக்க ஏற்பாடு செய்து கழகத்தின் செயற்பாடுகளை மேன்மேலும் பெருகச் செய்தார்.

இவரையடுத்துக் கழகத் தலைமைப் பொறுப்பினை 2007 ஆம் ஆண்டு லயன் இ.ஜெயபாலன் ஏற்று நலத்திட்டங்களை மேற்கொண்டதுடன் சங்கத்தானையில் தொழிற்பயிற்சி நிலையத்தினை ஆரம்பித்து இளைஞர், யுவதிகளுக்குக் கணினிப் பயிற்சி வகுப்புக்களையும் அழகுக் கலைப்பயிற்சி வகுப்புக்களையும் நடத்திக் கண்காட்சியினை சிறப்பாக நடத்தி பயிற்சிகளைப் பூர்த்தி செய்தவர்களுக்குச் சான்றிதழ்களையும் வழங்கினார்.

2008 ஆம் ஆண்டில் லயன் வீ.வீ.மகாலிங்கம் தலைமைப் பொறுப்பினை ஏற்று கழகத்தின் நலத்திட்டங்களைத் தொடர்ந்து மேற்கொண்டார்.

2009 ஆம் ஆண்டில் தலைமைப் பொறுப்பினை ஏற்ற லயன் ப.செல்லத்துரை கைதடிப்பகுதி மக்களுக்குப் பல்வேறு மருத்துவப் பரிசோதனை முகாம்களை நடத்தியதுடன் பல்வேறு நலத்திட்டங்களையும் மேற்கொண்டார்.

அத்துடன் கைதடியில் நீரிழிவுப் பரிசோதனை நிலையத்தினை ஆரம்பித்து இலவசமாகச் சிகிச்சைகளையும் மேற்கொண்டார்.

2010 ஆம் ஆண்டில் கழகத்தின் தலைவராகப் பதவியேற்றுள்ள லயன் தி.முருகதாஸன் ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த உயர்தர, க.பொ.த.சாதாரணதரம் ஆகிய பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்களுக்கு விசேட பயிற்சிக் கருத்தரங்குகளை நடத்தினார். மேலும் சங்கானையிலும் கைதடியிலும் லயன் கழகங்களை அங்குரார்ப்பணம் செய்து வைத்து கழகத்தின் சேவைகளுக்கு மேலும் ஒரு படிக்கல்லை உருவாக்கினார்.

மேலும் வன்னியிலிருந்து வந்த மக்களுக்கும் மாணவர்களுக்கும் பல்வேறு உதவிகளை வழங்கினார். வன்னியிலிருந்து வருகை தந்த கைதடி தெற்கைச் சேர்ந்த இளைஞருக்குக் கணினி இயந்திரத்தினை அன்பளிப்பாக வழங்கினார். இராமாவில் நலன்புரி நிலையப் பாடசாலையில் கற்ற 150 மாணவர்களுக்கும் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் இணைந்த 50 மாணவர்களுக்கும் மீசாலை விக்னேஸ்வரா ம.வி.யில் இணைந்த 20 மாணவர்களுக்கும் கெற்பேலி அ.த.க. பாடசாலையில் 10 மாணவர்களுக்கும் சப்பாத்துக்கள் வழங்கினார்.

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்குப் புலமைப்பரிசில் வழங்குவதற்குக் கழகத்தின் சார்பில் புலமைப் பரிசில் நிதி வழங்கியதுடன் வலது கையினை யுத்த வேளையில் இழந்த போதிலும் இடது கையினால் எழுதப் பழகி ஐந்தாம் தரப்புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற அக்கராயன்குளம் மகா வித்தியாலய மாணவிக்குத் தங்கப் பதக்கமும் வழங்கிக் கௌரவித்தார்.

கடந்த 2005 ஆம் ஆண்டு கழகச் செயலாளராகப் பொறுப்பேற்ற லயன் மா.பெ.சண்முகநாதன் , லயன் சீமாட்டி ச.சண்முகநாதன் ஆகியோர் பாடசாலை, பல்கலைக்கழக, மாணவர்களுக்கும் பாட சாலைக் கல்வியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கும் விசேட ஆங்கில வகுப் பினை ஆரம்பித்து வருடத்தில் இரு தடவைகள் நடத்தி வருகின்றனர். இவர் களின் அர்ப்பணிப்பான சேவையில் நூற் றுக்கணக்கானவர்கள் ஆங்கில அறிவினைப் பெறமுடிந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களின் கலாசாரமும் நவநாகரிக மாற்றமும்

சோபியா.



திருமண வாழ்வு சொர்க்கத்தில் நிச்சயிக்கப் படுவது என்று எமது மூதாதையார்கள் கூறியுள்ளனர். ''இன்னார்க்கு இன்னார் என்று எழுதி வைத்தானே. தேவன் அன்று'' என்ற கூற்றுக் கூட நமது கலாசார விழுமியங்களை எடுத்துக்காட்டுவதாகவே அமை கின்றது. திருமணத்தின் பின் அவர்கள் புது வாழ்க்கை வாழ ஆரம்பித்து தமக்கென ஒரு புதுச் சூழலையே உரு வாக்குகின்றனர்.

இவ்வாறான ஒரு சொந்தம் உருவாகுவதற்கு அனைவர் மத்தியிலும் சட்ட பூர்வமாக (எழுத்து மூல மாக) இவள் இவனுடைய மனைவி என்று புது உறவு கள் உருவாக்கப்படுகின்றது. அதுமட்டுமல்லாமல் அக்கினியையும், உறவுப் பெரியவர்களையும் சாட்சி யாக வைத்துப் பெண்ணுக்கு மங்களகரமாக ''தாலி'' கட்டப்பட்டுகின்றது.

இந்தப் புனிதமான உறவுடன் தன் குடும்பம், மாமி யார் குடும்பம், கணவன் எனும் புதுக் குடும்பத்தைப் பொறுப்பேற்க வேண்டிய கட்டாயம் பெண்ணுக்கு உண்டு. இவ்வாறு வழங்கப்பட்ட தாலியின் மகத்து வம் பற்றிப் பெண்கள் பலர் புரிந்து கொள்வதில்லை.

அக்கினி சாட்சியாக அருந்ததி பார்த்து, அம்மி மிதித்து புது உறவினைப் பெறுவதற்கு இறைவனால் வழங்கப் பட்ட பாசக் கயிறு தான் '' தாலி''. இதுவே பெண்ணுக் கான ஆண்வீட்டுச் சீதனம் என்று கூடக் கூறலாம். இத்தகைய பெறுமதிமிக்க ''தாலியினை'' பெண்கள் சிலர் அணிய விரும்புவதில்லை.

முன்னைய காலத்தில்''மஞ்சள் கயிறு'' தான் தாலி என அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் தற்போது தங்கத் தால் வடிவமைக்கப்பட்டு நாகரிக மாற்றத்திற்கு ஏற் றாற்போல் பத்து இருபது பவுண் எனப் பெண்கள் கழுத் தில் வடமாகக் கட்டப்படுகிறது. பெண்கள் திருடர்கள் பயம், நாகரிக மோகம் போன்றவற்றால் தாலியை அணிய விரும்புவது இல்லை. பெண்களைத் திருமணத் தின் பின் அடையாளப்படுத்தும் இன்னொரு சின்னம் ''குங் குமப்பொட்டு'' பெண்களை 'லட்சுமி கடாச்சம்' என்பார்கள். மகாலட்சுமியான இவர்களின் முகத்தைப் பிரகாசப்படுத்திக்காட்டும் சக்தி இந்தப் பொட்டுக்கு உண்டு. இதுகூட நாகரிக மாற்றங்களுக்கு ஏற்றாற் போல் ''ஸ்ரிக்கர்ப் பொட்டு'' வடிவில் வந்து விட்டதால் ''குங்குமப் பொட்டு'' வைப்பதில் நாட்டம் குறைந்து செல்கின்றது.

நெற்றியில் பொட்டு வைப்பதற்கு விஞ்ஞான ரீதியாகவும் கருத்துக்கள் சொல்லப்பட்டாலும் ''குங்குமப் பொட்டுக்கு'' திருமணச்சடங்கு மூலம் வழங்கப்படு கின்ற கௌரவம் அளப்பரியது. அதனை வைப்பதனால் கணவனுக்குரிய துன்பங்கள் மறைந்து விடும் எனவும் அது பெண்களுக்கு நாணம் எனவும் கூறுகின்றனர்.

''மெட்டி'' ஆண்கள் பெண்களின் பாதம் அடி பணிந்து அணிவிக்கப்படுகின்ற அணிகலன். இது பெண்ணின் காலிலிருந்து கருப்பைக்குச் செல்லும் நரம்புகளுக்குப் பாதுகாப்பாக அமைகின்றது. கருவுற்ற பெண்ணிற்கு நரம்புகளில் ஏற்படும் வலிகளை, உழை வுகளைத் தீர்ப்பதற்கு காலை அழுத்துவதன் மூலம் வலி யைக் குறைக்கலாம். எனவே மெட்டியை அணியும் போது காலுக்குத் தானாகவே உராய்வு ஏற்படுகிறது. எனவே பெண்கள் மெட்டியை அணிந்துகொள்வது அவசியமாகின்றது. இது திருமணமான பெண்கள் அணிந்து கொள்ளவேண்டும் என்பதை மட்டும் அறிந்து வைத்துக்கொண்டும் அர்த்தம் புரியாமல் பலரும் உதாசீனம் செய்கின்றனர்.

தாலி, குங்குமப் பொட்டு, மெட்டி என்பன கலாசாரம் வாயிலாக, பண்பாடு ரீதியாக, சம்பிரதாயம் பூர்வமாக பெண்களுக்கு ஆண்களால் வழங்கப்படுகின்ற அடை யாளங்கள் மட்டுமன்றி அவளிற்கு வழங்கப்படும் உடல் ரீதியான பாதுகாப்பும் கூட. முற்காலத்தில் பெண்கள் ஏனைய ஆடவர்களை நிமிர்ந்து பாராமல் பாதம் பார்த்து நடப்பார்களாம். அப்போது அந்தப்பெண் திருமணம் செய்தவளா என அடையாளம் காண்பதற்காகப் பெண் களின் காலைப் பார்த்து 'மெட்டி' அணிந்து இருந்தால் இவள் திருமணம் செய்தவள் என இனங்காண் பார்கள். ஆனால் தற்போதைய பெண்கள் நவநாகரி கத்தால் இழுக்கப்பட்டு கலாசார முறைகளை யும் மீறி வாழப்பழகி விட்டார்கள்.

திருமணத்தின் பின் பெண்கள் அணியும் 'தாலி' நெற் றியில் இடும் 'பொட்டு' கணவனது ஆயுள் காலத்தை அதி கரிக்கச் செய்கின்றது என மூதாதையர்கள் கூறுவார்கள்.

கட்டிய கணவனுக்குப் பொறுப்புள்ள மனைவியாக மட்டும் இருந்தால் போதுமா? சமூகத்திற்கு அவப் பெயர் களை ஏற்படுத்தவும் பண்பாட்டு கலாசாரங்கள் மறைந்து போவதற்கும் நாமே காரணமாக இருக்கலாமா? எனவே தாலி, குங்குமப் பொட்டு, மெட்டிஎன்பவற்றுக்குரிய மகி மையையும் கணவனுக்குரிய ஆயுளையும் மனதிற் கொண்டு வாழ்வதே எமது கடமையாகக் கொள்ளப் படுகின்றது. எனவே இவற்றை அணிவதால் நாகரிக மாற்றத்திற்குப் பாதிப்பு எதுவுமில்லை.


# சீதனத் தட்டில் விற்கப்படும் ஆண்கள்

தமிழர்களின் பண்பாட்டில் திருமணம் என்பது பல அம்சங்களைக் கொண்டதுடன் அது நிரந்தரமானதும் கூட காதல் திருமணத்தை விட தரகர் மூலம் பேசப் படும் திருமணத்திற்குப் பல்வேறுபட்ட நடை முறை களை எமது பெற்றோர்கள் நுணுக்கமாக ஆராய்ந்து கொள்வார்கள்.

அதிலும் குறிப்பாக சாதி, சமயம், வசதி வாய்ப்பு, சீதனம், அழகு போன்றவை முக்கியமானவையாகக் கொள்ளப்படுகின்றன. இதன் காரணமாகத்தான் காதல் திருமணங்கள் பெருமளவில் எற்றுக்கொள் ளப்படுவதில்லை.

தரகர் மூலம் சாதகம்(குறிப்புப்) பார்க்கும் போது ஆண் எனில் தொழில், குண நடை, அழகு இவற்றைக் கருத்தில் கொள்வார்கள். அதுவே பெண்ணாக இருந் தால் வயது, அழகு, குணம், கல்வி, சீதனம் போன்ற வற்றை முன்னிலைப்படுத்துவார்கள். இவற்றில் பெண் வீட்டாரிடம் இருந்து எதிர்பார்க்கப்படும் ''சீதனம்'' எல்லாவற்றிலும் விலைமதி கூடியது.

வைத்தியராகவோ அல்லது பொறியியலாளரா கவோ அல்லது அரச தொழில் புரிபவராகவோ ஆண் இருந் தால் அக்குடும்பத்தார் பெண் வீட்டில் இருந்து எதிர் பார்க்கும் ''சீதனம்'' அதிகமாக இருக்கும். அந்த ஆணைப் பெற்றவர்கள் படிப்பிற்கு ஏற்பட்ட செலவுகள், ஏனைய செலவுகளையும் கணக்குப்போட்டுத் தம்மால் செலவானதைப் பெண்வீட்டாரிடம் இருந்து ஒட்டு மொத்தமாகப் பெற்றுவிடவேண்டும் என எண்ணு வார்கள். யாழ்ப்பாணத்துப் பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்களில் ஒன்றாகப் பெண் வீட்டார் ''சீதனம்'' கொடுக்கும்போது குடும்பச் சொத்தில் ஒன்றான வீடு அல் லது காணியை மக ளுக்காகக் கொடுப் பது வழக்கம். இதற் குள் அவர்களுடைய எதிர் பார்ப்புகளும் அடங்கி இருக்கும். தமது எதிர்காலத் தில் தாம் முதிர்வ டையும் சமயம் மக ளுடன் தமது இறு திக் காலத்தைக் கழிப் பதற்காகத்தான் வீட்டி னைச் சீதனமாக மகள் பெயரில்எழுதி வைப் பார்கள்.



ஸீவெள், மானிப்பாய்.

இச் சீதனமுறை காலப்போக்கில் வசதி வாய்ப்புக் கள் அதிகரிக்க பல மடங்காக வளர்ச்சியடையத் தொடங்கியது. காணி,வீடு, நகை, பணம் என சீத னத்திற்கான பட்டியல் போடப்பட்டது.

இதனால் பெண்கள் தமது வசதி வாய்ப்புக்கு ஏற்ற முறையில் பெற்றோர்களால் நிர்ப்பந்திக்கப்படுகின்ற திருமணத்தை விரும்பியோ, விரும்பாமலோ கட் டாயம் ஏற்றுக்கொள்ள வேண்டிய சூழலுக்குத் தள்ளப் படுகின்றார்கள்.

சாதாரண குடும்பத்தில் பிறந்து படித்துப் பட்டம் பெற்ற பெண்கள் கூடத் தமக்குப் பொருத்தமான அறிவுடன் கூடிய ஆணைத் திருமணம் செய்ய முடி யாத நிலை. ஏனெனில் படித்துப் பட்டம் பெற்ற ஆணுக்குரிய விலை அதிகமாக இருக் கும்.

இதனால் தனது வசதி வாய்ப்புக்கு ஏற்றாற் போல் ஒரு ஆணைத் தனது துணை யாக ஏற்றுக் கொள்கிறாள் பெண். அத்துடன் பல பெண்கள் 40 வய தாகியும் திருமண மாகாது வயது முதி ர்ந்த கன்னியாக வே இருக்கின்ற னர்.

இந்தக் கொடு மையை ஒழிப்ப தற் குப் பெற்றோர்களே நாமே வழி வகுக்க வேண்டும்.

## சூரியப் பெண்

*பெண்ணே!*
*மலரைப் போல நீ இராதே*
*அந்தியில் வாடி விடுவாய்*
*நிலவைப் போல நீ இராதே*
*அமாவாசையில் ஒளிரமாட்டாய்*
*தேனைப் போல நீ இராதே*
*பலராலும் ருசிக்கப்படுவாய்*
*நதியைப் போல நீ இராதே*
*அமைதியே உனக்கு இராது*
*அச்சாணியாய் நீ இராதே*
*சுதந்திரம் இழக்கப்படுவாய்*
*சுடர்விளக்காய் நீ இராதே*
*உன்னை ஆட்டுவிக்கும்*
*சூரியனைப் போல நீ இரு!*
*சூரியப் பெண்ணாய்-*
*சுடர் விடுவாய்!!*


*சி.வினோவர்மன்,*
புளியங்கூடல்.

## சுமை தாங்கியா நீ?

*பூக்களைத் தந்து*
*உன் புத்தியை மழுக்கினர்!*
*தங்கம் தந்து*
*உன் தரத்தைக் குறைத்தனர்!*
*பட்டும், பொட்டும் தந்து*
*உன் பலத்தை அழித்தனர்!*
*தெரியுமா உனக்கு?*
*சிரிக்கக்கூட*
*உரிமையில்லை என்றும்*
*உரத்துப் பேசவும்*
*உன்னால் முடியாது....!*
*இன்னுமா உனக்குப் புரியவில்லை*
*நீ என்ன சுமை தாங்கியா?*

*சு.ஜிந்துஜா,*
கோண்டாவில்.

# அடி அளத்தல் பிரதட்சணமும் உடல் ஆரோக்கியமும்



ஆண்களை விடப் பெண்கள் தான் ஆலய வழி பாடுகளில் அதிக ஈடுபாடு காட்டு வதுண்டு. பெண் களே கடவுளிடம் பல வேண்டுதல் களைக் கேட்டுக் காணிக்கையாக நேர்த் திகள் வைத்துக் கடன் தீர்ப்பார்கள். நேர்த்திக்கடன் என்பதில் காவடி எடுத்தல், நிறைகுடம் சுமப்பது, அங்கப் பிரதட்சணம் செய்வது, அடி அளத்தல் பிர தட்சணம் செய்வது, கற்பூரச்சட்டி எடுத் தல், பொங்கிப் படைத்தல் போன்றவை அடங்கும்.

இவற்றில் அங்கப் பிரதட்சணம் ஆண்களும் பெண்களும் செய்வது உண்டு. ஆனால் அடி அளத் தல் பிரதட்சணம் பெண்கள் மட்டுமே செய்வார்கள்.

அடிப் பிரதட்சணம் என்பது பாதங்களை ஒவ் வொரு அடியாக வைத்து ஆலயத்தைச் சுற்றி வருவது. இவ்வாறு ஒவ்வொரு அடியாக வைக்கும் போதும் பாதத்தின் நடுப்பாகம் உட்படக் குதிக்கால் பாதம் வரை நிலத்தில் அழுத்தி நடக்க வேண்டும்.

இந்த அடிப் பிரதட்சணம் மூலம் பெண்களின் உடலுக்கு ஒருவித பயிற்சி கிடைப்பதோடு உடல் ஆரோக்கியமாகவும் இருக்க முடிகிறது.

இது எமது முன்னோர்கள் அறிந்து வைத்திருக்கும் நம்பிக்கை. அடி அளத்தல் பிரதட்சணம் செய்யும் போது பாதங்கள் நன்றாக நிலத்தில் அழுத்தப் படு வதால் கால்களுக்கு வேகமாக இரத்தோட்ட செயற்பாடு நடை பெறுகின்றது. இது விஞ்ஞான ரீதியான உண்மை.

இந்த அடி அளத்தல் பிரதட்சணம் செய்யும்போது தலை வலி, சிறுநீரகக் கோளாறு, முழங்கால்வலி ஆகிய வற்றுக்குச் சிறந்த மருதாக அமைகின்றது.

குறிப்பாகத் திருமணம் ஆகாத பெண்கள் அடி அளத்தல் பிரதட்சணம் செய்தால் விரைவில் திரும ணம் நடை பெறும் என்பது முன்னோர்களின் கருத்து. இதற்குக் காரணம் அடி அளத்தல்பிரதட்சணம் செய்வ தன் மூலம் பெண்கள் அழகான உடல் தோற்றத்தைப் பெறுகின்றார்கள் என்பதே. இதனால் பெண்களின் உடல் நலம் பெரிதும் நன்மை அடைகின்றது.

இந்த அடி அளத்தல் பிரதட்சணம் கடவுளைச் சென்ற டைகிறதோ இல்லையோ பெண்களுக்கு நன்மை தருகின்றது என்பது விஞ்ஞான ரீதியான உண்மை.

நிஸா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருளின் கதவுகளைத் திறந்தவன் (14)



தன்னைக் கொல்ல வந்தவர்களுக்கே 'தண்ணி' கொடுத்துவிட்டு அமெரிக்காவுக்கு வந்த யூலியன் தான் அமைதியாக இருப்பது போலவே காட்டிக் கொண்டான். ஆனாலும் அந்த அமைதி ஆபத்தானது என்பது யூலியனைப் பற்றி நன்கறிந்தவர்களுக்குப் புரிந்திருந்தது. யூலியன் ஏதோ ஒன்றைச் செய்யப் போகிறான் என்பதை ஒருவாறு ஊகித்துக் கொண்டாலும் கூட எந்தத் திசையில் அவனது பாய்ச்சல் இருக்கும் என்பதோ அவனுக்கு இரையாகப் போவது யாரென்பதோ எவருக்குமே தெரிந்திருக்கவில்லை.

விக்கிலீக்ஸ் தளத்துக்கு நிதியாளர்களைத் தேடியே தான் அமெரிக்காவுக்கு வந்துள்ளதாக அசாஞ்சே எல்லோருக்கும் கூறிக்கொண்டிருந்தார். ஆனால் அமெரிக்க அரசு அதை நம்பத் தயாராக இல்லை. சி.ஐ.ஏ.யின் இறுக்கமான கண்காணிப்பு யூலியனைச் சூழ்ந்து கொண்டது. அந்தக் கண்காணிப்பையெல்லாம் ஒரு பொருட்டாகவே யூலியன் மதிக்கவில்லை. தன்பாட்டில் தன்வேலையைத் தொடர்ந்து கொண்டேயிருந்தான். கொஞ்ச நாள்களிலேயே தனது அதிரடி வெடியைப் பற்ற வைத்தான் யூலியன்.

இம்முறை யூலியனிடம் மாட்டிக் கொண்டது ஒரு தேவாலயக் குழுமம். மதப்பிரசார நடவடிக்கைகள் என்ற பெயரில் அமெரிக்காவின் கலிபோர்னியாவில் இயங்கிய ஒரு தேவாலயக் குழுமத்தின் மறைக்கப்பட்ட பக்கங்களை மக்களின் பார்வைக்காக விக்கிலீக்ஸில் யூலியன் விருந்து வைத்தான்.

**யூலியன் அசாஞ்சே பற்றிய ஒரு விறு விறு தொடர்**

அப்படி என்னதான் அந்தத் தேவாலயக் குழுமம் செய்து வந்தது? பொதுவாகவே அமெரிக்காவில் கிறிஸ்தவ மதத்தின் பல்வேறு பிரிவுகளும் தமக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதை எவரும் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதில்லை. (சிலவேளைகளில் அப்படிப் பார்ப்பது 'தெய்வக் குற்றமாகி விடும்' என்று தான் அப்படிச் செய்வதில்லை போலும்) இதனைத் தமக்கு வசதியாக்கிக் கொண்டது ஒரு தேவாலயக் குழுமம். நடமாடும் மதப்பிரசாரம் என்ற போர்வையில் மாணவர்களுக்கும் மற்றும் தமது வழமையான வாடிக்கையாளர்களுக்கும் போதைப்பொருள்களை இந்தக்குழுமம் தங்குதடையின்றி விநியோகித்து வந்தது.

தமது போதைப்பொருள் வியாபாரத்துக்கு நாள்தோறும் வாடிக்கையாளர்களை அதிகரிக்கும் செயற்பாட்டுக்காக இளைய மதகுருக்களை களத்தில் இறக்கினார்கள். யாழ்ப்பாணத்தில் இப்போது வீதியெங்கும் கூவிக்கூவி விற்கப்படும் 'சிம் கார்ட்' விற்பனையாளர்கள் போல , அந்த இளம் மதகுருக்கள் போதைப்பொருள்களை மாணவர்களிடத்தே விற்கத் தொடங்கினர். இதனால் பெட்டிக்கடைபோல் ஆரம்பித்த தேவாலயக் குழுமம் கொஞ்ச நாள்களிலேயே 'சுப்பர் மார்க்கெட்' மாதிரி சடுதியாக விரிவடைந்தது. விற்பனையும் உயர்ந்தது. வெளிநாடுகளிலுள்ள பாதாளக்குழுக்கள் குறித்த தேவாலயக்குழுமத்துக்குப் போதைப் பொருள்களை கிலோக்கணக்கில் அனுப்பி வைக்குமளவுக்கு அதன் வியாபார நடவடிக்கைகள் 'சர்வதேச மயப்படுத்தப்பட்டன'. எல்லாவற்றையுமே சரிவரச் செய்து வந்த குறித்த தேவாலயக் குழுமம் ஒரேயொரு பிழையை விடத் தவறவில்லை. தாம் செய்யும் சகல நடவடிக்கைகளையும் ஒருவரி கூடத் தவற விடாமல் கணினியில் பதிவேற்றிக் கொண்டதுதான் அந்தத் தவறு. தேவாலயக் குழுமத்தின் கணினியில் உள்ள பாதுகாப்புக் குறைபாடுகளை இனம் கண்டு அதன்வழியாக ஒருநாள் யூலியன் ஊடுருவினான். அத்தோடு மட்டும் நின்று விடாது, சகல ஆதாரங்களையும் பிரதி செய்துகொண்டு கணினி வலையமைப்பில் இருந்து வெளியேறிவிட்டான்.

அதன் பின்னரே தேவாலயக்குழுமத்தின் போதைப் பொருள் விநியோகம் தொடர்பான மிக முக்கியமான செயற்பாடுகளை விக்கிலீக்ஸ் ஊடாகக் கசிய விட்டான்.

தம்மீதான குற்றங்கள் முன்வைக்கப்படும் போது ''அதை நாம் செய்யவில்லை'' என்று எடுத்த எடுப்பிலேயே மறுப்பறிக்கை விடுவது நித்தியானந்தா சுவாமிகள் முதல் எல்லா மதவாதிகள் வரையும் நீள்கின்ற ஒன்றுதான். இதற்கு அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள குறித்த தேவாலயக் குழுமமும் விதிவிலக்கல்ல. விக்கிலீக்ஸ் தன்னுடைய அந்தரங்க அசிங்கங்களை அரங்கேற்றிவிட்டதை அறிந்த தேவாலயக்குழுமம் ' குய்யோ! முறையோ! என்று கூச்சலிட்டது. யூலியன் மீது மானநஷ்ட வழக்குத் தொடரப்போவதாக ஊடகங்களில் அறிக்கை மேல் அறிக்கையாக விட்டுக் கொண்டிருந்தது. ஊடகச் சுதந்திரம் என்ற பெயரில் மக்களின் மத நம்பிக்கையைச் சிதறடிக்கும் வகையில் தவறான தகவல்களை வழங்குவதாகவும் அந்த அமைப்பு யூலிய்னைச்சாடியது.

ஒளண்யன்

'போற்றுவார் போற்றட்டும், தூற்றுவார் தூற்றட்டும்; நம்வழி நேர் வழியாகட்டும்' என்கிற பாணியில் யூலியன் இந்தக் குற்றச்சாட்டுகள் குறித்து மௌனமாகவே இருந்தான். ஆனாலும் அந்த மௌனத்தின் பின்னாலிருந்த ஆபத்து அடுத்த சில நாள்களில் தெரியவந்தது.

போதைப்பொருள் விநியோகம் தவிர்ந்த வேறு என்னென்ன சட்ட விரோத நடவடிக்கைகளில் தேவாலயக்குழுமம் ஈடுபடுகிறது என்பது பின்னர் வந்த நாள்களில் விக்கிலீக்ஸ் அம்பலப்படுத்தியது. அத்தோடு தேவாலயக் குழுமத்தின் வாய் அடைபட்டுப் போனது

*(திரைகள் இன்னும் திறக்கும்)*

**தவறிவிட்டது**

திருகோணமலையைச் சேர்ந்த இருதயநாதன் ரொசாந்த் என்பவரது தேசிய அ.அட்டை (இல 912060136 V) 24.01.2011 அன்று யாழ்ப்பாணம்- காரைநகர் பஸ் ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்குறிப்பிட்ட தொலைபேசி இலக்கத் துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். T.P 021 492 1467

**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2194 திகதி 26-01-2011

ஆங்கில எழுத்திற்கும் Q

வெற்றி எண்கள் 27 52 63 67

போனஸ் இல: 36

ஜக்பொட் பரிசு ரூ. 32,974,725/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 219741 | 20/- | 4,394,820/- |
| 2 இல | 15635 | 100/- | 1,563,500/- |
| 3 இல | 332 | 1,000/- | 332,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 8894 | 40/- | 355,760/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 640 | 1,000/- | 640,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 11 | 10,000/- | 110,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 32,974,725/- | - |
| 1 இல + போனஸ் இல | 10446 | 100/- | 1,044,600/- |
| 2 இல + போனஸ் இல | 486 | 500/- | 243,000/- |
| 3 இல + போனஸ் இல | 06 | 100,000/- | 600,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 435 | 200/- | 87,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 21 | 1,500/- | 31,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 10,402,180/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 256658 | | 11,002,180/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கம்பஹா | 202754914-1-25 |
| திருகோணமலை | 202755923-8-49 |
| கம்பஹா | 202754958-5-12 |
| காலி | 202759819-8-14 |
| பதுளை | 202756143-8-26 |
| கண்டி | 202754114-5-45 |
| குருநாகல் | 202750350-0-06 |
| கேகாலை | 202755068-6-29 |
| அநுராதபுரம் | 202756297-7-34 |
| குருநாகல் | 202750389-2-33 |

வரும் சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு - ரூ. 33,574,450/-

பச்சை நிற டிக்கட்டுகள் 2011 ஜனவரி 29 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

## வேலணைப் பிரதேச சபையின் அல்லைப்பிட்டி அலுவலக கதவுகள் திருடப்பட்டன

யாழ்ப்பாணம்,ஜன.28

வேலணைப் பிரதேச சபையின் அல்லைப்பிட்டி உப அலுவலகத்திற்கென வைக்கப்பட்டிருந்த கதவுகள் திருட்டுப் போயுள்ளன.

தற்சமயம் அல்லைப்பிட்டியில் உள்ள உப அலுவலகப் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வரும் நிலையில் அதற்கென வைக்கப்பட்டிருந்த கதவுகள் காணாமல் போயுள்ளதாகவும் அவற்றின் பெறுமதி 55 ஆயிரம் ரூபா எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-5)

## தேசிய சுதந்திரதின விழா இம்முறை கதிர்காமம் நகரில்

கொழும்பு,ஜன.28

இலங்கையின் 63 ஆவது தேசிய சுதந்திரதின விழா கதிர்காமம் நகரில் கோலாகலமாகக் கொண்டாடப்படவுள்ளது.

எதிர்வரும் 4 ஆம் திகதி காலை 6.30 மணிக்கு கதிர்காமத்திலுள்ள கிரிவிகாரை, பிள்ளையார் கோயில், முஸ்லிம் பள்ளிவாசல் மற்றும் புத்தலவிலுள்ள கிறிஸ்தவ ஆலயம் ஆகிய வணக்கஸ்தலங்களில் சமயவழிபாடுகள் இடம்பெறும். அதைத் தொடர்ந்து சுதந்திரதினக் கொண்டாட்டங்கள் ஆரம்பமாகவுள்ளன. பாடசாலை மாணவ, மாணவியர் மற்றும் பாதுகாப்புப் படைப் பிரிவினரின் அணிவகுப்பு மரியாதை ஊர்வலத்துடன் இந்தவிழா நிறைவு பெறும். தொடர்ந்து காலை 9.15 இக்கு நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி உரை நிகழ்த்தவுள்ளார். (ஒ-22)

**விற்பனைக்கு**

* போட்டோக் கொப்பி மெசின்-1118
* பக்ஸ்,மெசின் -(Japan)
* ஒடியோ,வீடியோ செற் (3CD) (300 W)

T.P 0779672098

**வேலை வாய்ப்பு**

மொத்த, சில்லறை புடைவை வியாபாரத்தில் முன் அனுபவமுள்ள விற்பனைப் பிரதிநிதிகள், கணக்காளர் (ஆண்/பெண்) மற்றும் அலுவலக உதவியாளர் தேவை.

விளம்பர இலக்கம்-4111
C/o உதயன்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



கோட்டைக்காடு, சுன்னாகம்.

**பொன்னர் கதிரவேலு**

தோற்றம்: 1933.05.19
மறைவு: 2009.01.19

2011.01.28 வெள்ளிக்கிழமை

பேரோடும் புகழோடும் பெருமையாய் வாழ்ந்த உத்தமரே!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்- உங்கள் பசுமையான நினைவுகள் என்றும் எங்களைவிட்டு அகலாது!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(109951)

நினைவுகளுடன்,
மனைவி, பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்



**திருமதி ஐயாத்துரை பரமேஸ்வரி**

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை பரமேஸ்வரி நேற்று (27.01.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை- சிவபாக்கியம் தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான சுப்பையா- வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும் சுப்பையா ஐயாத்துரையின் அன்பு மனைவியும் தர்மகுலதேவி, விக்னேஸ்வரன் (கனடா), சிவசுப்பிரமணியம் (சின்னத்தம்பி- கனடா), வாசுகி, சந்திரவதனி (லண்டன்),ஜெயசீலன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4ஆம் மைல் கல்,
கே.கே.எஸ்.றோட், இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கா - இந்தியாவை விட பின்தங்கும் அபாயம்

வாஷிங்டன், ஜன. 28

கல்வி, தொழில் நுட்பம், ஆராய்ச்சி ஆகியவற்றில் நாம் இந்தியாவை விட பின் தங்கும் அபாயம் எதிர்காலத்தில் இருக்கிறது என, அமெரிக்க அதிபர் ஒபாமா எச்சரித்துள்ளார்.

அமெரிக்க பார்லிமென்ட் கூட்டு கூட்டத்தில் உரையாற்றிய ஒபாமா, இது குறித்து பேசியதாவது:

உலகத்திற்கு சாதகமான அமைதி மற்றும் வளத்துக்காக, தெற்காசிய நாடுகளுடன் புது உறவை மேற்கொண்டுள்ளோம்.

வேலை வாய்ப்பை ஏற்றுமதி செய்யும் அளவுக்கு இந்தியாவும் சீனாவும் வளர்ந்துள்ளன.

கல்வி, தொழில்நுட்பம், ஆராய்ச்சி ஆகியவற்றில் நாம் இந்த நாடுகளை விட பின் தங்கும் அபாயம் உருவாகி வருகிறது.



அமெரிக்க அதிபர் ஒபாமா, வாஷிங்டனில் நடந்த கூட்டு கூட்டத்தில் பேசிவிட்டு திரும்பிய போது பலர் அவருடன் கைகொடுத்தனர்.

காலச் சூழலுக்கு ஏற்ப கல்வியில் புதுமையை புகுத்துவதால், அவர்கள் உலக போட்டிகளை சமாளிக்கும் திறன் பெற்றுள்ளனர். இளம் வயதிலேயே அவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு அறிவியல், கணிதங்களை கற்பிக்கின்றனர். கல்வித் துறையில் அதிக முதலீடுகளை செய்கின்றனர். இதனால், அவர்கள் வேகமாக முன்னேறுகின்றனர்.

இந்தியா மற்றும் சீனாவுடன் மேற்கொண்டுள்ள ஒப்பந்தங்கள் மூலம் அமெரிக்காவில் இரண்டரை லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்க உள்ளது.

சீனா, இந்தியா போன்ற நாடுகள் கல்வியில் நமக்கு போட்டியாக இருப்பதால் கல்வியில் புதுமையும், சீர்திருத்தமும் செய்ய வேண்டியது அவசியமாகிறது.

அவற்றை ஈடு கட்டி சமாளிப்பதில் அரசு அக்கறை காட்டி வருகிறது. பத்து ஆண்டுகளுக்குள் அறிவியல், தொழில்நுட்பம், இன்ஜினியரிங், கணிதம் ஆகிய துறைகளில் ஒரு லட்சம் ஆசிரியர்களை உருவாக்க திட்டமிட்டுள்ளோம்.

### எச்சரிக்கிறார் ஒபாமா

அல் - குவைதா பயங்கர வாதிகள் தொடர்ந்து அமெரிக்காவை தாக்க திட்டமிட்டுள்ளனர். அமெரிக்க புலனாய்வுத் துறையினர், பயங்கரவாதிகளின் திட்டத்தை புரிந்து கொண்டு அதை முறியடித்து வருகின்றனர்.

அமெரிக்க குடும்பத்தில் முஸ்லிம்களும் ஒரு அங்கம். பாகிஸ்தானில் பதுங்கியுள்ள அல் - குவைதாவினர், அந்த நாட்டு அரசினால் மிகுந்த நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர். இதனால், பாகிஸ்தானில் அல் - குவைதாவினின் செல்வாக்கு குறைந்து விட்டது. ஆப்கான் மற்றும் அரபு நாடுகள் எங்கிருந்தாலும் பயங்கரவாதிகளை முறியடிப்போம். - என்று ஒபாமா குறிப்பிட்டார். (ம)

# பின்லேடனின் பாதுகாவலருக்கு ஆயுள் தண்டனை விதிப்பு

நியூயோர்க், ஜன.28

கென்யா, தான்சானியாவிலுள்ள அமெரிக்க தூதரகங்கள் மீது, குண்டு வீசி தாக்குதல் நடத்திய சம்பவத்தில் முக்கிய பங்கு வகித்தவரும், ஒசாமா பின்லேடனின் பாதுகாவலருமான அகமது கல்பான் கிலானிக்கு அமெரிக்க நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

கடந்த 1998ஆம் ஆண்டு கென்யா மற்றும் தான்சானியாவில் உள்ள அமெரிக்க தூதரகங்கள் மீது, ஒபாமா பின்லேடனின் அல்-குவைதா அமைப்பைச் சேர்ந்த பயங்கரவாதிகள் குண்டு வீசி தாக்குதல் நடத்தினர். இதில் 224 பேர் பலியாயினர். இந்தச் சம்பவம் சர்வதேச அளவில் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்தத் தாக்குதலை முன்னின்று நடத்தியது பின்லேடனின் பாதுகாவலரான அகமது கல்பான் கிலானி என்று விசாரணையில் உறுதியானது.

இவரைப் பிடிக்க, அமெரிக்க உளவுப் படையினர் வலை வீசி தேடி வந்தனர். கடந்த 2004ஆம் ஆண்டு பாகிஸ்தானில் இவர் பிடிபட்டார். கடந்த ஆறு ஆண்டுகளாக குவாந்த நாமோ மற்றும் பல்வேறு சிறைகளில் அடைக்கப்பட்டார். கடந்த ஆண்டு குவண்டன் மானோ மன்ஹாட்டனில் உள்ள சிறைக்கு கிலானி மாற்றப்பட்டார். இவர் மீதான விசாரணை, அமெரிக்க சிவில் நீதிமன்றத்தில் நடந்து வந்தது.

விசாரணையின் போது, தன் மீதான குற்றத்தை மறுத்தார். எனினும் இதற்கு கடும் தண்டனை அளிக்க வேண்டும் என்று குறிப்பிட்டு ஆயுள் தண்டனை வழங்கித் தீர்ப்பளிக்கப்பட்டது. (ம)



புதிதாக உருவாக உள்ள தெற்கு சூடானின் அதிபர் சல்வாகிர் மயார்டிட்(இடது) தலைநகர் ஜூபாவிற்கு வருகை தந்த மலாவி அதிபர் பிங்கு வாமுதாரிகாவை வரவேற்றார்.


## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

திருமதி
கனகம்மா செல்லையா



கடந்த 29.12.2010 அன்று சிவபதமடைந்த எமது தாயாரின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றி அனுதாபம் தெரிவித்தோருக்கும், உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் நாளை (29.01.2011) சனிக்கிழமை அதி காலை 4.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் நண்பகல் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பத்தானை,
அல்வாய் கிழக்கு.
செ.சிவசுப்பிரமணியம் (சுப்ரி- மகன்)


# ரூனிசியா ஜனாதிபதிக்குப் பிடியாணை

ரூனிஸ், ஜன. 28

ரூனிசியா நாட்டில் ஏற்பட்ட கலவரத்தினால் நாட்டை விட்டு தப்பிஓடிய ஜனாதிபதி பென் அலிக்கு எதிராக சர்வதேச பிடி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வட ஆபிரிக்காவில் உள்ள ரூனிசியா நாட்டின் அதிபராக 23 ஆண்டுகள் பென் அலி ஆட்சியில் இருந்தார்.

இந்த நிலையில் டுனீசியாவில் வேலையில்லா திண்டாட்டம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் அவருக்கு எதிராக தொடர் போராட்டங்களை நடத்தினர்.

இதனால் அதிபர் பென் அலி நாட்டை விட்டு வெளியேறி சவூதி அரேபியாவுக்கு ஓட்டம் பிடித்தார்.

தற்போது அங்கு தஞ்சமடைந்துள்ளார். அவருக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக ரூனிசிய நீதித்துறை அமைச்சு அறிவித்தது.

# தீவிரவாதத்தை முறியடிக்க புதிய திட்டங்கள்

லண்டன், ஜன.28

பிரிட்டனில் தீவிரவாதிகளின் சதித் திட்டங்களை முறியடிக்க அரசின் பரிசீலனையில் உள்ள புதிய திட்டங்கள் விரைவில் வெளிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் எனத் தெரிய வந்துள்ளது.

அரசின் புதிய திட்டங்களின்படி தற்போது இருக்கும் அதிகார வரம்புகள் மாற்றியமைக்கப்படவும் தீவிரவாதிகள் என சந்தேகிக்கப்படுவோரை தொடர்ந்து தீவிரமாக கண்காணிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. கடந்த வருடம் ஜூலை மாதத்தில் இதற்கான கொள்கைகள் முதன்முறையாக வகுக்கப்பட்டு அதிரடியாக நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டன.

இதன்படி தீவிரவாதிகள் எனச் சந்தேகிக்கப்படுவோர் மீது குற்றம் பதிவு செய்யப்படாமலே 28 நாள்கள் காவலில் வைத்து விசாரிக்கும் அதிகாரம் உள்துறை அமைச்சகத்தால் பொலிஸுக்கு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)


## ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயம், கொக்குவில் கணக்காய்வு

மேற்படி ஆலயத்தின் 2010 ஆம் நிதியாண்டின் (01.01.2010 தொடக்கம் 31.12.2010 வரையிலான) வரவு - செலவு கணக்கினைப் பரிசோதிப்பதற்கு, பதிவு செய்யப்பட்ட கணக்காய்வு நிறுவனங்களிடமிருந்து 04.02.2011 வரை கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விவரங்களை ஆலயப் பணிமனையில் ஆலயம் திறந்திருக்கும் நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

கோணாவளை ஒழுங்கை, கொக்குவில். செயலாளர்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 24 . 09 . 1944
மறைவு 01 . 02 . 2008

அமரர் வல்லிபுரம் நித்தியானந்தன்
(முன்னாள் மருந்தாளர், யாழ். பல்கலைக்கழக சுகாதார நிலையம்)

திதி: தசமி 28.01.2011

ஆண்டுகள் மூன்று ஆனாலும்
ஆற்றாமல் தவிக்கின்றோம்
அழியாத நினைவோடு
உம் பாதையிலே நிற்கின்றோம்

120, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (109907) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

சுப்பிரமணியம் சிவராமலிங்கம்
(இளைப்பாறிய விரிவுரையாளர், நுண்கலைக் கல்லூரி, கொழும்பு)



யாழ்.நீராவியடியைப் பிறப்பிடமாகவும் குப்பிளானை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சிவராமலிங்கம் நேற்றுமுன் தினம் (26.01.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2011) வெள்ளிக்கிழமை நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. ஒரு மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முதலாம் ஒழுங்கை,
முத்தவிநாயகர் வீதி, நல்லூர்.
தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணு ஆயுத ஒப்பந்தத்துக்கு ரஷ்ய நாடாளுமன்றம் ஒப்புதல்

மொஸ்கோ,ஜன.28

அமெரிக்காவுடனான அணு ஆயுத குறைப்பு ஒப்பந்தச் சட்டத்திற்கு ரஷ்ய நாடாளுமன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

அமெரிக்க - ரஷ்யா நாடுகள் இணைந்து தங்களுக்கிடையேயான அணு ஆயுதத்தினை குறைத்துக்கொள்வதற்காக புதிய ஸ்டார்ட் எனும் ஒப்பந்தம் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் ஏற்பட்டது.

இந்த நிலையில் ரஷ்ய நாடாளுமன்றான டூமாவின் மேல் சபையில் அணுஆயுத குறைப்பு ஒப்பந்த சட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

முன்னதாக வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. 350 உறுப்பினர்களில் 226 பேர் ஆதரவாக வாக்களித்தனர்.

இதனைத் தொடர்ந்து வரலாற்று சிறப்பு மிக்க ஸ்டார்ட் ஒப்பந்தத்திற்கு ரஷ்ய நாடாளுமன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

இந்த ஒப்பந்தப்படி இரு நாடுகளிடையே உள்ள 2,200 இற்கும் மேற்பட்ட அணுஆயுத தளபாடங்களை 1,550 ஆக குறைத்துக்கொள்ளவும், இந்த ஒப்பந்தம் 7 ஆண்டுகள் அமுலில் இருக்கும்படியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம)

# பலியானோருக்கு அஞ்சலி

மொஸ்கோ,ஜன28

மொஸ்கோ விமான நிலைய குண்டு வெடிப்பில் பலியானவர்களுக்காக ரஷ்யாவில் ஏராளமானவர்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். ரஷ்யத் தலைநகர் மொஸ்கோ அருகே, டொமொடி டோவோ சர்வதேச விமான நிலையத்தில் சமீபத்தில் பயங்கர குண்டு வெடித்தது.

இந்தச் சம்பவத்தில் 35 பேர் பலியாகினர். 180 பேர் படுகாயம் அடைந்தனர். இந்தச் சம்பவத்துக்காக ரஷ்ய அரசு துக்கம் அனுஷ்டிக்கிறது. இதையொட்டி, மாஸ்கோ உள்ளிட்ட நகரங்களில் தேசியக் கொடி அரை கம்பத்தில் பறக்க விடப்பட்டன. அரச விழாக்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

இந்த குண்டு வெடிப்பு சம்பவத்தில் பிரிட்டன், ஜேர்மனி, கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான், உக்ரைன், உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த எட்டு பயணிகளும் பலியாகியுள்ளதாக ரஷ்ய வெளியுறவுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. (ம)

## நிகர லாபம் சரிவடைய வாய்ப்பு


ஹெல்சிங்கி, ஜன. 28

இந்த நிதியாண்டின் 4ஆம் கால கட்டத்தில், தங்கள் நிறுவன நிகரலாபம் சரிவடைய வாய்ப்புள்ளதாக 'நொக்கியா' நிறுவனம் தெரிவித்துள்ளது.

சர்வதேச அளவில் முன்னணி மொபைல் போன் தயாரிப்பு நிறுவனமான 'நொக்கியா' நிறுவனம், 2010-11ஆம் நிதியாண்டின் 4ஆம் காலகட்டத்தில், நிறுவன நிகரலாபம் 24 சதவீதம் வரை சரிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆப்பிள் நிறுவனத்தின் ஐபோன், சாம்சங் நிறுவனத்தின் காலக்ஸி எஸ் உள்ளிட்ட ஸ்மார்ட் போன்களுக்கு இளைய தலைமுறையினரிடையே வரவேற்பு அதிகமாக உள்ளதன் காரணத்தினாலேயே, இந்த சரிவை தங்கள் நிறுவனம் எதிர்பார்ப்பதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## தலைவர்களின் சங்கமம்



ஜெனிவாவில்நடைபெற்ற மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான நல கருத்தரங்கில் உலக சுகாதார அமைப்பின் இயக்குனர் சீனாவின் மார்கரெட் சான், தான்சானியா அதிபர் ஜகாயா கிட்வேட்டி, ஐ.நா., பொது செயலாளர் பான்கிமூன், கனடா பிரதமர் ஸ்டீபன் ஹார்பர், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# 19 தீவிரவாதிகள் எகிப்தில் கைது

கெய்ரோ,ஜன.28

எகிப்தில் அல்-குவைதா பயங்கரவாத அமைப்புடன் நேரடி தொடர்புடைய 19 தீவிரவாதிகளைப் பாதுகாப்புப் படையினர் கைது செய்துள்ளனர் என உள்துறை அமைச்சர் ஜெனரல் ஹபீப் அட்டிக் தகவல் வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அல்-அஹ்ராம் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் அவர் கூறியிருப்பவை வருமாறு:

மத்திய கிழக்கு நாடான பலஸ்தீனத்தில் மேற்குக்கரை, காஸா ஆகிய பகுதிகளில் சில பயங்கரவாத அமைப்புகள் செயற்பட்டு வருகின்றன. இவை எகிப்துக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட முகாம் அமைத்து வருகின்றன.

இந்தத் தீவிரவாதி அல்-குவைதா அமைப்புடன் நேரடி தொடர்புடையவர்கள் என தெரிய வந்துள்ளது. இதையடுத்து அங்கு பாதுகாப்புப் படையினர் தீவிர சோதனை நடத்தியதில் 19 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து ஏராளமான பயங்கர ஆயுதங்கள், இரகசிய ஆவணங்கள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன. (ம)

# அமெரிக்காவில் இருந்து திருடப்பட்டதல்ல உளவு போர் விமான தொழில்நுட்பம்

## மறுக்கிறது சீனா

பீஜிங்,ஜன.28

உளவு போர் விமான தொழில்நுட்பத்தை சீனாவுக்கு விற்றதாக, அமெரிக்க இந்தியர் ஒருவருக்கு, அந்த நாட்டு நீதிமன்றம் 32 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்துள்ளது.

இதையடுத்து, தனது உளவு போர் விமான தொழில்நுட்பம் அமெரிக்காவில் இருந்து திருடப்பட்டதல்ல என்று, சீனா மறுப்புத் தெரிவித்துள்ளது.

இந்தியாவைச் சேர்ந்தவரும், அமெரிக்காவின் பாதுகாப்புத் துறையில் வடிவமைப்புப் பொறியாளராக பணியாற்றி வந்தவருமான நாஷிர் கொவாடியா (வயது-66) என்பவர், அமெரிக்காவின் பி-2 உளவு போர் விமான தொழில்நுட்பத்தை சீனாவுக்கு விற்றதாகவும், ஜேர்மனி, இஸ்ரேல் மற்றும் சுவிஸ் ஆகிய நாடுகளில் உள்ள தனி நபர்கள் சிலருக்கு அமெரிக்க இராணுவ ரகசியங்களை விற்றதாகவும் குற்றம் சாட்டப்பட்டு, 2005இல் கைது செய்யப்பட்டார்.

அவர் மீது சுமத்தப்பட்ட 17 குற்றங்களில் 14 உறுதிப்படுத்தப்பட்டு, அவருக்கு 32 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்த நிலையில், சமீபத்தில் சீனா நவீன உயர் தொழில்நுட்பத்தில் வடிவமைக்கப்பட்ட ஜே-20 ரக உளவு விமானம் ஒன்றை வெற்றிகரமாகப் பரிசோதித்துப் பார்த்தது.

இந்த நிலையில், கொசாவோ போரில் பங்கேற்ற க்ரோவோஷியா நாட்டின் முன்னாள் தளபதி ஒருவர், 1999இல் நடந்த சேர்பியத் தாக்குதலில் பயன்படுத்தப்பட்ட அமெரிக்க தயாரிப்பான ''எப்-117 நைட்வாக்' என்ற உளவு போர் விமானத்தின் தொழில்நுட்பத்தைத் திருடித்தான் சீனா ஜே-20 ரக உளவு போர் விமானத்தை தயாரித்திருப்பதாகக் குற்றம் சாட்டினார்.

இந்த இரண்டு சம்பவங்களை அடுத்து, இதுகுறித்து விளக்கமும் மறுப்பும் தெரிவித்துள்ள சீன கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரப்பூர்வ நாளேடான 'க்ளோபல் டைம்ஸ்', ''ஜே-20 உளவு போர் விமானம் முழுவதும் உள்நாட்டுத் தயாரிப்பு' என்று தெரிவித்துள்ளது.

சீனாவின் பிரபல விமானிகளுள் ஒருவரான ஷூ யாங் லிங் கூறுகையில்,'ஜே-7 மற்றும் ஜே-8 ரக விமானங்கள் வெளிநாட்டு தொழில்நுட்பங்களை வாங்கித் தான் தயாரிக்கப்பட்டன. ஆனால் ஜே-20 உளவு போர் விமானம் சீன தொழில்நுட்பத்தில் ஒரு முக்கியமான கண்டுபிடிப்பு' என்று கூறியுள்ளார். (ம)

## 10 பில்லியன் செலவில் புதிய காற்றாலைகள்

பிரான்ஸ்,ஜன.28

காற்றாலைகள் மூலம் மின் உற்பத்தி செய்ய பிரான்ஸ் திட்டமிட்டுள்ளது. இதற்காக பிரான்ஸின் கிழக்குப் பகுதியில் காற்றாலைகள் அமைப்பது என முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இந்த பணித்திட்டத்திற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோருவது உள்ளிட்ட ஆயத்தப் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

நாட்டில் அமைக்கப்படவிருக்கும் முதல் காற்றாலை மின் உற்பத்தி திட்டத்திற்காக 10 பில்லியன் யூரோ ஒப்பந்தப் புள்ளிகளாக கோரப்படுவதாகவும் இதனை ஏலம் எடுக்க விரும்பும் நிறுவனங்கள் தங்கள் விருப்பத்தினை அரசிடம் தெரிவிக்கலாம் எனவும் பிரான்ஸ் அதிபர் சர்கோசி அறிவித்தார்.. (ம)

# ஜாக்சனின் மரணத்துக்கு தான் காரணமில்லையாம்

## அவரது டாக்டர் நீதிமன்றில் தெரிவிப்பு

பாஸ்டன்,ஜன.28

மைக்கல் ஜாக்சன் மரணத்துக்கு நான் காரணமல்ல என்று அவரது டாக்டர் கொன்ராட் முர்ரே நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

உலக புகழ் பெற்ற பொப் இசை பாடகர் மைக்கல் ஜாக்சன், கடந்த 2009ஆம் ஆண்டு ஜூன் 25ஆம் திகதி மரணமடைந்தார். அதிகப்படியான மயக்க மருந்தை அவர் உட்கொண்டதால் இறந்ததாக கூறப்பட்டது.

மைக்கல் ஜாக்சனுக்கு அதிகப்படியான மருந்தை கொடுத்து கொன்று விட்டதாக, அவரது டாக்டர் கொன்ராட் முர்ரே மீது புகார் கூறப்பட்டது.

இந்த வழக்குத் தொடர்பாக பாஸ்டன் கோர்ட்டில் ஆஜரான போது கொன்ராட் முர்ரே குறிப்பிடுகையில், "நான் அப்பாவி. டாக்டர் என்ற முறையில் மருத்துவம் செய்தேனே தவிர அவர் மரணத்துக்கு நான் காரணமல்ல. நான் குற்றமற்றவன்''- என்றார்.

முர்ரேயின் வாக்குமூலத்தை கேட்ட நீதிபதி மைக்கேல் பாஸ்டர், இந்த வழக்கு விசாரணையை மார்ச் மாதத்துக்கு ஒத்திவைத்தார். (ம)

# ஜனாதிபதியை பதவி விலகக் கோரி எகிப்திய தலைநகரில் ஆர்ப்பாட்டம்

கெய்ரோ, ஜன. 28

எகிப்திய ஜனாதிபதி போஸ்னி முபாரக்கை பதவி விலகக் கோரி, தலைநகரான கெய்ரோவில் பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

எகிப்தில் முபாரக் ஜனாதிபதியாக உள்ளார். இவர் கடந்த 30 ஆண்டுகளாக இந்தப் பதவியை வகித்து வருகிறார். இவரது ஆட்சியில் நாட்டில் பொருளாதார சீரழிவு ஏற்பட்டுள்ளது. வறுமையும், வேலையில்லாத் திண்டாட்டமும் தலை விரித்தாடுகின்றன.

எனவே ஜனாதிபதி போஸ்னி முபாரக் பதவி விலக வேண்டும். மேலும் நாட்டின் பொருளாதார நிலையை சீரமைக்க வேண்டும் என வலியுறுத்தி பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டம் தலைநகர் கெய்ரோவில் நடந்தது.

இதைத் தொடர்ந்து அங்கு 20 ஆயிரம் முதல் 30 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். போராட்டகாரர்களைக் கட்டுப்படுத்த பொலிஸார் தண்ணீரை பீய்ச்சி அடித்தனர்.

கண்ணீர்ப்புகை குண்டுகளை வீசினர். இருந்தும் போராட்டத்தை கட்டுப்படுத்த முடியவில்லை. அங்கு நடைபெறும் போராட்டம் உச்சக்கட்டத்தை அடைந்து கலவரமாக மாறும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பதவி வெற்றிடம்**

எமது நிறுவனத்துக்கு தகுதியானவர்களிடமிருந்து கணக்கு லிகிதர் (Accounts Clerk) பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் நேரிலோ/ தபால் மூலமோ விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும். விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய இறுதித் திகதி: 05.02.2011

**PC Solutions Technologies (Pvt) Ltd.**

305, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. இல. 021 222 1101

**நீங்களும் சாதிக்கலாம்...**

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

- Microsoft Office
- Hardware Engineering
- Internet & e-mail Technology
- Computer Science
- Video Editing
- Visual Basic
- KIDS, ICT & GIT

**ஆரம்பம்:**
29.01.2011
05.02.2011

பேச்சு சிங்களம் மற்றும் ஆங்கிலப் பயிற்சிநெறிகளும் புதிய பிரிவுகள் ஆரம்பம்

அனைத்துக் கணினிக் கற்கைநெறிகளையும் சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் நீங்கள் விரும்பிய நேரங்களில் தொடரமுடியும்
(காலை 8.30 தொடக்கம் இரவு 9.00 மணிவரை)

**SCOT COMPUTER CENTRE**
Kandy Road, Chavakachcheri
T.P: .0772543989
ஸ்கொட் கணினி நிறுவனம், கண்டி வீதி, சாவகச்சேரி

**ஜாதிக சம்பத Jathika Sampatha**

சீட்டிழுப்பு இலக்கம் - 94
திகதி - 26.01.2011
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து **T** அதிர்ஷ்ட இலக்கம் **02** வெற்றி இலக்கம் **2 8 9 9 6**

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | T | 02 | 2 | 8 | 9 | 9 | 6 | ரூ. 8,137,468.00 | பரிசு - |
| 1 பரிசு | | 02 | 2 | 8 | 9 | 9 | 6 | ரூ. 2,000,000.00 | பரிசு - |
| 2 பரிசு | | | 2 | 8 | 9 | 9 | 6 | ரூ. 100,000.00 | பரிசு 03 |
| 3 பரிசு | | | | 8 | 9 | 9 | 6 | ரூ. 10,000.00 | பரிசு 30 |
| 4 பரிசு | | | | | 9 | 9 | 6 | ரூ. 1,000.00 | பரிசு 278 |
| 5 பரிசு | | | | | | 9 | 6 | ரூ. 50.00 | பரிசு 2754 |
| 6 பரிசு | | | | | | | 6 | ரூ. 20.00 | பரிசு 26530 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசு | | | 2 | 8 | 9 | 9 | | ரூ. 1,000.00 | பரிசு 30 |
| 8 பரிசு | | | 2 | 8 | 9 | | | ரூ. 100.00 | பரிசு 282 |
| 9 பரிசு | | | 2 | 8 | | | | ரூ. 50.00 | பரிசு 2806 |
| 10 பரிசு | T | | | | | | | ரூ. 20.00 | பரிசு 10907 |
| 11 பரிசு | T | 02 | | | | | | ரூ. 100.00 | பரிசு 1246 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,087,540.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு 2473560, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு
ரூ.8,551,121.00

## இன்றும் நாளையும் மின்வெட்டு

யாழ்ப்பாணம், ஜன. 28

உயரழுத்த மின்மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு நாளை சனிக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை உரும்பிராய், கோண்டாவில், மருத்துவப் பீடப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், பட்டணப்பகுதி நீங்கலாக யாழ். மாநகரசபைப்பகுதி ஆகிய இடங்களிலும் -

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை இணுவில், உடுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோயிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், சங்குவேலி, கோண்டாவில், கொட்டடி, கோம்பயன்மணல் பிரதேசம், யாழ். பட்டணப்பகுதி ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்சார சபை அறிவித்துள்ளது. (ஐ)

## தேசியமட்ட விஞ்ஞானப் போட்டி நாளை கிளிநொச்சியில்

வடமராட்சி, ஜன.28

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட விஞ்ஞானப்போட்டி நாளை சனிக்கிழமை கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு யாழ். மாவட்டத்திலிருந்து தெரிவான பாடசாலை மாணவர்களை உரிய காலநேரத்துக்கு அனுப்பி வைக்குமாறு வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

(ஐ-236)

**விற்பனையாளர் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபலபுடைவை நிலையமொன்றுக்கு விற்பனையாளர்கள் (ஆண்/பெண்) தேவை. உடன் விண்ணப்பிக்கவும்.
(அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)
விள. இல. 4112
C/O. உதயன்

**வீடு விற்பனைக்கு**

சுண்டிக்குளி, ஈச்சமோட்டைச் சந்திக்கு அண்மையாக சுவாமியார் வீதியில் ½ பரப்புக் காணியுடன் உள்ள வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு - 0776146454

**காணி விற்பனைக்கு**

நவாலி தெற்கு, கொத்துக்கட்டியில் கிணற்றுடன் 3½ பரப்பு ஆதனம் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு - 0771288950, 0785052277.

## தென்மராட்சி அதிபர் கூட்டம் இன்று

தென்மராட்சி, ஜன. 28

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.

(ஐ-207)

**வீடு விற்பனைக்கு**

உடுவில் முருக மூர்த்தி வித்தியாலயத்துக்குப் பின்னால் அமைந்துள்ள 5 அறை வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு:-
இ. மகேஸ்வரன்.
டீன் ஸ்ரோர்ஸ்,
மானிப்பாய் வீதி, உடுவில்.
தொ.பே:- 0773249094

**யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)**

**தேவை**

கட்டட இடிபாடு மண், அல்லது ஊரிமண், அல்லது கழிவு மண்

யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்துக்கு 50 லோட் ரக்டர் மண், கட்டட இடிபாடு மண்ணாகவோ அல்லது வேறு கழிவுமண் அல்லது ஊரி மண்ணோ தேவையாகவுள்ளது. இதனை வழங்குபவர்கள் அதன் விலை விவரங்களை கீழ் வரும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பொது முகாமையாளர்,
யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 2492.

**ஜயவிரு JAYAVIRU**

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 547
சீட்டிழுப்பு திகதி: 26.01.2011

வெற்றி எழுத்து: **W** வெற்றி இலக்கங்கள்: **05 08 31 65**

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றி பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 15,780,761.60 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 1,000,000/- | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 50,000/- | 08 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000/- | 243 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் பொருந்தினால் | ரூ. 1,000/- | 474 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 100/- | 12038 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் பொருந்தினால் | ரூ. 40/- | 6956 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 174424 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 27858 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை ரூ. 7,887,680.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி அவசர: 2470662, 2470663
தொலைநகல்: 4607000, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 16,079,512.80

## ஓராண்டு நினைவில்

### திருமதி கேதீஸ்வரன் விஜயநந்தினி

திதி:- 28/01/2011



பிறப்பு
26 * 12 * 1969

இறப்பு
10 * 01 * 2010

அன்பின் தெய்வமே அம்மா!
நீட்டிய கரங்கள் நிலையற்றுப் போனது
காட்டிய அன்பு கலைந்து போனது
கூட்டிய குடும்பம் குலைந்து போனது
வாடிய உள்ளம் வதைபடுகிறது
ஆறாத்துயரில் ஓராண்டு அழுதபின்னும்
மாறா உம் நினைவுகள்
சடுதியில் வந்த காலன்
கடுதியில் கொண்டு போனானோ!
எம் கண்ணீர்ப் பூக்கள் உம்
காலடியில் காணிக்கை அம்மா!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

118, சிவன் பண்ணை வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

(109996)

குடும்பத்தினர்

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**
**கலைப்பீடம்**
**ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம் (MRTC)**
**இதழியல் டிப்ளோமா (முழுநேரம் - இரண்டாண்டு)**
**மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டம்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் இதழியல் டிப்ளோமா (முழுநேரம் - இரண்டாண்டு) பயிற்சியில் இணைந்து கல்வி கற்கும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது. இதன் மூலம் ரூ. 22, 500.00 புலமைப்பரிசில் தொகையாக வழங்கப்படும்.

இதழியல் டிப்ளோமா (முழு நேரம் - இரண்டாண்டு) கற்கைநெறிக்கு புதிதாக இணைந்து கொள்ளவிரும்பும் மாணவர்களும் இதற்கு விண்ணப்பிக்க முடியும். க.பொ.த. உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருப்பதோடு, பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதியுடையவர்கள் டிப்ளோமா கற்கைநெறிக்கும், புலமைப்பரிசிலுக்கும் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்ப முடிவு திகதி 06.02.2011


விண்ணப்பப்படிவங்களையும் விவரங்களையும் கீழ்வரும் முகவரியில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் பெற்றுக்கொள்ளலாம்.



இல. ஜும்மா பள்ளி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
தொ.பே. இல. 021 222 9873.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆமையின் வீடு



அபிஷேக்.


வீடு நல்ல வீடு
மெல்ல அசையும் வீடு
ஓடு போட்ட வீடு
உடையார் தந்த வீடு

நாலு காலில் வீடு
நதியில் நீந்தும் வீடு
வாலுந் தலையும் நாலு
காலும் உள்ள வீடு

கதவு யன்னல் இல்லை
காற்று ஒளியும் இல்லை
உறவு பேச யாரும்
உள்ளே வருவதில்லை

பெருமை பேசி உள்ளே
ஒருவர் வாழுகின்றார்
அருமையான வீடு
ஆமையாரின் வீடு.

## எதிர்காலம் சிறக்க...



முயற்சியின் வெற்றி: வடமாகாண கல்வித்திணைக்களம் நடத்திய பௌர்ணமி தினவிழாவில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி ஆரம்பப் பிரிவைச் சேர்ந்த மாற்றுவலுவுள்ள வாழ்வக மாணவர்கள் இசைநிகழ்வு இடம்பெறுகின்றது.
(86)

## பழமொழிகள்

* உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்.
* அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்
* ஈட்டி எட்டின மட்டும் பாயும் பணம் பாதாளம் வரை பாயும்.
* எலி வளையானாலும் தனிவளை வேண்டும்.
* ஓட்டைச் சட்டியானாலும் கொழுக்கட்டை வெந்தால் போதும்.
* உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
* ஏட்டுச்சுரக்காய் கறிக்குதவாது.
* ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம்.
* பிறர்பிள்ளை தலை தடவினால் தன் பிள்ளை தானே வளரும்.
* கோபம் பாவத்தைத் தேடும்.
* பேராசை பெருந்தரித்திரம்
* ஆத்திரக்காரனுக்குப் புத்தி மத்திமம்.

க.சிங்கம்.

## கவிதை

நீ எறும்பைப் போலச் சுறுசுறுப்பாய்
இருக்கவேண்டும்
நீ கரும்பைப்போல எல்லோரிடமும்
இனிக்கப்பேச வேண்டும்
நீ மலரைப் போல சிரித்து மகிழ வேண்டும்
நீ பலரும் விரும்பிட அன்பாய்
பழகிடவேண்டும்
நீ தேனைச் சேர்க்கும் தேனீக்கள் போல
சேமிக்க வேண்டும்
நீ வானைப் போலப் பரந்த நோக்கில்
வளர வேண்டும்

லோ. தாஜுஜன்.

## இலங்கையின் நீர்வீழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| ★செரின் கிளயர் | 171 மீற்றர் | (பதுளை மாவட்டம்) |
| ★போபத் | 30 மீற்றர் | (இரத்தினபுரி மாவட்டம்) |
| ★துருந்து ஓயா | 189 மீற்றர் | (நுவரெலியா மாவட்டம்) |
| ★பேக்கர்ஸ் | 20 மீற்றர் | (நுவரெலியா மாவட்டம்) |
| ★தியலும | 220 மீற்றர் | (பதுளை மாவட்டம்) |
| ★லக்சபான | 125 மீற்றர் | (பதுளை மாவட்டம்) |
| ★இராவணா | 49 மீற்றர் | (பதுளை மாவட்டம்) |

நேசகுமார், இளிசெநாச்சி.

## நரபலி சாமியார் நாகப்பா

(நேற்றைய தொடர்ச்சி)




''சீடர்களே! சீக்கிரம் நாம் கொண்டு வந்த உயிரைப் பலி பீடத்தின் மீது வையுங்கள்!'' என்று அவசரப்படுத்தினார் பரமார்த்தர்.

சீடர்களும் அவசரம் அவசரமாகத் தாங்கள் கொண்டு வந்த உயிரைப் பலி பீடத்தில் வைத்தனர்.

''ஓம்...ரீம்...பத்ரகாளி!...... இந்தா நரபலி!'' என்று ஆவேசமாய்க் கத்தியபடி, பலிபீடத்தின் மீது கொடு வாளை வீசினார் பரமார்த்தர்.

உடனே அரண்மனை வீரர்கள் ஓடிவந்து பரமார்த்தரையும் சீடர்களையும் சுற்றி வளைத்துப் பிடித்தனர்.

பரமார்த்தர் யாரைப் பலியிட்டார் என்று எல்லோரும் ஆவலோடு பலிபீடத்தைப் பார்த்தனர்.

அங்கே... ஒரு பல்லி, இரண்டு துண்டாகிக் கிடந்தது.

அரண்மனை வீரர்களுக்கு ஒரே அதிர்ச்சியாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது.

''சே, நரபலி சாமியார் என்று நினைத்தோம். இவர் நரபல்லி சாமியாராக அல்லவா இருக்கிறார்'' என்றபடி பரமார்த்தரையும் சீடர்களையும் அரசனிடம் அழைத்துச் சென்றார்கள்.

மன்னா! ஏன் எங்களைக் கைது செய்தாய்? நாங்கள் செய்த தவறு என்ன?'' என்றார் பரமார்த்தர்.

''நரபலி கொடுப்பது எங்கள் நாட்டுச் சட்டப்படி குற்றம்'' என்றான் மன்னன்.

''நாங்கள் என்ன, மனிதர்களையா பலி கொடுத்தோம்? கேவலம் ஒரு பல்லியைத்தானே கொன்றோம்'' என்று சொன்னார் பரமார்த்தர்.

''அதுதான் நீங்கள் செய்த தவறு! எங்கள் நாட்டு மக்களின் குலதெய்வம் பல்லி! என் நாட்டுக் கொடியில் இருப்பதும் பல்லியின் சின்னம்! அந்தப் பல்லியைக் கொன்று அவமரியாதை செய்த குற்றத்திற்காக உங்கள் அனைவரையும் சிறையில் அடைக்க ஆணையிடுகிறேன் என்று கட்டளையிட்டான் கந்தபுர மன்னன்.

''ஐயோ! நரபலி கொடுத்தால் நல்லது நடக்கும் என்று நினைத்தோம். அதுவும் ஆபத்தில் கொண்டு வந்து விட்டு விட்டதே'' என்று புலம்பியபடி குருவும் சீடர்களும் சிறைக்குச் சென்றார்கள்.

(முற்றும்)

## ஒழுக்கம்

★ அல்லும் பகலும் ஆர்வத்தோடு கல்வி கற்று நன்மை கருதி வாழ வேண்டும்.
★ பலவும் படித்து நீங்கள் பட்டம் பெற்ற போதும் உலகத்தோடு ஒத்து ஒழுகுதல் வேண்டும்.
★ இந்த உலகில் நீங்கள் இயற்றும் தொண்டுகளில் தந்தை தாயைப் பேணும் தருமம் ஒன்றே பெரிதாகக் கொள்ள வேண்டும்.
★ கன்றை நினைத்து உள்ளம் கசியும் பசுவைப் போல நன்றி புரிந்தோர் தம்மை நாமும் நினைக்க வேண்டும்.
★ பருவம் பார்த்து நாம் பயிர் செய்வது போல கரும் தொடங்கும் போது காலம் பார்க்க வேண்டும்.
★ மாதா, பிதா, குரு தெய்வம் இவர்களை மதித்து வணங்க வேண்டும்.
★ தீமை செய்தவனுக்கும் நன்மையைச் செய்ய வேண்டும்
★ பெரியோரைக் கனம் பண்ணுதல் வேண்டும்.
★ சுத்தம் பேணி சுகமாக வாழப் பழக வேண்டும்.
★ தந்தை தாய் சொல்கேட்டு நடத்தல் வேண்டும். பொதுச் சொத்துகள் பேணப்பழகு வேண்டும்.

சிலையூர் தனம்.

## புதுக் கவிதைகளின் தோற்றமும் வளர்ச்சியும்

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் முன்னெடுத்த மரபுப் போராட்டம் தீவிரம் அடைந்தன் காரணமாக கவிதை இலக்கியத்துறையில் புதிய போக்கு உதயமாகியது. இதற்கு பாரதியார் முன்னெடுத்த பாதை வழிகாடியாய் அமைந்தது.

''சுவைபுதிது, பொருள் புதிது, வளம் புதிது, சொற் புதிது சோதிமிக்க நவகவிதை எந்நாளும் அழியாத மகா கவிதை''

புதிய பொருள் சார்ந்தும் புதிய சொல்வடுக்குகளுடன் வெளிவரும் ஒரு புதிய கவித்துறையை தமிழ் இலக்கியம் உள்வாங்கிக் கொண்டது. புதுக் கவிதை தோன்றுவதற்கு பாரதியாரே இலக்கணம் வகுத்தவராவார்.

பாரதிக்கு பின் முதல் பரிசோதனையை ந.பிச்சமூர்த்தி ஆரம்பித்தார். அவருடன் அக்காலப்பகுதியில் பி.ராஜகோபாலனும் சேர்ந்து புதுக்கவிதை படைக்கலாயினர். புதுக்கவிதைகள் என்று இன்று பிரபல்யம் பெற்று நிற்கின்ற கவிதை பாரதி காலத்தில் வசன கவிதைகள் என்றே அழைக்கப்பட்டன.

தமிழகத்தில் வெளிவந்த சுறாவெளி, கலாமோகினி, மணிக்கொடி ஆகிய இதழ்களில் புதுக்கவிதைகள் வெளிவந்தன.

இலங்கையின் கவிதை வரலாற்றில் சில்லையூர் செல்வராசன், இ.முருகையன், எம்.எ.நுஃமான், சி.சிவசேகரம் ஆகியோர் புதுக்கவிதை வரலாற்றில் கால்பதித்தவர்கள் கவிதை சிறிதாக ஆழமும் தனிமையானது. மரபுக் கவிதைகள் எழுதுகின்றவர்களும் அவற்றை வாசிப்பவர்களும் குறைந்து நிற்கின்ற இக்காலப் பகுதியில் ஏராளமான புதுக்கவிதைக் கவிஞர்களும் வாசகர்களும் பெருகியுள்ளமை அதன் வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாகும். தமிழகத்தில் தோற்றம் பெற்ற ''வானம் பாடிகள்'' புதுக்கவிதைத் துறைக்கு கணிசமான பங்களிப்பை வழங்கியுள்ளனர். அந்தவகையில் நவபாரதி காபராசன் அக்கினி புத்திரன், விடிவெள்ளி, புவியரசு போன்றோர் முக்கியமானவர்கள்.

இலங்கையில் எஸ்.சி.தனபாலசிங்கத்தை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் ''நீங்களும் எழுதலாம்'' என்னும் கவிதை இதழ் புதுக்கவிதைகளையே தாங்கி வெளிவருகிறது. இன்றைய புதுக்கவிதைகள் அந்தக்காலகட்ட உணர்வுகளின் ஆழ்ந்த மனநிலை வெளிப்பாடுகளாகவும் அமைந்துள்ளன.

ஆகவே புதுக்கவிதைகளின் வரவால் [illegible] இரசனை கொண்ட வாசகர் வட்டத்தின் பெருக்கம் அதிகரித்துள்ளது.

அந்தவகையில் புதுக்கவிதைகள் நிலைபெற்ற ஓர் இலக்கிய வடிவமாகப் பலம்பெற்று நிற்கின்றது.

ச.பகீரதன்
யா/சன்மார்க் மகாவித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆஸ்திரேலிய ஓபன் ரெனிஸ்: அரையிறுதியில் பெடரர், முர்ரே, கிளிஸ்டர்ஸ், ஸ்வோனரேவா



ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியின் ஒற்றையர் அரைஇறுதி சுற்றுக்கு டேவிட் பெடரர், ஆண்டி முர்ரே, கிளிஸ்டர்ஸ், ஸ்வோனரேவா ஆகியோர் முன்னேறினர்.

அதேசமயம் உலகின் முதல் நிலை வீரரும், சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட முன்னணி வீரருமான ஸ்பெயினின் ரபேல் நடால் காயம் காரணமாகத் தோல்வியடைந்து போட்டியிலிருந்து வெளியேறினார்.

புதன்கிழமை நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் காலிறுதிச் சுற்றில் ஸ்பெயினின் ரபேல் நடால், சகநாட்டு வீரரான டேவிர் பெரரை எதிர்கொண்டார்.

இந்த ஆட்டத்தின் இரண்டாவது ஆட்டத்திலே ரபேல் நடாலுக்கு தசை நரம்பு முறிவு ஏற்பட்டது. இதையடுத்து மைதானத்திலேயே சிகிச்சை பெற்றார். கடுமையான வலியையும் பொருட்படுத்தாமல் மீண்டும் களம் புகுந்தார் நடால். இந்த வாய்ப்பை சரியாகப் பயன்படுத்திக்கொண்ட பெடரர் 6-4, 6-2, 6-3 என்ற நேர் செட்களில் நடாலை வீழ்த்தி அரைஇறுதிக்கு முன்னேறினார்.



இந்த ஓபனில் நடால் சம்பியன் பட்டம் வெல்லும் பட்சத்தில் தொடர்ச்சியாக 4 கிராண்ட்ஸ்லாம்களிலும் வெற்றிபெற்றவர் என்ற ஆஸ்திரேலியாவின் முன்னாள் வீரர் ராட் லேவரின் சாதனையை எட்டிவிடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. கடந்த ஆண்டில் பிரெஞ்ச் ஓபன், விம்பிள்டன், அமெரிக்க ஓபன் ஆகிய போட்டிகளில் வெற்றிபெற்றுள்ளார். ஆஸ்திரேலிய ஓபனில் காலிறுதி ஆட்டத்தில் ஏற்பட்ட காயம் அவரின் வெற்றிக்கு மட்டுமின்றி சாதனைக்கும் முற்றுப்புள்ளி வைத்துவிட்டது.

மற்றொரு ஆட்டத்தில் பிரிட்டனின் ஆண்டி முர்ரே 7-5, 6-3, 6-7, 6-3 என்ற செட்களில் உக்ரைனின் அலெக்சாண்டரை வீழ்த்தி அரைஇறுதிக்கு முன்னேறினார். அரைஇறுதியில் பெடரரும், முர்ரேவும் மோதுகின்றனர்.

மகளிர் பரிவு ஒற்றையர் காலிறுதிச்சுற்றில் தரவரிசையில் 3ஆவது இடத்தில் உள்ள பெல்ஜியத்தின் கிம் கிளிஸ்டர்ஸ் 6-3, 7-6 (4) என்ற நெர் செட்களில் போலந்தின் அக்னீஸ்கா ரத்வன்ஸ்காவை வென்றார். மற்றொரு ஆட்டத்தில் ரஷ்யாவின் வேரா ஸ்வோனரேவா 6-2, 6-4 என்ற நேர் செட்களில் செக்.குடியரசின் பெட்ராவிடோவாவை வென்று அரைஇறுதிக்கு முன்னேறினார். அரைஇறுதியில் கிளிஸ்டர்ஸம், ஸ்வோனரேவாவும் மோதுகின்றனர்.

(15)

# உலகக் கிண்ண கிரிக்கெட்; அதிக விக்கெட் வீழ்த்தியவர்கள்

உலகக் கோப்பை போட்டியில் அதிக விக்கெட் வீழ்த்தியவர்கள் வரிசையில் அவுஸ்திரேலியாவின் கிளன் மெக்ராத் முதலிடத்தில் உள்ளார். 4 உலகக் கோப்பையில் 39 ஆட்டங்களில் விளையாடி 71 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

15 ஓட்டங்களை கொடுத்து 7 விக்கெட்டுகளை வீழ்த்தியதே இவரின் சிறப்பான பந்துவீச்சு ஆகும்.

இவருக்கு அடுத்தபடியாக பாகிஸ்தானின் வாசிம் அக்ரம் 55 விக்கெட்டுகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளார். 5 உலகக் கோப்பையில் 38 ஆட்டங்களில் விளையாடியுள்ளார். 28 ஓட்டங்கள் கொடுத்து 5 விக்கெட் வீழ்த்தியதே இவரின் சிறப்பான பந்துவீச்சு ஆகும். 4 உலகக் கோப்பையில் 31 ஆட்டங்களில் விளையாடியுள்ள இலங்கையின் முத்தையா முரளிதரன் 53 விக்கெட்டுகளுடன் மூன்றாவது இடத்தில் உள்ளார். 19 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்தியதே இவரின் சிறப்பான பந்துவீச்சு ஆகும்.

இலங்கையின் சமிந்த வாஸ் 49 விக்கெட்டுகளுடன் நான்காவது இடத்தில் உள்ளார். 4 உலகக் கோப்பயில் 31 ஆட்டங்களில் விளையாடியுள்ளார். 25 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுகளை வீழ்த்தியதே சிறப்பான பந்துவீச்சு ஆகும். இந்தியாவின் ஜவஹல் ஸ்ரீநாத், 4 உலகக் கோப்பையில் 34 ஆட்டங்களில் விளையாடி 44 விக்கெட்டுகளை வீழ்த்தி ஐந்தாவது இடத்தில் உள்ளார். 30 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்தியதே இவரின் சிறப்பான பந்துவீச்சு ஆகும்.



தென்னாபிரிக்காவின் அலன் டொனால்டு 4 உலகக் கோப்பையில் 25 ஆட்டங்களில் 38 விக்கெட்டுகளை வீழ்த்தி ஆறாவது இடத்தில் உள்ளார். 17 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்தியதே இவரின் சிறப்பான பந்துவீச்சு ஆகும்.

அவுஸ்திரேலியாவின் பிரட் ஹொக் 34 விக்கெட்டுகளை வீழ்த்தி ஏழாவது இடத்தில் உள்ளார். இரண்டு உலகக் கோப்பையில் 21 ஆட்டங்களில் விளையாடியுள்ளார். 27 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்தியதே இவரின் சிறப்பான பந்துவீச்சு ஆகும்.

பாகிஸ்தான் வீரர் இம்ரான்கான் 5 உலகக் கோப்பையில் 28 ஆட்டங்களில் 34 விக்கெட்டுகளை வீழ்த்தி எட்டாவது இடத்தில் உள்ளார். 37 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்தியதே இவரின் சிறப்பான பந்துவீச்சு ஆகும். இரண்டு உலகக் கோப்பையில் மட்டுமே விளையாடியுள்ள அவுஸ்திரேலியாவின் ஷேன் வோர்ன் 17 ஆட்டங்களில் 32 விக்கெட்டுகளை வீழ்த்தி ஒன்பதாவது இடத்தில் உள்ளார். 29 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்தியதே இவரின் சிறப்பான பந்துவீச்சு ஆகும்.

3 உலகக் கோப்பையில் விளையாடியுள்ள நியூசிலாந்தின் கிறிஸ் ஹாரிஸ் 28 ஆட்டங்களில் 32 விக்கெட்டுகளை வீழ்த்தி பத்தாவது இடத்தில் உள்ளார். 7 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்தியதே இவரின் சிறப் பான பந்து வீச்சு ஆகும்.

(15



# விளையாட்டு நிகழ்வுகள்

## மெய்வன்மை போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜன.28

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் கு.விமலன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக வலிகாமம் வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவமும் சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப்பணிப்பாளர் சி.கந்தசாமியும் கலந்து கொள்வார்கள். (ற-313,09)

* * *

கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி நாளைமறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் இ.ராகவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற கோட்டக் கல்விப்பணிப்பாளர் க.அம்பலவாணர் கலந்து கொள்ளவுள்ளார். (ற-319)

* * *

உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பி.ப.2 மணிக்கு கல்லூரி விளை யாட்டு மைதானத்தில் அதிபர் க. தர்மலிங்கம் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்த விழாவில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற நில அளவை அத்தியட்சகர் கந்தையா சபாரட்ணமும் சிறப்பு விருந்தினராக உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் க.செல்வக் குமரனும் கலந்து கொள்ள உள்ளனர்.

* * *

மானிப்பாய் மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய் வல்லுனர் போட்டி நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்குப் பாடசாலை அதிபர் திருமதி எஸ். ஜெய வீரசிங்கம் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இந்த விழாவில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மாதவகுமரனும் எஸ். சுகுமாரனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

* * *

உடுவில் மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெறவுள்ளது. (15)

## பயிற்சி முகாம்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்களுக்கான கபடி பயிற்சி முகாம் இன்றும் நாளையும் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இப்பயிற்சி முகாமில் கலந்து கொள்ளத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் மாணவர்களை கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் சி.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஐ-201)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் உலகக் கிண்ணம்

உலக கோப்பை கிரிக்கெட் போட்டியில் 15 பேர் கொண்ட இந்திய அணியில் விராட் ஹோலியும் இடம் பெற்றுள்ளார். சமீபகாலமாக ஹோலியின் ஆட்டம் அபாரமாக இருந்தது.

இதனால் அவருக்கு அணியில் வாய்ப்பு கிடைத்துள்ளது. 22 வயதான ஹோலி முதல் முறையாக உலகக் கோப்பைப் போட்டியில் விளையாட உள்ளார்.



இது குறித்து அவர் அளித்த செவ்வியில் கூறியதாவது:-

உலகக் கோப்பைப் போட்டி இந்தியாவில் நடைபெறுவதால் அதில் விளையாடுவதில் மிகுந்த ஆர்வத்துடன் உள்ளேன். உள்ளூர் ரசிகர்களின் கரகோஷத்துடன் ஆடுவதை எதிர்பார்த்து இருக்கிறேன். நான் முதன் முறையாக 1996-ம் ஆண்டு உலகக் கோப்பைப் போட்டியை பார்த்து இருக்கிறேன்.

இரண்டு ஆட்டங்கள் எனக்கு நினைவு இருக்கிறது. பெங்களூரில் நடந்த கால் இறுதியில் இந்திய அணி பாகிஸ்தானை வீழ்த்தி இருந்தது. கொல்கத்தாவில் நடந்த அரை இறுதியில் இந்திய அணி இலங்கையிடம் தோற்றது. அந்த உலகக் கோப்பையில் டெண்டுல்கர் ஆட்டம் என்னை மெய்சிலிர்க்க வைத்தது.

2009-ம் ஆண்டு ஐ.பி.எல். போட்டி தென்னாபிரிக்காவில் நடந்தது. இதில் சிறப்பாக ஆடினேன். இந்த ஆட்டம் தான் தற்போது தென்னாபிரிக்காவுக்கு எதிரான போட்டியில் கை கொடுத்தது. வேகப்பந்து வீச்சுக்கு சாதகமான அங்குள்ள ஆடுகளங்கள் விளையாடுவதற்கு சிறப்பாக இருந்தது.

தற்போது நடைபெற இருக்கும் உலகக் கோப்பையில் ஒவ்வொரு அணிக்கும் கோப்பையை வெல்ல வாய்ப்பு இருப்பதாக கருதுகிறேன். எந்த அணிக்கு கோப்பை கிடைக்கும் என்று கணித்து கூறி விட முடியாது. உள்ளூரில் விளையாடுவதால் நாங்கள் சிறப்பாக விளையாடுவோம் என்ற நம்பிக்கை உள்ளது. (15)

# இலங்கை மேற்கிந்திய போட்டிகள் எஸ்.எஸ்.சிக்கு மாற்றம்





அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ள இலங்கை - மேற்கிந்திய அணிகளுக்கிடையிலான ஒருநாள் கிரிக்கெட் சுற்றுப்போட்டிகள் எஸ்.எஸ்.சி. மைதானத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபையின் ஊடக முகாமையாளர் பிரையன் தோமஸ் தெரிவித்தார்.

ஆர்.பிரேமதாஸ அரங்கு மற்றும் ஹம்பாந்தோட்டை அரங்கு ஆகியவற்றில் இப்போட்டிகள் நடைபெறவிருந்தன. எனினும் உலகக் கிண்ணப் போட்டிகளுக்காக இவை சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸிலிடம் உத்தியோகபூர்வமாக ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதனால் விதிகளின்படி அங்கு வேறு போட்டிகளை நடத்த அனுமதியில்லை என பிரையன் தோமஸ் தெரிவித்தார்.

இலங்கை மேற்கிந்திய அணிகளுக்கிடையிலான போட்டிகள் விபரம்:

ஜனவரி 31 - முதலாவது ஒருநாள் போட்டி

பெப்ரவரி 4 - இரண்டாவதுஆவது ஒருநாள் போட்டி

பெப்ரவரி 6 - மூன்றாவது ஒருநாள் போட்டி (15)

# பயிற்சியாளர் கிறிஸ்டனுக்கு கௌதம் கம்பீர் பாராட்டு

டில்லி, ஜன. 28

பயிற்சியாளர் கிறிஸ்டன் ஒவ்வொருவரையும் வீரராகவும், தனிப்பட்ட முறையிலும் நன்கு தெரிந்து வைத்திருந்தார். இதனால்தான் இந்திய அணி மீண்டுடெழ முடிந்தது - என இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கௌதம் கம்பீர் பாராட்டு தெரிவித்துள்ளார்.



இந்திய அணியின் பயிற்சியாளராக இருக்கும் கிறிஸ்டன், வரும் உலகக் கோப்பை தொடருடன் ஓய்வு பெறுவார் எனத் தெரிகிறது. தொடர்ந்து பதவியில் இருக்க, அனைவரும் வற்புறுத்தினாலும், கிறிஸ்டன் அதை ஏற்க மறுக்கிறார்.

இதனிடையே கிறிஸ்டன் குறித்து இந்திய வீரர் கம்பீர் கூறியவை வருமாறு -

இந்திய அணிக்கு கிறிஸ்டன் வந்த பிறகு வீரர்களுக்கு ஏகப்பட்ட ஆலோசனைகள் தந்து, தன்னம்பிக்கையை வளர்த்தார். ஒவ்வொருவரையும் தனிப்பட்ட முறையிலும், வீரராகவும் நன்கு புரிந்து வைத்து இருந்தார். இதனால்தான் இந்திய அணி எழுச்சி காண முடிந்தது.

எனக்கும் ஏகப்பட்ட தகவல்கள் தந்துள்ளார். எனது இயல்பான ஆட்டத்தை மாற்றும்படி, அவர் எப்போதும் என்னிடம் கூறியது இல்லை. எனது அடிப்படை ஆட்டத்தில் இருந்து, நல்ல முன்னேற்றம் ஏற்படும் வகையில், எனக்கு உதவிகள் செய்தார். இது தான் என்னை 100 டெஸ்ட் போட்டிகள் விளையாட வேண்டும் என்ற ஆர்வத்தை தூண்டியது.


என்னைப் பொறுத்தவரையில் டெஸ்ட் கிரிக்கெட் தான், வீரர்களின் திறமையை அறியச் செய்யும் உண்மையான சோதனைக்களம். முதலில் இந்த போட்டிகளில் பங்கேற்கும் போது, சற்று பதற்றத்துடனே விளையாடுவேன். ஆனால் கிறிஸ்டன் வந்தபின், எந்த பரிவில் பலவீனமாக உள்ளேன் என்பதை கண்டறிந்து, அதனை சரிசெய்யும் வகையில் பயிற்சிகள் தந்தார். இதற்கு அவருக்கு நன்றி சொல்லவேண்டும்.

தென் ஆபிரிக்க மண்ணில் விளையாடுவது என்பது எப்போதுமே கடினமாக இருக்கும். இம்முறையும் அப்படித்தான் இருந்தது. இந்தக் கடினமான தொடர், உலக கோப்பை போட்டிக்கு நல்ல பயிற்சியாக இருந்தது. இத்தொடருக்கு முன்பாக காயம் குணமடைந்து, விரைவில் பயிற்சியில் ஈடுபடுவேன்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

ஆஸ்திரேலியா ஓபின் ரெனிஸ்:

# நடால் அதிர்ச்சித் தோல்வி



மெல்பேர்ன், ஜன. 28

ஆஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் போட்டியின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு கால் இறுதி ஆட்டத்தில் உலகின் முதல் தர வீரர் ரபேல் நடால் அதிர்ச்சி தோல்வியுற்றார்.

இந்த ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லம் போட்டியான ஆஸி. ஓபன் மெல்பேர்ன் நகரில் நடைபெற்று வருகிறது. ஆண்கள் ஒற்றையர் பிரிவு கால் இறுதியில் ஸ்பெயின் வீரர் ரபேல் நடால் சக நாட்டு வீரர் டேவிட் பெர்ரை நேற்றுமுன்தினம் எதிர்கொண்டார்.

தொடக்கத்தில் இருந்தே ஆதிக்கம் செலுத்திய பெர்டர் முதல் செற்றை 6-4 என்ற கணக்கில் கைப்பற்றினார். அடுத்த செற்களிலும் பெர்டரின் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறிய நடால் எளிதில் சரணடைந்தார்.

# உலக கிண்ண கிரிக்கெட்டுக்கான மைதானங்கள் தயார் நிலையில்

உலக கோப்பை கிரிக்கெட் போட்டிக்காக அனைத்து மைதானங்களும் தயாராகி விட்டதாக போட்டிக் குழு இயக்குனர் ரத்னாகர் ஷெட்டி தெரிவித்துள்ளார்.

உலக கோப்பை கிரிக்கெட் போட்டி அடுத்த மாதம் 19 ஆம் திகதி தொடங்குகிறது. இந்தியா, இலங்கை, பங்களதேஷ் ஆகிய 3 நாடுகளில் உள்ள 13 மைதானங்களில் போட்டிகள் நடக்கின்றன.

இதையொட்டி போட்டி நடக்கும் மைதானங்கள் அனைத்தும் புதுப்பிக்கப்பட்டு தயாராகி வருகின்றன.

ICC Cricket World Cup 2011

போட்டி தொடங்க இன்னும் 24 நாட்களே உள்ள நிலையில் பல மைதானங்கள் இன்னும் தயாராக வில்லை என்று கூறப்பட்டது. இதையடுத்து சர்வதேச கிரிக்கெட் சங்க அதிகாரிகள் குழு பல்வேறு மைதானங்களிலும் ஆய்வு நடத்தியது. மும்பையில் உள்ள வாங்கடே மைதானம், கொல்கத்தாவில் உள்ள ஈடன் கார்டன் மைதானங்களும் ஆய்வு செய்யப்பட்டன.

இதையடுத்து போட்டிக் குழு இயக்குநர் ரத்னாகர் ஷெட்டி கூறியதாவது:

நாங்கள் நடத்திய ஆய்வில் போட்டி நடக்கும் அனைத்து மைதானங்களுமே தயாராகி விட்டன. இன்னும் சிறு, சிறு வேலைகள் இருக்கின்றன. உலக கோப்பை போட்டி தொடங்கும் முன்பு அனைத்து மைதானங்களும் முழு அளவில் தயாராகிவிடும். எல்லா மைதானங்களுமே மிகச் சிறப்பாக தயார்படுத்தப்பட்டுள்ளன. இதில் கவலைப்பட வேண்டிய எந்த விஷயமும் இல்லை என அவர் கூறினார். (15)



22 நாள்களே

உதயன் உலகக்கிண்ண கொண்டாட்டம் உங்களுடன்

உலகக்கிண்ணப் போட்டிகள்.
எதிர்பார்க்கின்றோம் உங்கள் எழுத்துக்களை.
பார்த்த அனுபவங்கள். ரசித்த போட்டிகள்.
எழுந்த எண்ணங்கள். எழுதுங்கள்....
எழுதுங்கள்..... எழுதிக் குவியுங்கள்.
சிறந்ததற்கு உண்டு பரிசு .

"உலகக் கிண்ண வாசகர் கணை"
தபால் உறையின் இடது மேல் மூலைக்குறிப்பு.
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தலைப் புறக்கணிக்கிறது தமிழ் தேசிய மக்கள் முன்னணி

யாழ்ப்பாணம்,ஜன28

நாட்டில் நிலவும் ஜனநாயகத்துக்கு எதிரான நடைமுறைகளைக் கருத்தில் கொண்டும் அவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலும் நடைபெறவுள்ள உள்ளூராட்சிச் சபைத் தேர்தலைப் புறக்கணிப்பதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணி அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது இரு தேசங்கள், ஒரு நாடு என்ற நிலைப்பாட்டில் உறுதியாகவுள்ளவர்களை இனங்கண்டு நடைபெறவிருக்கும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களில் போட்டியிடத் தீர்மானித்திருந்தது.

எனினும் நாட்டில் அண்மைக் காலமாக அதிகரித்துள்ள கொலைகள், கடத்தல்கள், காரணமாக மக்கள் மரணபயத்தில் உள்ளனர்.

நடைபெறவுள்ள தேர்தலில் இராணுவத்தினர் நேரடியாகத் தலையிட்டு வர்த்தகப் பிரமுகர்களையும், சமுகத் தலைவர்களையும் அச்சுறுத்தி ஆளும் கட்சியில் போட்டியிட நிறுத்தியுள்ளனர்.

அத்துடன் பாதுகாப்பு என்ற போர்வையில் இராணுவச் சோதனைக் கெடுபிடிகளை அதிகரித்து மக்களை கிலிகொள்ளச் செய்துள்ளனர்.

இவ்வாறான ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நடைபெறவிருக்கும் தேர்தலில் இருந்து ஒதுங்கியிருப்பதென எமது கட்சி தீர்மானித்துள்ளது - என்றுள்ளது. (த-10)

Personal Class
364, Stanly Rd. Jaffna
(Near DMI)
BA-I, Final
Revision & Paper
மெய்யியல்
By:- சிவா
BA.phi (spc.)
Tamil, Hin.cul, Drama, English, Pol. sci
ஆரம்பம்:
நாளை காலை 9 மணி

## ஜனாதிபதி மஹிந்த நாடு திரும்பினார்

கொழும்பு, ஜன. 28

அமெரிக்காவுக்குத் தனிப் பட்ட விஜயம் மேற்கொண்டி ருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ நேற்று அதிகாலை நாடு திரும்பினார்.

இதேவேளை, ஜனாதிபதி யுடன் சென்றிருந்த வெளி விவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் நேற்று முன்தினம் மாலை நாடு திரும்பியிருந்தார் எனத் தெரிவிக் கப்படுகிறது.

(இ-10)

விருந்தினர் விடுதிக்கு கீழ்க்காணும் பதவிகளுக்கு ஆள்கள் தேவை
1) முகாமையாளர்
2) உதவியாளர்
3) சமையல்காரர்
தகுதியுடையவர்கள் கீழ்க்காணும் விலாசத்துடன் தொடர்புகொள்ளவும்.
யாழ்.றெஸ்ட்
இராஜ வீதி,
(கோப்பாய் பொலிஸ் நிலையம் முன்பாக)
கல்வியங்காடு. தொ.பே:-0777149385

IBM Computers for Sale
(கனடாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டது)
Original IBM Think Center
(IBM Keyboard/Mouse With Lock)
Intel Pentium IV 3.20 GHZ
1 GB Ram 80 GB HD
LCD Monitor DVD Rom
நம்ப முடியாத விலையில் !!!
(மூன்று கணனிகளை கொள்வனவு செய்வோருக்கு விசேட விலை)
Internet Browsing Center களுக்கும் அரச, தனியார் நிறுவனங்களுக்கும் உயர் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் மிகவும் உகந்தது !!!
System மட்டும் Rs.22500/= இன்றே முந்துங்கள் !!!
IBM கணனி என்றால் No - 1 தரம் என்பது உலகறிந்த விடயம் !!!
அநேக அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் விரும்பி பாவிக்கப்படுவது!!!
நீடித்த பாவனைக்காலம் மிகக்குறைந்த மின்சாரத்தில் இயங்க கூடியது !!!
விபரங்களுக்கு :- UNI - ICT CAMPUS
No - 83, Palaly Road,
Kantharmadam, Jaffna.
T.P No : - 021 - 321 - 6433 / 0777 110862

## மரண அறிவித்தல்



### கந்தையா சீவரத்தினம்

மயிலிட்டி வடக்கு, காங்கேசன் துறையைப் பிறப்பிடமாகவும், கரந்தன் மேற்கு, நீர்வேலியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சீவரத்தினம் நேற்று (27.01.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும், தங்கவேலு (ஊழியர், பலாலி ஆசிரியப் பயிற்சிக்கலாசாலை), பாலசிங்கம் (அஞ்சல் அலுவலகம், காங்கேசன்துறை), மோகன் (அஞ்சல் அலுவலகம், காங்கேசன்துறை), தவமணிதேவி, ஹேமலதா, ஜெகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் நாகலட்சுமி, சிவாஜினி, சாமினி, வெற்றிவேலு ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.01.2011) வெள்ளிக்கிழமை மு.ப 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோப்பாய் இளங்காடு மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரந்தன் மேற்கு,
நீர்வேலி.
(சி/109999)
தகவல்:
குடும்பத்தினர்.

## அ'புர தாக்குதலில் மரணமான கைதியின் சடலம் அநாதரவாக

கொழும்பு,ஜன.28

அநுராதபுர சிறையில் மேற் கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்த கைதியின் சடலத்தைப் பொறுப்பேற்க அவர்களது உறவினர்களும் இது வரை அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் சவச்சாலைக்கு வரவில்லையென வைத் தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இரத்தினபுரி பண்டார நாயக்க மாவத்தையை மஞ்சுல ரோஹித ஹப்பு ஆராச்சி என்ற கைதியே துப்பாக்கிப் பிரயோகத்தில் பலத்த காயங்களுக்கு இலக்காகிப் பின்னர் மரணமானார்.

மரண விசாரணையை நடத்திய அநுராதபுரம் பிரதம நீதிவான் செல்வி தர்ஷிகா விமலசிறி சடலத்தை மரணப் பரிசோதனைக்கு உட்படுத்தி நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு வைத்தியசாலையின் சட்ட வைத் திய அதிகாரிக்கு உத்திரவிட்டிருந்தார்.

(ஜ-5)

## நீங்காத நினைவலைகள்

07ஆம் ஆண்டு 25ஆம் ஆண்டு 02ஆம் ஆண்டு





அமரர் நாகராஜா கந்தசாமி
தோற்றம் 20.08.1930 மறைவு 13.07.2004

அமரர் பரமேஸ்வரி கந்தசாமி
தோற்றம் 06.01.1934 மறைவு 17.03.1986

அமரர் மகேஸ்வரி

நாளெல்லாம் நலம் காத்த
பொன்னான மனம் கொண்ட
கண்ணான எம் தெய்வங்களே
உள்ளத்தில் உள்ளதெல்லாம்
உம்மையன்றி யாருமில்லை
எம் உள்ளமெங்கும் நீர் தானே
எம் உயிரோட்டம் நீர் தானே
மனமெல்லாம் உம் ஞானமே
நிலைக்கும் நாளுமே.....

ஒரு நாளும் மறவோம்
உமை நாளும் தொழுவோம்
மெய்ஞான அருள் தந்த குருவே
தெய்வத்தின் தெய்வமும் நீரே - உம்
மலரடியில் நாம்

சரணம் சரணம்

3ஆம் ஒழுங்கை, கலாசாலை வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

## 16ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
சுப்பிரமணியம் குமாரசாமி
(குட்டி)

இதயம் நிறைந்த தலைவனாய்
உதயம் தந்த தந்தையாய்
பாசத்துடன் எம்மை வளர்த்து
பண்புடன் வாழ வழிகாட்டி
பதினாறு ஆண்டுகள் சென்றாலும்
ஆறவில்லை எம் துயரம்
நித்தமும் உங்கள் நினைவுகள்
நிழலெனத் தொடர்ந்து வரும்.

அன்னை மடியில்
18.12.1957

அம்பாளின் அடியில்
26.01.1995

அம்மன் கோயிலடி,
கச்சாய் தெற்கு, கொடிகாமம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜயகலா எம்.பி. என்னை மிரட்டினார் தமிழரசுக் கட்சி வேட்பாளர் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜன. 28

தமிழரசுக் கட்சியின் சார்பில் காரை நகர் பிரதேச சபைக்குப் போட்டியிடும் வேட்பாளரான வி.ஆனைமுகன், தான் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரனால் கடுமையாக மிரட்டப்பட்டதாக நேற்றிரவு 'உதயனு'க்குத் தெரிவித்தார். தமிழரசுக் கட்சியின் சார்பில் தேர்தலில் போட்டியிடக் கூடாது என விஜயகலா மகேஸ்வரன் தன்னை மிரட்டியதாக அவர் கூறினார்.

எனினும் தான் அவரை மிரட்டவில்லை எனவும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ் வரனின் சுவரொட்டியின் மேல் ஒட்டப்பட்டிருந்த தமிழரசுக் கட்சியின் ஆதரவுச் சுவர் ஒட்டிகளையே ஆனைமுகனை அழைத்து வந்து அகற்ற வைத்ததாக விஜயகலா மகேஸ்வரன் கூறினார்.

இந்தச் சம்பவம் குறித்து தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் ஆனைமுகன் மேலும் கூறுகையில் இன்று (நேற்று) மாலை 4 மணியளவில் எனது கையடக்கத் தொலைபேசிக்கு அழைப்பை மேற்கொண்ட விஜயகலா மகேஸ்வரன் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பைப் பற்றி கடுமையாக விமர்சித்துப் பேசியதுடன் தமிழரசுக் கட்சியின் சார்பில் காரை நகரில் எவரும் தேர்தலில் போட்டியிடக் கூடாது என மிரட்டினார். பின்னர் மாலை 6 மணியளவில் நான் நின்ற இடத்துக்கு வந்த அவர் என்னை கடுமையாக எச்சரித்ததுடன் மகேஸ்வரனின் சுவரொட்டி மேல் ஒட்டப்பட் டிருந்த தமிழரசுக் கட்சியின் ஆதரவு சுவ ரொட் டிகள் என்னைக் கொண்டு அகற்றினார்.

இது மகேஸ் வரனின் கோட்டை எனவும் கடும் தொனியில் கூறினார் - என்று தெரிவித்தார்.

இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் விஜய கலா மகேஸ்வரனிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது,

நான் அவரை மிரட்ட் வில்லை. மகேஸ்வரனின் சுவரொட்டிகளின் மேல் ஒட்டப் பட்டிருந்த தமிழரசுக் கட்சி ஆதரவு சுவரொட்டிகளையே அவரை அழைத்து வந்து அகற்றச் செய்தேன். அவரை எச்சரிக் கும் வகையில் நான் எதுவும் கூறவில்லை. அதில் உண்மையில்லை.உதயன் பத்திரிகை சொன்னால் யாழ்ப்பாண மக்கள் கேட்பார்கள் என்றில்லை - என்றார். (த)

## இளம் பெண் மாயம்

கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் முதல் இளம்பெண்ணொருவர் காணாமற் போயுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

காணாமற்போயுள்ள பெண் கிளிநொச்சியின் நாச்சிக்குடா பிரதேசத்தைச் சோந்தவர் என்று தெரிய வந்துள்ளது. அத்துடன், அவர் ஒரு குழந்தையின் தாய் என்றும் தெரிய வருகின்றது.

## 5 அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபைக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி, ஐ.தே.கட்சி, ஜே.வி.பி ஆகியனவும் - போட் டியிடுகின்றன.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் மூன்று மனுக்களும் தமிழரசுக் கட்சியின் இரண்டு மனுக்களும் ஐ.தே.கட்சியின் ஒரு மனுவும் நவசமாஜக் கட்சியின் ஒரு மனுவும் நிராகரிக் கப்பட்டன. (ஐ-9-14)

## கண்ணிவெடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெல்லிப்பழை, உடுவில், கோப்பாய், சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த 12 கிராம சேவகர் பிரிவுகளே இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளன.

ஜே - 150 மாதகல் கிழக்கு, ஜே- 154 மாரிசன் கூடல், ஜே- 155 இளவாலை, ஜே-208 புன்னாலைக்கட்டுவன் வடக்கு, ஜே-228, தெல்லிப்பளை ஜே-238 கட்டுவன், ஜே.-239 கட்டுவன் மேற்கு, ஜே-242 குரும்பசிட்டி, ஜே-243 குரும்பசிட்டி கிழக்கு, ஜே-244- வசாவிளான் கிழக்கு, ஜே- 281 - பத்தமேனி, ஜே- 283 இடைக்காடு, ஜே-284 வளலாய், ஜே-287 அச்சுவேலி மேற்கு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளிலேயே கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன - என்றார். (த-சி)

## தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொடுத்துள்ள தமிழ்நாட்டுப் பிராந்திய அதிகாரிகள், சமூக சேவையாளர்கள் போன்றோரையும் சந்திப்பதற்கு உத்தேசித்துள்ளார். ஜயலத் தனது தமிழ் நாடு விஜயத்தின் பின்னர் அங்குள்ள இலங்கை அகதிகள் தொடர்பான நீண்ட விளக்கங்களுடனான அறிக்கையொன்றையும் ஐக்கிய தேசியக் கட்சியிடம் சமர்ப்பிப்பார்.

மேலும் யுத்தம் முடிவடைந்தமையால் நாடு திரும்ப ஆவலாய் உள்ள இலங்கை அகதிகளின் எண்ணிக்கை, அவர்களது எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் அதற்கான நிவாரண நடவடிக்கைகள் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு பற்றியும் ஆராய விருப்பது இவ்விஜயத்தின் இன்னுமொரு நோக்கமாகும்.

தற்போது தென்னிந்தியாவில் நடைமுறையிலுள்ள தனியார் வைத்திய கல்லூரிகள் பற்றியும், புதிய விடயங்கள் பற்றியும் விசாரித்து அறியவுள்ளார்.

உலகில் அதிக காலம் ஒளிபரப்பாகிவரும் சுகாதார வைத்திய நிகழ்ச்சிக்காகத் தனக்குக் கிடைத்த கின்னஸ் சாதனை பற்றி தமிழ்நாடு பல்கலைக்கழக அதிகாரிகள், வைத்திய நிபுணர்கள் போன்றோரிடம் கலந்துரையாடவும் இவ் விஜயத்தைப் பயன்படுத்துவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## முல்லைத்தீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் , ஜே.வி.பி ஆகியன கரை துரைப்பற்று பிரதேச சபைக் கும் நவசமாஜக்கட்சி புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கும் சமர்ப்பித்த வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

இளவன் ஜெயந்தி தலைமையில் சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீரங்கா தலைமையிலான பிரஜைக்குழு துணுக்காய் பிரதேச சபைக்குச் சமர்ப்பித்த வேட்புமனுவும் நிராகரிக்கப்பட்டது. (த-ஐ)

## 2002 போன்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலில் போட்டியிடுவதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் நாடு முழுவதும் மிகவும் திறமையான வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர்.

2002 இல் இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நாம் 97சதவீத வெற்றியைப் பெற்றோம். அவ்வாறான தொரு பெரும் வெற்றியை நாம் இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் பெறுவோம். மக்கள் மத்தியில் நல்ல மாற்றம் ஏற்பட்டுள்ளது. அரசின் மீது அவர்கள் அதிருப்தியடைந்துள்ளனர். அவர்கள் ஐ.தே.கவை ஆதரிக்கத் தீர்மானித்துள்ளனர்.

யுத்தத்தின் பின்னர் நல்ல சூழல் ஏற்படும்; சமாதானம் ஏற்படும்; பொருள்களின் விலைகள் குறையும்; ஜனநாயகம் மலரும் என்று மக்கள் எதிர்பார்த்தனர். அது நடக்கவில்லை. அதனால் மக்கள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

பொருள்களின் விலைகள் அதிகரித்துக்கொண்டு போகுதே தவிர குறைவடையவில்லை. அமெரிக்கா மற்றும் பிரித்தானியா போன்ற நாடுகளில் உள்ளதைப் பார்க்கிலும் இங்கு பொருள்களின் விலைகள் அதிகம். மக்கள் மூன்று வேளையும் உணவு உண்ண முடியாத நிலையில் உள்ளனர்.

அதிகளவு நகைகளை அடகுவைத்த ஆண்டாக 2010ஆம் ஆண்டு உள்ளது. 2011 இல் அது அதிகரிக்கும். அரச நிறுவனங்களில் ஏற்படும் நட்டத்தைப் போக்குவதற்காக பொருட்கள் மீது வரி சுமத்தப்படுவதாலேயே பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்படுகின்றன.

வெள்ளைவான் கலாசாரம் மற்றும் காணாமல் போதல் போன்றவை இன்னும் நிறுத்தப்படவில்லை. கொழும்பில் வீடுகள் உடைக்கும் நடவடிக்கை துரிதமாக முன்னெடுக்கப்படுகின்றது. இந்தச் செயற்பாட்டின் ஊடாக கொழும்பை அபிவிருத்தி செய்ய முடியாது.

இதனால் இத் தேர்தலில் மக்கள் அரசுக்கு நல்ல பாடத்தைப் புகட்டுவர். இத் தேர்தலில் அரசைக் கவிழ்க்க முடியாது. ஆனால் [illegible] தியை இத் தே[illegible] முடியும் - என்றார். (சி)

## தமிழரசுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோர் நேற்றுமுன்தினம் இந்த வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தனர்.

ஒரு மனு சமாதான நீதிவானின் கையொப்பம் இல்லை என்பதாலும் மற்றைய மனு குழுத்தலைவரின் கையொப்பம் இல்லை என்பதாலும் நிராகரிக்கப்பட்டதாக தேர்தல் ஆணையாளர் அறிவித்தார்.

இதையடுத்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் இணைந்துள்ள தமிழர் விடுதலைக்கூட்டணியின் பெயரில் வேட்புமனுத் தாக்கல் நேற்றுச் செய்யப்பட்டது. அந்த மனுக்கள் நேற்று ஏற்றுக்கொள்ளப்பட்டன. (ஐ-9-14)

## போரினால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நியூயோர்க்கில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இடம்பெயர்ந்து மீள்குடியமர்த்தப்பட்டுள்ள மக்களுக்கு இன்னமும் பல்வேறு தேவைகள் உள்ளன. அவற்றைப் பூர்த்தி செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. யுத்தத்தால் இடம்பெயர்ந்து தற்போதும் நலன்புரி நிலையங்களில் சிலர் தங்கவைக்கப்பட்டுள்ளனர். யுத்தம் இடம்பெற்ற பகுதிகளில் கண்ணிவெடிகள் அகற்றும் பணிகள் தொடர்ந்து இடம்பெறுகின்றன. அப்பணிகள் விரைவுபடுத்தப்பட்டு அவர்கள் இவ்வருடம் நடுப்பகுதிக்குள் மீள்குடியேற்றப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்ற நடவடிக்கைகளுக்கு இலங்கை அரசு பாரியளவு பங்களிப்பை வழங்கியது. இருந்தபோதிலும், மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளான உணவு, குடிதண்ணீர் மற்றும் கழிவகற்றல் வசதிகள் மட்டுப்படுத்தப்பட்டதாகவே செய்துகொடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன், வடக்கின் எதிர்காலம் மக்களுக்கு குறித்த முதலீடுகளாக அமையும் என்பதோடு, தொழில்சார் அறிவு, சமூக அபிவிருத்தி, வீடமைப்பு என்பன அவர்களது எதிர்கால வாழ்வைக் கொண்டுசெல்ல உதவியளிக்கும்.

இதேவேளை, இலங்கை விஜயத்தின் போது ஐ.நா. சபையின் செயலாளர் நாயகம் பான் கீ-மூனின் நிபுணர் குழு தொடர்பாக இலங்கையுடன் பேச்சு நடத்தவில்லை. நிபுணர் குழுவின் அபிலாஷைகளையும், நோக்கங் களையும் நிறைவு செய்வதற்கு நான் இலங்கை செல்லவில்லை- இப்படி அவர் தெரிவித்துள்ளார். (ஒ-சி)

## யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வதற்கான இறுதித் திகதி நேற்றாகும். நண்பகல் 12.30 மணியுடன் வேட்புமனு தாக்கல் செய்வதற்கான காலக்கெடு முடிவடைந்தது. அதற்குச் சற்று முன்பதாக பிரதான கட்சிகள் நேற்றுத் தமது வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தன.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் ஈ.பி.டி.பியினர் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தனர். இணக்க அரசியலை இழக்க விரும்பாததால் வெற்றிலைச் சின்னத்தில் தாம் போட்டியிடப் போகிறார்கள் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருந்ததை அடுத்து, தமது சொந்தச் சின்னமான வீணையைக் கைவிட்டு ஆளும் தரப்பின் பெயரில் ஈ.பி.டி.பியினர் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள 16 உள்ளூராட்சி சபைகளுக்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 3 சபைகளுக்கும் அவர்கள் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தனர். அவற்றுடன் சேர்த்து மொத்தம் 63 வேட்பு மனுக்கள் யாழ். தேர்தல் மாவட்டத்தில் உள்ள சபைகளுக்காகத் தாக்கல் செய்யப்பட்டன.

இவற்றில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் 19 மனுக்களும் நவ சம சமாஜக் கட்சியின் ஒரு மனுவுமாக 20 சபைகளுக்கான வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன என யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் இமெல்டா சுகுமார் நேற்றுப் பிற்பகல் அறிவித்தார்.

### நிராகரிப்புக்கான காரணம்

தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தில் ஆளும் கட்சியின் பெயர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால், ஈ.பி.டி.பியினர் நேற்றுத் தாக்கல் செய்த வேட்பு மனுவில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு என்றே கட்சியின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தப் பெயர்க் குழப்பம் குறித்து ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டதை அடுத்து ஆளும் தரப்பின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

இலங்கைத் தமிழரசுக்கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, ஐக்கிய சோஷலிச முன்னணி ஆகியவை யாழ்ப்பாணத்தில் உள்ள 16 சபைகளிலும் தாக்கல் செய்த வேட்பு மனுக்களும் பருத்தித்துறைப் பிரதேச சபைக்கு சுயேச்சைக் குழு ஒன்று தாக்கல் செய்த வேட்பு மனுவும் பருத்தித்துறை நகரசபைக்கு இரு சுயேச்சைக் குழுக்கள் தாக்கல் செய்த வேட்பு மனுக்களும் வல்வெட்டித்துறை நகரசபைக்கு ஒரு சுயேச்சைக் குழு தாக்கல் செய்த வேட்பு மனுவும் வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபைகளுக்கு இரு சுயேச்சைக் குழுக்கள் தாக்கல் செய்த மனுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

இதேவேளை - கிளிநொச்சியின் மூன்று பிரதேசசபைகளுக்கும் 15 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அவற்றில் 7 நிராகரிக்கப்பட்டுள்ளன.

இலங்கைத் தமிழரசுக்கட்சி 2 பிரதேசசபைகளிலும், ஐக்கிய தேசியக் கட்சி ஒரு பிரதேசசபையிலும், நவசம சமாஜக் கட்சி ஒரு பிரதேசசபையிலும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 3 பிரதேசசபைகளிலும் தாக்கல் செய்த வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன என்றும் தெரிவத்தாட்சி அலுவலர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார். (உ-ஐ-9-14-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகர் பிரகீத்தை தேடிக் கண்டறிய ஐ.நா.சபை தலையிட வேண்டும்

கொழும்பு, ஜன.28

காணாமல் போயுள்ள ஊடகவியலாளர் பிரகீத் ஹெக்நேலியகொட, தேடி கண்டறிவதற்காக ஐக்கிய நாடுகள் அமைப்பு தலையிட வேண்டும் என ஊடகவியலாளர்களின் சர்வதேச கூட்டமைப்பு (ஐ.எவ்.ஜே.) கோரிக்கை விடுத்துள்ளது.

ஹெக்நேலியகொடவின் மனைவி சந்தியா ஹெக்நேலியகொட, அண்மையில் இலங்கையில் உள்ள ஐக்கிய நாடுகள் அமைப்பின் அலுவலகத்திற்குச் சென்று, தனது கணவரைக் கண்டறிய ஐக்கிய நாடுகள் அமைப்பு தலையிட வேண்டும் எனக் கோரி மகஜர் ஒன்றை இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி நீல் பூனேயிடம் கையளித்திருந்தார்.

இதற்கு முழுமையான ஒத்துழைப்புகளை வழங்கும் நோக்கில், ஐ.எவ்.ஜே. இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது. (சி)

## மரண அறிவித்தல்



### கந்தையா பொன்னுத்துரை

(அராலி தெற்கு, வட்டுக்கோட்டை)

இணுவில் தெற்கு, இணுவிலைப் பிறப்பிடமாகவும், அராலியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பொன்னுத்துரை (25.01.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்காளான கந்தையா - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், நாகேஸ்வரியின் பாசமிகு கணவரும், தவமலர் (ஆசிரியை, யா/வட்டு இந்துக் கல்லூரி), ஜெயமலர் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான தியாகராசா, சரஸ்வதி மற்றும் தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ஜெயகணேசன், ஜெயக்குமார், உமாமகேஸ்வரன், அமிழ்தினி, பார்த்தீபன், பராசக்தி (ஜேர்மனி), புஸ்பலீலா, ஞானேஸ்வரன் (ஜேர்மனி), சண்முகேஸ்வரன், இராஜேஸ்வரன், விக்கினேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பெரிய தந்தையும், காலஞ்சென்ற மகேந்திரராசா மற்றும் இந்திராணி, கயிலாசபதி, அற்புதராணி, பேரின்பநாயகம் (கனடா), புஸ்பராணி (சுவிஸ்) ஆகியோரின் சிறிய தந்தையும் விஜயகுமார் (யாழ். பல்கலைக்கழகம்), பரணீகரன் (சுவிஸ்), முகுந்தன், குணாளன், நந்தினி, சாந்தி, செந்தினி, பாலசுப்பிரமணியம், ஜெகதீஸ்வரன், வசந்தா, ஜெகதா, யசோதா, தனபாலசிங்கம், காலஞ்சென்ற கதிர்காமநாதன், மற்றும் சாந்தமதி, ரகுதேவ் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் நுஷாலியின் செல்லப்பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.01.2011) வெள்ளிக்கிழமை பி.ப 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூனாவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை

(109990)

தகவல்:
பிள்ளைகள்

# மனோ - சதாசிவம் தலைமையில் மலையகத் தமிழ்க் கூட்டமைப்பு

கொழும்பு, ஜன. 28

நுவரெலியா மாவட்டத்தின் ஐந்து பிரதேசசபைகளிலும், இரண்டு நகர சபைகளிலும் போட்டியிடும் முகமாக மனோகணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணியும், எஸ்.சதாசிவம் தலைமையிலான இலங்கை ஜனநாயக ஐக்கிய முன்னணியும் இணைந்து மலையகத் தமிழ்க் கூட்டமைப்பை உருவாக்கியுள்ளன.

இதுகுறித்து ஜனநாயக மக்கள் முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருப்பவை வருமாறு -

அம்பகமுவ பிரதேச சபை, ஹங்குரன்கெத்த பிரதேச சபை, ஹற்றன்-டிக்கோய நகரசபை, தலவாக்கலை, லிந்துல்லை நகரசபை ஆகியவற்றில் ஏணிச் சின்னத்திலும், நுவரெலியா பிரதேச சபை, கொத்மலை பிரதேச சபை, வலப்பனை பிரதேச சபை ஆகியவற்றில் மீன் சின்னத்திலும் இந்த மலையகத் தமிழ்க் கூட்டமைப்பு போட்டியிடுமென இக்கூட்டமைப்பின் தலைவர்களான மனோ கணேசனும், எஸ்.சதாசிவமும் நுவரெலியாவிலிருந்து தெரிவித்துள்ளனர்.

நுவரெலியா மாவட்ட செயலகத்தில் இந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்பு மனுக்களை ஜனநாயக மக்கள் முன்னணி பொதுச்செயலாளர் கலாநிதி நல்லையா குமரகுருபரனும், இலங்கை ஜனநாயக ஐக்கிய முன்னணி பொதுச் செயலாளர் எஸ்.சதாசிவமும் கையளித்தனர்.

இந்தக் கூட்டமைப்பில் நவசமசமாஜய கட்சி சார்பாக ஒரு வேட்பாளரும் அம்பகமுவ பிரதேச சபைக்காக போட்டியிடுகின்றார்.

-இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## தமிழ்த்தின விழா

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்குஇடையிலான வலய மட்ட தமிழ்த்தின விழா நாளை காலை 8 மணி தொடக்கம் பி.ப. ஒரு மணி வரை சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைப் பேராசிரியர் த.சிவலிங்கராஜாவும் சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா.சத்தியகாந்தனும் கலந்துகொள்வார்.


**தவறிவிட்டது**

தர்மகிணற்றடி மூளாய் என்னும் முகவரியைச் சேர்ந்த நவரத்தினம் புலேந்திரன் என்பவரது தே.அ.அ (670102092V), சாரதி அனுமதிப் பத்திரம் என்பன பேர்சுடன் ஆனைக்கோட்டைக்கும் நவாலிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்.

தொ.பே:-0771102864

**உயர்கல்வி கற்போருக்கான ஆங்கில வகுப்புகள்**

By:- S.P.VAGEESON (B.com)
சனி, ஞாயிறு
பி.ப 4.00

NEW SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA
T.P:- 0776271488

**THE SCIENCE CORNER**
CLOCK TOWER LANE, JAFFNA
BIOLOGY - 2013 A/L
உயிரின் இரசாயன கல அடிப்படை UNIT - 2

| பிரிவு - I | பிரிவு - II |
|---|---|
| SAT, SUN 11.30 - 1.00 pm | TUE - THU 4.30 - 5.30 am |

ஆரம்பம்:- 29/01/2011
By:- S. யோன்திவாகரன்

**CTC**

பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
*பிரதியேக விஞ்ஞான வகுப்பு*
(மாலை நேரம்)
தரம் 9, 10, 11
நம்பர் I விஞ்ஞான ஆசிரியர்
இரா. செல்வவடிவேல்
ஆரம்பம் 02.02.2011
புதன் - மாலை 4.00 மணி
நிர்வாகி

**வீடு வாடகைக்குத் தேவை**

3 பேர் கொண்ட கௌரவமான சிறிய குடும்பத்துக்கு யாழ்.நகரை அண்டிய பிரதேசத்தில்உரிய வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை.

தொ.பே:-0770489398, 0771397969.

**கடையும், அறையும் வாடகைக்குண்டு**

144, மானிப்பாய் வீதி, பள்ளிவாசலுக்கு முன்பாக சகல வியாபாரமும் செய்யக் கூடிய கடை, ஹொட்டல் நடத்தக்கூடிய வசதியும் உண்டு. உடனடியாக வாடகைக்குண்டு. தொ.பே:- 0772915826

**THE SCIENCE CORNER**
CLOCK TOWER LANE, JAFFNA
PHYSICS- K. SELVAN B.Sc.(Hons)
2012 A/L
அலைகளும் அலைவுகளும்
ஆரம்பம்:- 29/01/2011

| பிரிவு - I | பிரிவு - II |
|---|---|
| Sat, Sun 7.30 - 9.30 A.M | Sat, Sun 4.30 -5.30 P.M |

**THE SCIENCE CORNER**
CLOCK TOWER LANE, JAFFNA
ENGLISH MEDIUM
COM. MATHS / 2013 A/L

| BATCH - I | BATCH - II |
|---|---|
| Sat, Sun 04.30 - 5.30 P.M | TUE - THU 6.30 - 7.30 A.M |

By:- SIVAKARAN (B.Sc)

**THE SCIENCE CORNER**
CLOCK TOWER LANE, JAFFNA
PHYSICS- K. SELVAN BSc (Hons)
2013 A/L

| பிரிவு - I | பிரிவு - II |
|---|---|
| Sat, Sun 9.00 - 10.00 A.M | Sat, Sun 1.00 - 2.00P.M |

**THE SCIENCE CORNER**
CLOCK TOWER LANE, JAFFNA
இணை. கணிதம் - 2013 A/L

| பிரிவு - I | பிரிவு - II |
|---|---|
| Sat, Sun 11.30 - 1.00 P.M | Sat, Sun 6.30 - 7.30 A.M |

By:- SIVAKARAN (B.Sc.)

**கற்சுமி வெளியீடு**

முன்பள்ளி மற்றும் தரம் 1, 2, 3, 4, 5 மாணவர்களுக்குரிய
அதிரடி மருதன் அம்மா அன்னை தாய் அறிவு தேடல்
ஜனவரி, பெப்பரவரி மாத இதழ்கள்
வெளிவந்து விட்டன
★ விண்ணப்பத்தைப் பெற்றுக்கொண்ட பாடசாலைகள் விரைவில் அனுப்பிவைக்கவும்.
*'உங்கள் பிள்ளையின் ஆற்றலை மேம்படுத்தும்"*
கற்சுமி 166, நாவலர் வீதி, யாழ் 0212227442/ 0718474325

**INFORMATION TECHNOLOGY PARK**
Jaffna, Sri Lanka.
Under the purview of the
Ministry of Technology and Research
MPCS Building, 127, K.K.S.Road, Jaffna, Sri Lanka.
Office: 021 222 3641 Fax : 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில் நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- *Online Class*
  - *Diploma in PC Application & Office Management (MS Office syllabus included)*
- *Workshop Classes*
  - *Internet & E-Mail*
  - *Adobe Photoshop*
- *Diploma Classes*
  - *Diploma in MS Office*
  - *Diploma in DTP*
- *Certificate Courses*
  - *MS Word, MS Excel*
  - *MS Access, Visual Basic*
  - *CorelDRAW, PageMaker*

சகல கற்கை நெறிகளுக்குமான பதிவுக் கட்டணம் 250/=

விண்ணப்பப்படிவங்களுக்கும், பதிவுகளுக்கும் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

வாரநாள் வகுப்புக்கள் ஆரம்பம் : 07/02/2011
வாரஇறுதி வகுப்புக்கள் ஆரம்பம் : 05/02/2011

- Centre for Information Technology -
- Executive Officer -

**CONSULATE GENERAL OF INDIA JAFFNA**
Presents
Nalacharitham
(Second Day)
K.KATHAKALI Performance
by
*P.S.V.Natyasangam*
Kottakal, Kerala, India
On
Sunday 30th January 2011 6.30 p.m.
At Jaffna University Auditorium, Jaffna
Entry :- Free
Supported by the Ministry of Culture and Arts, Government of Sri Lanka


**யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்**

இல. 559, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## பகிரங்க அறிவித்தல்



எமது சங்கத்தில் கணக்காளராகப் பணியாற்றிய படத்தில் காணப்படுகின்ற கோண்டாவில் கிழக்கு, செல்வநாயகம் வீதியைச் சேர்ந்த நடராஜா ரவீந்திரராஜன் என்பவர் 26.01.2011 தொடக்கம் எமது சங்கத்தில் பணியில் இல்லை. அன்று தொடக்கம் சங்கம் தொடர்பாக அவருடன் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்களுக்கோ அல்லது வேறு நடவடிக்கைகளுக்கோ எமது சங்கம் பொறுப்பேற்க மாட்டாது என்பதனை எமது சங்கத்துடன் தொடர்புடைய அனைவருக்கும் பகிரங்கமாகத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நெறியாளர் குழு கட்டளைப் படி

தலைவர். (சி/575259) செயலாளர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.01.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org